www.tamilarangam.net

සරිනිහර්
'SARINIHAR

# சரிநிகர்


சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 115 பெப்.6 – பெப்.19 1997 விலை – ரூபா. 10.00

49


சொல்லுங்கள் அப்பா சுதந்திரநாள் என்றிவர்கள்
சொல்வதெல்லாம் என்னவென்று சொல்லி – பிள்ளைமகள்
கேட்டாள் என்னிடத்தில்! கெட்டதையோ குடியென்று
போட்டேன் அவ்வாயிலொரு பூட்டு!


– ஈழமோகம்



## வட கிழக்கு இணைப்புக்கு அரசு தயாரா?

### முஸ்லிம்களின் தனி மாகாணத்துக்கு தமிழ் அமைப்புக்கள் தயாரா?





## வெஞ்சர் தோட்டத்தில் நடந்தது என்ன?

ராவோ:
ஒப்புதல் வாக்குமூலம்!

மலையக மக்கள் வகைப்படுத்தல்
ஒரு கண்ணோட்டம்!

அரச பயங்கரவாதமும்
அப்பாவி பொதுமக்களும்!

சிதைந்த நம்பிக்கை!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




சரிநிகர்

இருவாரங்களுக்கொருமுறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே" - பாரதி

ஆசிரியர் குழு
ச.பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி.செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

வடிவமைப்பு
ஏ.எம் றஷ்மி

வெளியிடுபவர்
ச.பாலகிருஷ்ணன்
18/2,அலோசாலை,
கொழும்பு-03

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்
334, காலிவீதி,
இரத்மலானை.

ஆண்டுச் சந்தா விபரம்
இலங்கை- ரூபா 300
வெளிநாடு- U.S. $ 50
(தபாற்செலவுட்பட)

காசுக்கட்டளை/காசோலை யாவும் MIRJE என்ற பெயருக்கு எழுதப்படல் வேண்டும்.

எல்லாத் தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
சரிநிகர்
04,ஜெயரட்ண வழி
திம்பிரிகஸ்யாய
கொழும்பு - 05

தொலைபேசி: 593615
584380
தொலைமடல்: 594229

முன்னைய பிரதிகள் வேண்டுவோர் எழுதுக. கைவசம் உள்ள பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

பிரசுரத்திற்கென அனுப்பப்படும் படைப்புக்கள் திருப்பி அனுபபபபடமாடடாது.


## 30 கோடி?

கொழும்பிலிருந்து வடக்கிற்கு பிரயாணம் செய்வதற்காக வாடகைக்கு அமர்த்தப்பட்ட 'லைன் எயார்' விமானங்களுக்கான வாடகைப்பணமாக கடந்த ஆண்டில் மட்டும் முதல் எட்டு மாதங்களில் ரூபா 30 கோடி செலுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. உக்ரேனிய தேசிய விமானிகளால் ஓட்டப்படும் அன்ரனோவ் - 26 சிறிய விமானம் ஒன்று ஒரு தடவை வடக்கிற்கு சென்று வர செலுத்தப்பட்ட தொகை 1000 அமெரிக்க டொலராகும். அதாவது இலங்கை ரூபா 56,000 ஆகும். 'லைன் எயார்' நிறுவனத்தினரிடமிருந்து பெறப்பட்ட 4 விமானங்கள் 1996ம் ஆண்டு வடக்கிற்கு 5304 தடவைகள் முதல் எட்டு மாதங்களில் மட்டும் பறந்துள்ளன. இதற்கான வாடகையாக செலுத்தப்பட்ட தொகை அமெரிக்க டொலர் ஐம்பத்திமூன்று இலட்சத்து நான்காயிரம் ஆகும். இத்தொகை இலங்கை ரூபாவில் 297 மில்லியன்களாகும்.

இதுபற்றி விசாரித்தபோது தெரிய வருவது என்னவென்றால் புலிகளின் தொடர்ச்சியான விமானங்கள் மீதான தாக்குதல்கள் காரணமாக விமானிகள் வடக்குக்குச் செல்ல மறுப்புத் தெரிவிப்பதே இவ்வாறு விமானங்களை வாடகைக்கு அமர்த்த வேண்டி ஏற்படுவதற்கு காரணமாகும் என்பதே.

*ராவய 19970202*

## போகிற போக்கு...

பொ.ஐ.மு. அரசாங்கம் பதவிக்கு வந்தபின் யுத்தத்தினால் இழக்கப்பட்ட விமானங்கள் மற்றும் கப்பல்களின் விபரங்களும் அவற்றின் பெறுமதிகளும் இங்கே தரப்படுகின்றன. இவற்றின் மொத்தப் பெறுமதி 200 கோடி இலங்கை ரூபாக்கள் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆயுதங்கள் மற்றும் தரைப்படை வாகன இழப்புக்கள் இங்கு தரப்படவில்லை.

**கடற்படைக்கு ஏற்பட்ட இழப்புக்கள்.**
17/08/1994 முதல் 16/08/1996வரை

| படகின் பெயர் அல்லது குறியீட்டு இலக்கம் | பெறுமதி |
|---|---|
| 01. பி.110 | 4,195,261,00 |
| 02. பி. 143 | 1,512,753,00 |
| 03. பி. 118 | 4,420,000,00 |
| 04. பி. 116 | 4,195,261,00 |
| 05. பி. 119 | 4,195,261,00 |
| 06. பி. 115 | 4,195,261,00 |
| 07. பி. 121 | 4,195,261,00 |
| 08. பி. 464 | 107,096,500,00 |
| 09. பி. 114 | 4,195,261,00 |
| 10. பி. 117 | 4,195,261,00 |
| 11. பி. 120 | 2,200,000,00 |
| 12. பி. 122 | 2,200,000,00 |
| 13. பி. 123 | 2,200,000,00 |
| 14. ஏ. 516 | 10,000,000,00 |
| 15. சாகரவர்தன | 34,333,185,00 |
| 16. சூரயா | 25,000,000,00 |
| 17. ரணவிரு | 203,050,000,00 |
| 18. எடிதர | 27,500,000,00 |
| 19. பி. 463 | 107,096,500,00 |
| 20. பி. 456 | 98,676,906,00 |
| 21. பி. 512 | 87,734,397,00 |
| 22. பி. 458 | 98,676,906,00 |
| 23. பி. 457 | 98,676,906,00 |
| 24. பி.244 | 4,195,261,00 |
| 25. பி. 161 | 60,490,000,00 |
| 26. பி. 232 | 475,000,00 |
| 27. ரணவிரு | 203,050,000,00 |
| மொத்தம் | 1,207,951,141,00 |

**விமானப்படைக்கு ஏற்பட்ட இழப்புக்கள்**

| | | |
|---|---|---|
| அன்டனோவ் 32 | விமானம் 2 | 250 மில்லியன் |
| அவ்ரோ | விமானம் 2 | 70 மில்லியன் |
| புகாரா | விமானம் 1 | 85 மில்லியன் |
| வை - 8 | விமானம் 1 | 140 மில்லியன் |
| வை -12 | விமானம்1 | 110 மில்லியன் |
| கபீர் | விமானம் 1 | 150 மில்லியன் |
| ஹெலிகொப்ரர் | 3 | 90 மில்லியன் |
| மொத்தம் | | 895 மில்லியன் |

## யாழ்ப்பாணமும் வீடியோவும்!

யாழ்ப்பாணத்தில் இப்போது வீடியோ கலாசாரம் வளர்ந்துள்ளது. ஜெனரேட்டர் போட்டு வீடியோ படம் பார்ப்பது அதிகரித்துள்ளது. படையினரின் முகாம்களுக்கு அருகிலும் வீடுகளில் வீடியோ படங்கள் காண்பிக்கப்படுகின்றன. ஏன் மினித் திரையரங்குகளும் முளைக்க ஆரம்பித்துள்ளன.

கடந்த ஆண்டு வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் முடிவில் இலங்கையில் இரண்டாவது இடம் யாழ் மாவட்டம். அத்துலத்முதலி கல்வி அமைச்சராக இருந்த போது கொழும்பில் ஒரு பாடசாலை வைபவத்தின் போது 'வடக்கில் மின்சாரம் இல்லை. பாடசாலைகளில் வசதிகள் இல்லை. போர்ச்சூழலில் வடபகுதி பிள்ளைகள் கல்வியில் செலுத்தும் அக்கறை தெற்கில் இல்லை. உங்களுக்கு விஞ்ஞான கூட வசதிகள் போன்றவை இருந்தும் நீங்கள் படிப்பது இல்லை. இது கவலைக்குரிய விடயம்'' என்றார்.

அண்மையில் நகரில் ஒலிபெருக்கி மூலம் படையினர் படையினர் ஓர் அறிவிப்பை விடுத்தனர். அதில் வீணாக வீடியோ படம் பார்க்காமல் படித்து முன்னேறுங்கள் என்று குறிப்பிட்டனர்.

இந்த வீடியோ கலாசாரத்தால் சமுதாயம் அழிவுப்பாதையில் செல்லும் என்று புலிகள் தடை விதித்தனர். சிலருக்கு இது உழைப்பு. பக்கத்து வீட்டில் வீடியோ படம் எனறால் அயல் வீட்டுப் பிள்ளைகளும் போகிறார்கள். அவர்கள் அன்று இரவு நித்திரையில்லை மறுநாள் பாடசாலையும் இல்லை.

அதுமட்டுமல்ல வீடியோ கலாசாரத்தில் அப்பாவி மக்கள் உயிரிழக்கவும் நேரிடுகிறது. உடுப்பிட்டியில் சில நாட்களுக்கு முன்னர் வீடியோ படம் பார்த்து விட்டு ஊரடங்கையும் பொருட்படுத்தாமல் வீதியில் வந்த சிலர் மீது படையினர் மறைந்திருந்து சுட்டனர். இருவர் அவ்விடத்திலேயே உயிரிழந்தனர்.

தைப்பொங்கல் தினத்தன்று யாழ்ப்பாணம் குருநகரில் நள்ளிரவு வீடியோ படம் பார்த்து விட்டு வந்த இருவர் படையினரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிழந்தார். மற்றவர் காயமடைந்தார்.

*கரவையூரான்*

## தரகரும் பிரயாண அனுமதியும்!

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு கப்பல், விமானம் மூலம் பயணம் செய்யலாம். தற்போது சிவில் நிர்வாக அலுவலகத்தில் இதற்கான அனுமதி பெற வேண்டும். அதற்கு விண்ணப்பப் படிவம் ஒன்று நிரப்பிக் கொடுக்க வேண்டும்.

ஆனால் இந்த அலுவலகத்தில் தினமும் மோசடி நடைபெறுகிறது. காலை 5.30க்கு மக்கள் இங்கு வந்து கியூவில் நிற்பார்கள்.

தரகர்களின் தொல்லை ஒரு புறம். மாலை வரை கொளுத்தும் வெய்யிலில் நிற்பா. அருகில் கடைகளும் இல்லை.

இந்த அலுவலகத்தில் பணியாற்றும் பெண ஒருவர் சூரியகதிர் இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயராமல் யாழ் நகரில் தங்கினார். அதனால் அவருக்கு சிவில் நிர்வாக அலுவலகத்தில் வேலை வழங்கப்பட்டுள்ளது. அனுமதி பெற இவரைப்பிடிக்க சில தரகர்களின் உதவியை மக்கள் நாடுகின்றனர்.

உதாரணமாக 100இல் 150வரையான இலக்கம் உடையவர்களுக்கே அனுமதி வந்துள்ளது என அறிவிக்கப்படும். ஆனால் இவரின் உதவியை தரகர்களின் உதவியுடன் பெற்றால் 155வது இலக்கம் உடையவர் பயணம் செய்வார். அதற்கு பதிலாக 110வது இலக்கம் உடையவரின் பெயர் நீக்கப்பட்டுவிடும். அவர் அடுத்த கப்பலுக்கு செல்லலாம் என அறிவிக்கப்படும்.

ஈ.பி.டி.பி., புளொட் இயக்கத்தினர் நகரில் அலுவலகம் திறந்துள்ளனர். மக்களின் அன்றாட பிரச்சினைகளில் இந்தக்கொழும்பு பயணப் பிரச்சினையும் ஒன்றாகிவிட்டது. இந்தக்கட்சிகள் இதில் தலையிட்டு ஒழுங்காக கப்பல் - விமான அனுமதி வழங்கும் நடவடிக்கையை செயற்படுத்துவார்களா என்ற எதிர்பார்ப்பு மக்களிடம் நிலவுகிறது.

கொழும்புக்கு ஒரு அவசிய தேவைக்கு போவதற்கு மக்கள் மாதக்கணக்கில் காவல் கிடக்கின்றனர். சிவில் நிர்வாக அலுவலகம் முன்பு மக்கள் கர்ப்பிணிகள், பெண்கள், வயோதிபர்கள் படும் பாடுகளை சொல்ல முடியாது.

*மரியரசன்*

## உடைக்கப்படும் கடிதங்கள்!

யாழ்குடாநாட்டுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் தொடர்ந்தும் பாதுகாப்பு படையினரால் உடைக்கப்படுகின்றன. சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் புலிகளின் கட்டுப்பாட்டில் குடாநாடு இருந்தபோது கடிதங்கள் இவ்வாறு உடைக்கப்பட்டு வந்தன. அதில் பலருக்கு கடிதங்களுக்குள் படங்கள் வெளிநாட்டு காசோலைகள் வந்தன. அவை காணாமல் போயுள்ளன. சிலவற்றை தபால் ஊழியர்கள் திருடியதாகவும் செய்திகள் அப்போது வெளியாகின.

இப்போது குடாநாட்டில் சிவில் நிர்வாகம் நடப்பதாக புலிகளின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டதாக அரசு கூறுகிறது. அத்துடன் இந்த யுத்தம் புலிகளுக்கு எதரின யுத்தமே. தமிழர்களுக்கு எதிரான யுத்தமல்ல என்றும், அரசு கூறுகிறது.

தமிழர்களின் கடிதங்கள் ஏன் உடைக்கப்படுகின்றன குடாநாட்டு மக்களுக்கு வெளிநாடுகளில் உள்ள உறவினர்கள் கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்து அட்டைகளை இம்முறையும் வழமைபோல அனுப்பினர். அவற்றில் எதுவும் வைத்து அனுப்பியிருப்பர் என்ற சந்தேகத்தில் கடிதங்கள் உடைக்கப்படுகின்றன உள்ளே பணம்(டொலர்) இருக்கும் எனற சந்தேகம் உடைக்கப்படுவதற்கான ஒரு காரணமாக கூறப்படுகிறது.

காஷ்மீரில் முஸ்லிம் போராளிகளுக்கு எதிராக இந்திய இராணுவம் நடவடிக்கை எடுக்கிறது; முஸ்லிம்களின் கடிதங்கள் உடைக்கப்படுவதில்லை. இஸ்ரேலில் பலஸ்தீனர்களின் கடிதங்கள் உடைக்கப்படுவதில்லை. இப்படி பல நாடுகளில் இனப்போராட்டங்கள் நடைபெறுகின்றபோதிலும் சிறுபான்மையினருக்கு வரும் கடிதங்கள் உடைக்கப்படுவதேயில்லை. தென்னாபிரிக்காவிலும் இனவெறி அரசு கறுப்பர்களின் கடிதங்களை உடைக்கவில்லை.

இலங்கையில் பேரினவாத அரசு சிறுபான்மையினரின் உரிமைகளை வழங்க தீர்வுத்திட்டம், இனப்பிரச்சினைத் தீர்வு என்று கூறுகிறது. ஆனால் தமிழர்களின் கடிதங்களை உடைப்பது தொடர்கிறது. தமிழர்களின் கடிதங்களுக்குள்ளும் புலிகள் இருக்கிறார்களா அல்லது குண்டு இருக்கிறதா? ஏன்தான் உடைத்துப் பார்கிறார்கள்.

*மரிவேந்தன்*

## தவறு

இதழ் 105இல் வெளிவந்த சுரேஷ் சுப்பிரமணியத்தின் ரொறன்ரோ 2002 என்று சிறுகதை தேடல் சஞ்சிகையில் வெளியாகியது. நன்றி: தேடல் என்று குறிப்பிடுவது தவறுதலாக விடுபட்டு போயிற்று. இதழ் 109இல் 'தமிழினவாத முயற்சியா' என்ற தலைப்பில் வெளியான செய்தியில் கிரிஷாந்தி கொலைச் சம்பவத்தை புலிகளே செய்தனர் என்றும், இராணுவத்திற்கு எதிரான பிரச்சினையாக தவறான செய்தியைப் பரப்பி வருவதாகவும் ரூபவாஹினியில் கூறப்பட்டதாக உள்ளது. மேற்படி வாசகம் வெளியானது ரூபவாஹினியில் அல்ல. மேற்படி இரு தவறுகளுக்காகவும் வருந்துகிறோம்.

ஆ-ர்.


சண்முகதாசன்
நினைவுக் கூட்டம்
பெப்.7
மாலை 3.30க்கு
இடம்
கொழும்பு பொது நூலக
கேட்போர் கூடம்
ஏற்பாடு:
இலங்கை
கம்யூனிஸ்ட் கட்சி
(மாவோ பிரிவு)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒப்புதல் வாக்குமூலம்!

சென்ற இதழில் இந்திய வெளிநாட்டமைச்சர் குஜ்ராலின் வருகை தொடர்பாக எழுதிய போது வேறு சில விடயங்களையும் தொட்டுக் காட்டியிருக்கலாமோ என்று தோன்றியது. குறிப்பாக இந்திய - இலங்கை ஒப்பந்தம் தமிழ் மக்களது அரசியல் உரிமைக்கான போராட்டத்தில் ஏற்படுத்திய கசப்பான அனுபவங்கள் குறித்து பேசுவது பொருத்தமாக இருக்கும் என்று தோன்றியது. ஆயினும் பிற்பாடு இந்திய வெளிநாட்டமைச்சரின் வருகை குறித்து தெரிவிக்கப்படும் ஆரவாரங்கள் சற்று அளவுக்கதிகமாகவே இந்திய அரசின் மீது இலங்கை மக்களை நம்பிக்கை கொள்ள வைக்கும் விதத்தில் அமைந்திருந்ததை சுட்டிக்காட்டுவது மட்டும் இப்போதைக்கு போதுமானது என்று முடிவு செய்து கொண்டு அப்பத்தியை எழுதினேன். இந்த விவகாரம் குறித்து இன்னொரு தடவை எழுதிக் கொள்ளலாம் என்ற முடிவுடன்.

ஆனால் இந்தியாவில் நடைபெற்று வரும் ஜெயின் ஆணைக்குழு முன்பாக முன்னாள் பிரதமரும் வெளிநாட்டமைச்சராக இருந்தவருமான நரசிம்மராவோ அளித்த சாட்சியம் சில விடயங்களை மீள நினைத்துப் பார்ப்பதை தவிர்க்க முடியாமல் ஏற்படுத்தி விட்டது. அந்தச் சாட்சியத்தின் போது அவர் 'இந்தியாவின் தேசிய நலன்கருதியே இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது' என்று தெரிவித்திருந்தார். இலங்கை - இந்திய ஒப்பந்தம் உருவான சூழல் தொடர்பாக நம்மவர்கள் மத்தியில் நிலவிய பிரமைகளை உடைத்தெறிந்துள்ள இந்தச் சாட்சியம், குஜ்ராலின் இலங்கை வருகை நேரத்தில் ஒரு வாக்குமூலமாக வெளிவந்திருப்பது ஒரு முரண் நகையான விடயமாகும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது அது இலங்கை வாழ் தமிழ் அரசியல் உரிமைகளை வழங்குவதற்காக இந்திய அரசினால் மனமுவந்து செய்யப்பட்ட ஒரு நடவடிக்கை என்ற அபிப்பிராயமே தமிழ் மக்கள் மத்தியில் பொதுவாக நிலவியது. அதுவும், தமிழ் புத்திஜீவிகள் மற்றும் அரசியல்வாதிகள் மத்தியில் இது மிகவும் ஆழமாகப் பதிந்து போயிருந்தது.

இந்தியா, இலங்கை அரசினை நிர்ப்பந்தப்படுத்தி தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுத்தரும்; வழங்கப்படுகின்ற உரிமைகளைப் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யும்; அதற்காகவே அது தனது சொந்தப்படைகளைக் கூட இங்கே அனுப்பிவைத்திருக்கிறது என்ற அசைக்க முடியாத நம்பிக்கை பொதுவாக எல்லோரிடமும் நிலவியது.

இதேவேளை இந்தியா குறித்து நாம் விழிப்பாக இருக்க வேண்டும்; அது தனது சொந்த நலன்களை அடிப்படையாகக் கொண்டே இந்த விடயத்தில் தலையிடுகிறது; அதன் நலன்களைப்பேணுவதற்கு ஏதுவாகவே அது தமிழ் மக்களுக்குச் சார்பாக இருப்பதாகக் காட்டுகிறது. அதன் நலன்கள் வேறுவழிகளில் தீர்க்கப்படுமானால் அது தமிழ் மக்களைக் கைவிட அதிக நேரம் எடுக்காது என்ற அபிப்பிராயமும் இருக்கவே செய்தது. இந்திய அரசு தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சியும் ஆயுதங்களும் பணமும் வழங்கி பல போராளிக் குழுக்களை உருவாக்கிக்கொண்டிருந்த போதே இத்தகைய அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. ஆனால் இவை மிகவும் மெல்லிய முணுமுணுப்புகளாக பொதுவான இந்தியா மீதான நம்பிக்கை அலையின் வேகத்திற்கு தாக்குப்பிடிக்க முடியாத அளவுக்கு சிறிய குரல்களாகவே இருந்தன.

'இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு ஒன்று என்றால் தமிழ் நாட்டுத் 'தமிழனின் தமிழ் ரத்தம்' துடிக்கும் என்றும் இதனால் இந்திய அரசாங்கம் தமிழன் பிரச்சினையில் சார்பு நிலை எடுத்தே ஆக வேண்டும்' என்றும் வெளிப்பட்ட தர்க்கம் மிகவும் ஆழமாகவே வேரூன்றி இருந்தது. இதைக் கேள்விக்குள்ளாக்குகின்ற கருத்துக்கள் கேலிக்குள்ளாக்கப்பட்டன, அப்படி கேட்பவர்கள் மிரட்டல் மூலமாக மௌனமாக்கப்பட்டார்கள்; அல்லது அவ்வாறான மிரட்டலுக்குப் பணியாதவர்கள் 'மண்டையில் போடப்' பட்டார்கள். இந்தக் கைங்கரியங்களை அன்றைய 'தமிழீழ விடுதலை' அமைப்புக்கள் செய்தன. இந்தியா உதவி செய்யும் என்ற நம்பிக்கை தகர்க்கப்படும் என்று நம்புவது அவர்களுக்கு அச்சமூட்டும் ஒன்றாக இருந்ததால் அப்படி தகர்க்கும் விதத்தில் பேசுபவர்கள் எழுதுபவர்களை மௌனிக்கச் செய்து விடுவதன் மூலம் தாம் அந்த அச்சத்திலிருந்து விடுபட்டுவிடலாம் என்று அவர்கள் கருதினார்கள் போலும்!

'இரவற் படையில் புரட்சி எதற்கு?' என்று கேள்வி எழுப்பிய கவிஞர் பரிகசிக்கப்பட்டார்; இவ்வாறான சந்தேகங்களை தமது விடுதலை இயக்கங்களுக்குள் கேட்டவர்கள் மிரட்டி மௌனிக்கப்பட்டார்கள் அல்லது கொல்லப்பட்டார்கள். ரெலோ இயக்கத்தை சேர்ந்த உத்தரப்பிரதேசப் பயிற்சி பெற்ற 'நேரு' என்ற இளைஞர் இக்காரணத்துக்காக அவர்களது இயக்கத்துள் முரண்பட்டார். 'வரலாற்றுச் சக்கரங்கள் பின்னோக்கி சூழல்வதில்லை' என்று வாதாடிய அவரும் அவரது சக ரெலோ உறுப்பினர்கள் சிலரும் ரெலோ தலைமைப் பீடத்தால் கொலைப் பயமுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டனர். இந்தக் கொலைப் பயமுறுத்தல் காரணமாக தமது இயக்கத்துள் இருப்பது சாத்தியமில்லை என்று வெளியேறி மறைந்து வாழ்ந்த நேரு, அதே இயக்கத்தினால் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

புளொட் இயக்கமோ இதே காரணத்துக்காக பல 'களையெடுப்பு'க்களை நடாத்தியது. அதன் அவப்புகழ்பெற்ற ஒரத்த நாட்டு சித்திரவதை முகாம்களில் புளொட் உறுப்பினர்கள் பலர் சித்திரவதைகட்கு உள்ளாக்கப்பட்டதுடன், தஞ்சை மாவட்டத்தின் வயல்களுக்கு உரமாகியும் போனார்கள். அவர்களது பலிகளில் ஒன்றாக புளொட் இயக்கத்தின் உறுப்பிர்களில் ஒருவரான சந்ததியாரைக் குறிப்பிடலாம். ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கம் இந்த மாதிரியான கருத்துக்களைக்கொண்டிருந்தவர்களை தமது அமைப்பிலிருந்து ஓரங்கட்டி ஒதுக்கியது. புலிகள் கூட - இந்தியா குறித்து இலங்கை - இந்திய ஒப்பந்த காலம் வரை - சந்தேகம் கிளப்பியவர்களை தாக்குவதற்கு தயங்கியதில்லை.

ஆக, கிட்டத்தட்ட எல்லா இயக்கங்களுமே - அவற்றுள் அளவு வேறுபாடுகள் இருப்பினும் - இந்தியா குறித்து நம்பிக்கை கொண்டிருந்தன. அதன் பிராந்திய நலனுக்கும் வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டமான 'தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும்' இடையில் நிலவிய முரண்பாட்டை கணக்கிலெடுக்கத் தயாரற்று இருந்தன. பங்களாதேஷின் 'விடுதலைக்கு' இந்தியா ஆற்றிய 'பங்களிப்பின்' பிரமையிலிருந்து விடுபடாதவர்களாகவே இவர்கள் இருந்தனர்.

இத்தகைய ஒரு சூழல் இந்திய அரசுக்கு இலங்கை ஒப்பந்தம் போன்ற ஒரு ஒப்பந்தத்தை தயாரிக்க வாய்ப்பளித்தது. இந்த ஒப்பந்தமும் அதன் சரத்துக்களும் தமிழ் மக்களின் உரிமைகள் குறித்த அக்கறையை வெளிக்காட்டியதைவிட, இந்தியாவின் பிராந்திய நலன்களைப் பாதுகாப்பதிலேயே அதிக கவனம் செலுத்தின. இதற்காக அது இலங்கைப் படைகட்கு பயிற்சி அளிக்கவும், தமிழ் போராளிகளின் ஆயதங்களைக் களைவதற்கும் ஒப்புக்கொண்டது. இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்தனவைப் பொறுத்தவரை இலங்கையின் இறைமைக்கு ஓரளவுக்கு இவ்வொப்பந்தம் நெருக்கடியைக் கொடுத்தாலும் அதற்குத் தலையிடியாக இருந்த விடுதலைப் போராட்டத்தை உடைப்பதற்கும், உடைப்பதற்கான பொறுப்பை இந்தியாவிடம் கையளிப்பதற்கும் உரிய ஒரு வாய்ப்பாக இதை அவர் கருதினார். பிற்காலத்தில் அவர் பலமுறை திரும்பத் திரும்ப சொன்னது போலவே அவர் தமிழ் விடுதலை இயக்கங்களை சிதறடிப்பதிலும் இந்தியாவை தம்பக்கமாக இழுத்துக்கொள்வதிலும் பெரும் வெற்றி பெற்றிருந்தார் என்பதை மறுப்பதற்கில்லை.

உதாரணமாக ஒப்பந்தம் கைச்சாத்திடுகின்ற வரையான காலகட்டம் வரை 'தமிழீழ விடுதலை' என்ற ஒருமித்த கருத்துடன் இருந்த இயக்கங்கள், மக்கள் மத்தியில் அபிப்பிராய பேதத்தை அல்லது பிளவை ஏற்படுத்தியது அவரது முதலாவது வெற்றியாகும். பாராளுமன்ற அரசியற் பாதையினூடாக தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியாது என்ற முடிவுடன் ஆயுதப் போராட்டத்தில் குதித்த - ஆயுதப் போராட்ட வடிவத்தை தமது பிரதான போராட்ட வடிவமாக வரித்துக் கொண்ட - விடுதலை இயக்கங்கள் மத்தியில் திரும்பவும் பாராளுமன்ற அரசியல் மூலமாக உரிமைகளுக்காக போராட முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதில் அவர் வெற்றி பெற்றார். ஆயுதங்களை கைவிடச் செய்வதில் அவர் பெற்ற வெற்றி ஒரு மகத்தான வெற்றிதான் என்பதில் சந்தேகமில்லை. தவிரவும், 'தமிழீழம்' என்ற முழக்கத்துடன் யுத்தத்தில் குதித்த தமிழ் விடுதலை இயக்கங்களால் பேசப்பட்ட சுதந்திரங்களை மாகாண சபைகள் ஊடாகப் பெற்று விட முடியும் என்ற நம்பிக்கையையும் கொள்ள வைத்தார்.

இந்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரை அது அந்நாட்டிலிருந்த இவ்வாறான ஆயுதப் போராட்டங்கள் பலவற்றையும் இந்தக் காலகட்டத்தின் போது இவ்வாறு தான் கையாண்டது. ராஜிவ் காந்தி ஆட்சிக்குவந்ததும் அவர் அன்று ஆயுதப் போராட்டங்களை நடாத்திக்கொண்டிருந்த மாநிலங்களின் போராளிகளுடன் நடாத்தி வந்த பேச்சுவார்த்தைகளின் போக்கும், அவற்றின் மூலமாக அந்த மாநில போராளிக் குழுக்களுடன் சமரசம் செய்து கொண்ட விதமும் இலங்கையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்துடன் சமாந்தரமானவை என்பது கவனிக்கப்படவேண்டிய விடயமாகும்.

இவை எல்லாவற்றிலும் அடிநாதமாக இருந்து வந்தது இந்தியா தனது நலன்களைப் பாதுகாப்பதை அடிப்படையாகக்கொண்டு செயற்படுகிறது என்பதே. ஆனால், துரதிருஷ்டவசமாக இந்த விடயம் புரிந்து கொள்ளப்படவில்லை. ராஜிவ் காந்தி அவர்களுக்கும் பல இயக்கத் தலைவர்கட்கும் இடையிலான ஒப்பந்தத்தில் காணப்படாத வாய் வாக்குறுதிகளை நம்பி தமிழ் இயக்கங்கள் இந்திய நலன்களை பாதுகாப்பதும் கூட தமது கடமை தான் என்பது போலச் செயற்பட்டன. இதனால் அவை தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பாக வலியுறுத்தப்பட வேண்டிய விடயங்களை 'இந்தியா கவனித்துக்கொள்ளும்' என்று விட்டு விட்டன.

இதன் விளைவு இன்று தெளிவாகி உள்ளது. எந்த மாகாண சபையை நம்பி ஆயுதப் போராட்டம் அவசியமில்லை என்று முடிவு செய்து மாகாண சபையை ஏற்றுக்கொண்டதோ, அந்த மாகாண சபை எந்த வித அதிகாரங்களும் அற்ற ஒன்று என்று பின்னாளில் ஈ.பி.ஆர்.எல்.எப். அறிவித்தது. அறிவித்ததும் அல்லாமல் ஈழப்பிரகடனமும் கூட செய்தது.

தமிழ் மக்களின் ஆயுதப்போராட்டம், அவர்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஒரு வழிமுறையே என்ற அடிப்படையில் அந்த அரசியல் உரிமைகள் வேறு வழிகளின் கிடைக்குமானால், ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவது தர்க்கப் பொருத்தமானதுதான். ஆனால் அந்த வேறுவழிகள்தான் என்ன? மாகாண சபையையும் 13வது திருத்தச்சட்டமும் இன்று காலாவதியான விடயங்களாகி விட்டன. இன்றைய அரசாங்கம் முன்வைத்திருக்கும் 'தீர்வுப் பொதி' இன்னமும் 'தீர்வைத் தருமா?' என்ற சந்தேகத்தை ஒழித்து விடவில்லை. ஒரு சில பாராளுமன்ற ஆசனங்கள் மூலம் அரசாங்கத்தை 'நிர்ப்பந்திக்கும்' வேலையை மட்டும் தமிழ்க் கட்சிகளால் செய்ய முடிகிறது. ஆனால் நாளுக்கு நாள் தமிழ் மக்கள் மீதான தாக்குதலும், அவர்களது பூமியை நாசமாக்கும் யுத்தமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

49வது சுதந்திர தினத்தை இலங்கை அரசாங்கம் வெகு படாடோமாகக் கொண்டாடும் வேளையில் நாட்டின் ஒரு பகுதி மக்களான தமிழ் முஸ்லிம் மக்கள் தமது அன்றாட வாழ்வே பிரச்சினையாகிவிட்ட நிலையில், உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஒரு நிலையில்தான் இந்திய வெளிநாட்டமைச்சர் குஜ்ராலின் இலங்கை விஜயம் நிகழ்ந்தது. அவரது வருகை தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க உதவ வேண்டும் என்ற அபிப்பிராயம் தமிழ் கட்சிகள் மத்தியில் எழுந்தது. இவ்வளவு அனுபவங்களுக்குப் பின்னும் இந்திய அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து தமது அரசியலை நடாத்துவதற்கு இந்தக் கட்சிகள் நினைப்பது தெரிந்தே தவறிழைக்கும் ஒரு செயலாகும்.

இப்படிச் சொல்வதன் அர்த்தம் இந்தியாவுக்கெதிராக இக்கட்சிகள் போர்க்கொடி தூக்கவேண்டும் என்று சொல்வதல்ல.

பதிலாக, எமது மக்களின் உரிமைப் போரினை நடாத்தவேண்டியவர்கள் நாமே என்பதை வலியுறுத்துவதே. இப்போது ஜெயின் கமிசன் முன் ராவோ அளித்துள்ள சாட்சியம் இது எவ்வளவு தூரம் அவசியமானது என்பதை தெளிவுப்படுத்தியுள்ளது. இதைப் புரிந்துகொண்டால் எமக்கு 'ஷேமம்'

எமது மக்களின் உரிமைப் போருக்கும் 'ஷேமம்'

அவ்வளவுதான்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசின் இனவெறிப் பயங்கரவாதமும் மலையகத்தில் அப்பாவித் தமிழர்களும்

எஸ். பாலச்சந்திரன்.



சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தை அரசாட்சியில் நிலைநாட்டும் நோக்கத்தில் ஈடுபட்ட இலங்கையின் ஆளும் கட்சிகளின் முயற்சிகள் யாவும் இலங்கை தமிழர்களின் எதிர்ப்புகளுக்கும், சவால்களுக்கும் உட்படுத்தப்பட்டு வந்துள்ளன. இந்த பேரினவாத ஆதிக்கத்தை சட்டரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் நிலைநாட்ட முயன்றதன் விளைவாக தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கை இன முரண்பாடு இராணுவ மயப்படுத்தப்பட்டமை போன்ற நிலைமைகள் தோன்றின. பேரினவாதம் அரசாட்சியில் கிரமமாக நிறுவக மயப்படுத்தப்பட்டு அரசானது சிங்கள, பௌத்தர்களின் அரசியல் ஆயுதமாக மாற்றமடைந்துள்ளதோடு மிலேச்சத்தனமான யுத்தத்திற்கும் வழி வகுத்தது.

இவ்வகையில் பல தசாப்தங்களாக இந்நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த பெரும்பான்மையினர் அரசுகள் மேற்கொண்ட இனவெறி கெடுபிடிகளில் மலையக தமிழர்கள் தொடர்ந்தும் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றனர். கடந்த 5 தசாப்தங்களுக்கு மேலாக இச்சமூகத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் எல்லா இனவெறி கெடுபிடிகளையும் மௌனமாக சகித்துக் கொண்டு வாழ்ந்து வந்தாலும் இவர்களை அமைதியாக வாழ விடாது தொடர்ந்தும் இனவாத கெடுபிடிகளுக்கு அரசு உட்படுத்தி வருகின்றதென்பது ஒன்றும் இரகசியமல்ல.

தமக்கெதிராக அரச பயங்கரவாத முகவர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கொடூரங்களையெல்லாம் எதிர்த்துச் செயல்படுவதன் மூலம் மேலதிக பாதிப்புக்களுக்கு ஆளாக நேரிடும் என்பதற்காக இந்த அநீதிகளையெல்லாம் மூடி மறைப்பதற்கு இவர்களே · உடந்தையாகவும் செயற்பட்டு வருகின்றார்கள்.

இவ்வகையான கெடுபிடிகளுக்கு சிறந்ததொரு உதாரணமாக எனது சகோதரர் ஒருவருக்கு ஏற்பட்ட ஓர் அனுபவத்தை இங்கே கூறுகின்றேன். இக்கதையை பகிரங்கப்படுத்துவதன் மூலம் அரச பயங்கரவாதிகளினால் ஏற்படக்கூடிய இடையூறுகளுக்கு முகம் கொடுக்கக் கூடிய துணிவு எமக்கு இருக்கின்றதன் காரணத்தினால் இக்கதையை ஓர் உதாரணமாக பயன்படுத்த விரும்புகின்றேன்.

ஜனவரி முதலாம் திகதி இரவு சுமார் 8.00 மணியளவில் பாணந்துறையில் தான் தொழில் செய்யும் நகை கடையிலிருந்து இரவில் தங்குகின்ற மொறட்டுவையிலுள்ள ஒரு கடைக்குச் சென்றுள்ளார் எனது சகோதரர். அக்கடையிலுள்ளவர்கள் கடையை பூட்டிவிட்டு வெளியே சென்றுள்ளதன் காரணத்தினால் அவர்கள் வரும் வரை அக்கடைக்கு வெளியே சுமார் அரை மணி நேரம் காத்துக் கொண்டு நின்றுள்ளார். அவ்வேளையில் சாதாரண உடையணிந்த ஆறுபேர் அவரை நோக்கி வந்துள்ளனர். இவர்கள் மதுபானம் அருந்துவதையும் எனது சகோதரர் கண்டுள்ளார். வந்தவர்களுள் ஒருவர் எனது சகோதரரின் அடையாள அட்டையை வாங்கி பார்த்துவிட்டு அவரது சட்டைப் பைக்குள் கையைப்போட்டு பணம் எவ்வளவு வைத்திருக்கிறாய் என்று கேட்ட பொழுது என்னிடம் 100/= ரூபாய் தான் இருக்கின்றது என எனது சகோதரர் கூறியுள்ளார்.

பிறகு, அவரது கையிலே உள்ள மோதிரத்தை கழற்ற முயற்சித்த போது அது வெள்ளியிலான மோதிரம் என கூறியவுடன் ''உம்ப பற தெமல கொட்டியா'' (நீ ஒரு பறத்தமிழ் புலி) என அடையாள அட்டையை வாங்கிப் பார்த்தவன் உரத்து கத்தி எனது சகோதரரின் நெத்தியில் ஓங்கி குத்தியிருக்கின்றான். அதை தொடர்ந்து ஆறுபேரும் ஒன்றாக சேர்ந்து இவரை அடித்துள்ளனர். இவர் எவ்வளவோ மன்றாடியும் அவர்கள் அடிப்பதை நிறுத்தவில்லை தான் ஒரு இரத்த அழுத்த நோயாளி என்று கத்தியபொழுது 'நீ செத்துப்போ' என்று சிங்களத்தில் கூறி நெஞ்சைக்குறி வைத்து தாக்கியுள்ளனர். தாக்குதல் காரணமாக தலைச்சுற்று ஏற்பட்டதோடு மூக்கு வழியாக இரத்தம் வடிகின்ற நிலையில் அடித்துக் கொண்டே தெரு வழியில் இழுத்துக்கொண்டு சென்றுள்ளனர். சற்று தூரம் சென்று ஒரு பெற்றோல் நிலையத்திற்கு அருகில் ஏனையவர்கள் ஒதுங்கி கொண்டு அவருடன் வந்த ஒரு காடையனிடம் எனது சகோதரரை ஒப்படைத்துள்ளனர். அவன் 5000/= ரூபாய் பணம் தந்தால் விடுவித்து விடுவதாகவும் இல்லையேல் கொன்று கடலிலே தூக்கி எறிந்து விடப்போவதாக கூறி மேலும் தாக்கியுள்ளான். தன்னிடம் பணம் இல்லை. மறுநாள் காலை கடை திறந்ததன் பிறகு ஆயிரம் ரூபாய் வாங்கித் தருகிறேன் என எனது சகோதரர் கூறியதன் பின் அவரை மொறட்டுவ பொலிஸ் நிலையத்திற்கு இழுத்து சென்றிருக்கின்றனர். அப்போது அந்தக் காடையர்களில் அறுவரில் நால்வர் மட்டுமே பொலிஸ் நிலையத்திற்கு சென்றுள்ளார்கள். பொலிஸ் நிலையத்தில் எனது சகோதரருடைய ஆடைகளை கழற்றி விட்டு விடியும் வரை தாக்கியிருக்கின்றார்கள்.

விடியற்காலையில் ஒரு பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் நிலையம் சென்று நிலைமைகளை அவதானித்து எனது சகோதரருடன் கதைத்து விட்டு பிறகு அந்த பொலிஸ்காரர்களுடன் பேசி விட்டு சென்றதன் பின்பு தாக்குதல் நிறுத்தப்பட்டது. பலமாக தாக்கப்பட்ட நிலையிலே இரத்தம் சிந்திய உடையுடன் தாகத்திற்கு தண்ணீர் கேட்ட பொழுதும் தண்ணீர் கொடுப்பதற்கு பதிலாக இவர் தாக்கப்பட்டுள்ளார். தலைவலி, நெஞ்சுவலி, காரணமாக பெனடோல் வில்லைகளை கூட வாங்கித்தர இவர்கள் மறுத்துள்ளனர். விடிந்ததன் பிறகு சேவைக்கு வந்த வேறொரு பொலிஸ்காரர் மூலமாக இரண்டு பெனடோல் வில்லைகளைப் பெற்றுக்கொண்டாலும் அவற்றை சாப்பிடுவதற்கு தண்ணீர் கொடுக்க மறுத்தனர். அதனால் தண்ணீர் இல்லாமலே வெறுமனே இவ்வில்லைகளை சாப்பிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இவர் தாக்கப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்ட விடயத்தை அறிந்த அவர் வேலை செய்யும் கடையைச் சேர்ந்தவர்கள் பொலிஸ் நிலையம் சென்று விசாரித்த பொழுது அவர் கைது செய்யப்படவில்லையென்று பொலிஸார் மறுத்தார்கள். அதன் பிறகு மாலையில் இவருடைய உடல் நிலை மோசமாக பாதிக்கப்பட்டிருந்ததன் காரணத்தினால் பொலிஸ் நிலையத்திற்கருகிலுள்ள தனியார் மருத்துவர் ஒருவரிடம் மருந்து எடுப்பதற்காக அழைத்துச் செல்லபபடும் பொழுது இவர் வேலை பார்க்கும் கடையிலுள்ள சக ஊழியர் ஒருவரினால் இனங் காணப்பட்டு பின்பு மாலையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மறுநாள் 3ம் திகதி அதிகாலையில் கண்டிக்குக் கொண்டு செல்லப் பட்ட இவர் கண்டி வைத்திய சாலையிலே மருத்துவ சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இவர் விடுதலை செய்யப்பட்ட பொழுது இவருடைய நிழற்படமொன்றை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வந்து தரும்படி உத்தரவிட்டதன் காரணமாக விடுதலை செய்யப்பட்டவுடன் பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள புகைப்படம் பிடிக்கும் நிலையத்தில் படமொன்றை எடுத்துள்ளார். இதைப் பற்றி தெரிந்து கொண்ட இந்த பொலிஸ்காரர்கள் அந்த புகைப்பட நிலையம் சென்று அப்படங்களை கைப்பற்றிக்கொண்டு பிரதிகளை யாருக்கும் கொடுக்க வேண்டாம் என்று புகைப்பட நிலைய உரிமையாளரை எச்சரித்து சென்றுள்ளனர். மேற்கூறிய இந்த சம்பவமானது தென்னிலங்கையிலே அப்பாவி தமிழர்களுக்கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அரச இனவெறி பயங்கரவாத நடவடிக்கைகளை புரிந்து கொள்வதற்கு சிறந்த உதாரணமாக அமைகின்றது. இது போன்ற நூற்றுக்கணக்கான சம்பவங்கள் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றது என்பதுவும் ஒன்றும் இரகசியமல்ல.

பொலிஸைச் சேர்ந்த இந்த இனவெறி காடையர்கள் எனது சகோதரரை தாக்கிய பொழுது அவர் எதற்காக அங்கு வந்தார்? அவர் யார்? போன்ற எந்த விடயங்களையும் அவரிடம் தெரிந்துகொள்ளவில்லை. மாறாக இவர்களினால் தாக்கப்படும் பொழுது தன்னைப்பற்றி கூறிய எந்த தகவல்களையும் இவர்கள் பொருட்படுத்தவுமில்லை. இந்தச் சம்பவத்திலே இரண்டு முக்கிய விடயங்கள் அடங்கியிருக்கின்றன.

1. சட்டத்தை, ஒழுங்கை பாதுகாக்கவென இயங்குகின்ற அரசின் நிறுவனமான பொலிஸ் இலாகா எந்த அளவுக்கு ஒரு கொடூரமான வகையில் பேரினவாத மயப்பட்டிருக்கிறது என்பது.

2. தமிழர்களுடைய பொருளாதாரத்தை திட்டமிட்டு கொள்ளையடிக்கும் ஒரு பேரினவாத கொள்ளை கோஷ்டியாக பொலிஸ் இலாகா இயங்குகின்றது என்பது.

இது ஒன்றும் திரை மறைவில் நடைபெற்ற சம்பவமல்ல. இது இந்நாட்டில் நடைபெற்ற முதல் சம்பவமுமல்ல. பல தசாப்தங்களாக திட்டமிட்ட அடிப்படையில் இனவாத மயப்படுத்தப்பட்ட மனிதாபிமான மற்ற வகையில் மிலேச்சத்தனப்பட்ட பொலிஸ் இலாகாவானது அரசாங்கங்களின் பேரினவெறி பயங்கரவாத அடக்குமுறையை அப்பாவி தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடுகின்ற ஒரு முகவராகவே செயற்பட்டு வருகின்றது. அதன் ஒரு விளைவு தான் இச் சம்பவமாகும்.

அப்பாவி தமிழ் இளைஞர்கள் கைது செய்வது அவர்களை விடுதலை செய்வதற்கு பல இலட்சக்கணக்கான ரூபாய்களை இலஞ்சமாக கோருவது போன்ற சம்பவங்கள் சாதாரணமாக நிகழ்ந்து வருகின்றன. தமிழர்களுடைய சொத்துக்களை கொள்ளையடித்து விட்டு அவர்களை கொன்று பொல்கொட வாவியிலும், அளவ போன்ற பிரதேசங்களிலும் வீசியிருந்த பொலிஸாரின் அட்டகாசங்கள் கடந்த வருடம் கண்டு பிடிக்கப்பட்டது பலரும் அறிந்த விடயமே. இது போன்ற சம்பவங்கள் தொடர்பாக இத்துறையிலே சேர்க்கப்படுகின்ற சில நபர்கள் கைது செய்யப்படுவதும் விசாரிக்கப்படுவதும் அதில் பலர் மீண்டும் அதே சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்படுவதும் இலங்கையில் ஒன்றும் புதிய விடயமல்ல.

தமிழர்களுக்கெதிராக இழைக்கப்படுகின்ற அட்டூழியங்களை துணிவுடன் எதிர்த்து நடவடிக்கை எடுக்கின்ற பொழுது, இந்த அட்டூழியங்கள் நடைமுறை ரீதியில் செயற்படுத்துகின்ற ஒரு சில தனிநபர்களின் பொறுப்பாக இனங்காணப்படுகின்றது. சில வேளைகளில் இவர்களுக்கு தண்டனைகளும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் இவ்வகையான சம்பவங்கள் நிகழ்வது எவ்வகையிலும் குறையவில்லை. மறுபுறத்திலே இவ்வகையான சம்பவங்களை அவற்றை இழைக்கின்ற தனிநபர்களின் பொறுப்பாக்கி விட்டு விட்டு தமிழ் இனத்திற்கெதிராக அரச பேரினவாத பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டுள்ள அரசின் தலைமையானது தப்பித்துக்கொள்ள முயல்வது ஒன்றும் புதிய விடயமல்ல. நூற்றுக்கணக்கான சம்பவங்கள் நிகழ்கையில் ஓரிரு அநியாயங்களுக்கெதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த அநீதிகளை இழைக்கின்ற பொலிஸாருக்கெதிராக நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் அந்த நிறுவனத்திற்கு அரசியற் தலைமையை வழங்குகின்ற ஆட்சித் தலைமையானது சட்டத்திற்கு, ஜனநாயகத்திற்கும் கட்டுப்பட்டு நடக்கின்றது என்பதை நிரூபிக்க முற்படுகிறது.

அப்பாவி தமிழர்களுக்கெதிராக பாகுபாடற்ற வகையில் கொடூரமான தாக்குதல்களை மேற்கொள்வதற்கு பொலிஸாருக்கு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் அளிப்பதோடு, வழிகாட்டியாகவும் அமைவது அரசாங்கங்களின் தமிழர்களுக்கெதிராக மேற்கொள்ளுகின்ற கொள்கைகளும், செயற்திட்டங்களுமேயாகும். சந்திரிகாவின் தற்போதைய அரசு எவ்வகையிலும் இதற்கு சிறிதேனும் மாறுபட்டதொன்றல்ல என்பதை மிக தெளிவாக நிரூபித்துக் காட்டியிருக்கின்றது. பொலிஸாரின் இனவாதத் தன்மையையும் மிலேச்சத்தனத்தையும் விமர்சித்து பதவிக்கு வந்த சந்திரிகா அரசு இந்த பொலிஸ் அமைப்பை இனவாதத்திலிருந்து விடுவிப்பதற்கோ மிலேச்சத்தனத்திலிருந்து விடுபடுவதற்கோ இதுவரை எவ்விதமான ஆக்க பூர்வமான செயற்பாடுகளிலும் இறங்கவில்லை.

கிடந்த 2 1/2 வருடங்களாக மிகவும் கீழ்த்தரமான வகையிலே இனவாத மயப்படுத்தும் நடைமுறைகளைத் தீவிரப்படுத்துவதிலேயே கூடிய கவனத்தை செலுத்தியிருக்கின்றது. மேற்கூறிய எனது சகோதரரின் அனுபவமானது இந்த நிலைமையை தெளிவாக காட்டுகின்ற ஒரு சம்பவமாக விளங்குகின்றது. இவரை தாக்கிய பொலிஸ் காடையர்களை விட இவ்வகையான தாக்குதலுக்குத் தேவையான சூழ்நிலையை உத்தரவாதப்படுத்தி வரும் அரசாங்கத்தின் அரசியற் தலைமையே இச்சம்பவத்திற்கு முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளல் வேண்டும். இவ்வகையான சம்பவங்கள் நிறுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகளை சிறிதளவேனும் காணக்கூடியதாக இல்லை. விசேடமாக முறையான அரசியற் தலைமையற்ற மலையக இளைஞர்களுக்கெதிராக மேற்கொள்ளப்படுகின்ற இவ்வகையான இனவெறி தாக்குதல்களிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கு தேவையான தற்பாதுகாப்பு நடவடிக்கைகளில் இறங்க வேண்டிய ஒரு கட்டாய நிலைக்கு மலையக இளைஞர்கள் தள்ளப்பட்டு கொண்டு வருகின்றார்கள் என்பதை வெளிப்படையாக கூறி வைப்பது நல்லது. சமாதான முகமூடியை அணிந்திருக்கின்ற சந்திரிகா அரசும் இவ்வரசிற்கு தலை சொறிந்து கொண்டு இவ்வரசு வழங்கும் அற்ப, சொற்ப சலுகைகளுக்காக அவ்வரசிடம் மண்டியிட்டுக் கிடக்கின்ற மலையக மக்களின் வாக்குகளினால் பாராளுமன்றம் சென்றுள்ள அரசியல் வியாபாரிகளும் இந்நிலைமையை புரிந்து கொள்வது நல்லது. ○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# இனப்பிரச்சினையை நீடிக்க முடியாது!

## ஜே.ஆர்., பிரேமதாச, விஜயதுங்க, சந்திரிகா...

## சந்திரிகாவுக்குப் பின் இன்னொரு சந்திரிகாவா?

"தமிழ் மக்களின் பிரச்சினை அதிகாரம் அல்ல. அலகுதான். வடக்கு கிழக்கு பிரிந்த நிலையில் எவ்வளவு அதிகாரங்களைத் தந்தாலும் தமிழ் தலைமைகள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இன்றுள்ள கேள்வி இதுதான். வடக்கு கிழக்கு இணைப்புக்கு அரசாங்கம் ஆயத்தமாக இருக்கிறதா? ஐ.தே.கட்சி ஆயத்தமாக இருக்கிறதா? அப்படியான சூழலில் இணைந்த வடகிழக்குக்குள் முஸ்லிம்களுக்கு ஒரு தனி மாகாணம் கொடுக்க தமிழ் தலைமைகள் தயாராக இருக்கிறதா? இக்கேள்விக்கு விடைகண்டபின் தான் நாங்கள் அரசியல் தீர்வைப்பற்றி பேசலாம்!"
"விடுதலைப் புலிகள் கடந்த காலத்தில் முஸ்லிம்கள் விடயத்தில் தவறை செய்து விட்டனர். அவ்வரலாற்றுத் தவறு அவர்களின் போராட்டத்தில் பின்னடைவை ஏற்படுத்தியது. தமிழ் மக்களையும் முஸ்லிம்களையும் புலிகள் சரிசமனாக நடத்தினால் பிரச்சினையே இராது. தமிழ் அமைப்புக்களோ விடுதலைப் புலிகளோ முஸ்லிம்களை மட்டும் வேறுவிதமாக நடாத்தும் போதுதான் பிரச்சினை ஆரம்பமாகிறது" என்கிறார் பிரதியமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினருமாகிய எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் அவர்கள்.

பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்



**1990ம் ஆண்டின் இறுதிப்பகுதி வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களிடையே ஒரு இருண்டகாலப்பகுதியாகும். ஆனால் அந் நிலைமையில் இன்று மாற்றம் ஏற்பட்டு வருவது போல் தெரிகிறது. இன்றைய தமிழ் முஸ்லிம் உறவு நிலை குறித்து உங்கள் பார்வை என்ன?**

1990ம் ஆண்டில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே பெரும் இடைவெளி இருந்தது உண்மை தான். ஆனால் இப்போது தமிழ் முஸ்லிம் மக்களிடையே பிரச்சினைகள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நிலைமை ஓரளவு மாறி விட்டது என்பதை விட முற்றுமுழுதாக மாறிவிட்டதாகவே நான் உணர்கிறேன். ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் முஸ்லிம் பகுதிகளில் தொழில் புரிகிறார்கள். முஸ்லிம்கள் ஆயிரக்கணக்கானோர் தமிழ் பிரதேசங்களுக்கு சென்று வருகிறார்கள். வியாபார நடவடிக்கைகள் இருதரப்பிலும் சுமுகமாக நடைபெற்று வருகின்றன. ஆனால் விவசாயம் மாத்திரம் முற்று முழுதாக செய்யப்படவில்லை. ஏறாவூர், வாழைச்சேனை விவசாயிகள் தங்கள் வயலுக்கு சென்று வருவதற்கான தயக்கம் இன்றும் உள்ளது. இந்த சுமுக நிலை தோன்றுவதற்கான பிரதான காரணம் விடுதலைப் புலிகள் முஸ்லிம்களுக்கு எதுவும் செய்யாத நிலைதான். விடுதலைப் புலிகள் மீண்டும் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்துவார்களேயானால் இச்சுமுக உறவு முற்றாக சிதைந்து விடும். ஆகவே தமிழ் முஸ்லிம் உறவில் விடுதலைப்புலிகளின் பங்குதான் அதிகம்.

தமிழ் முஸ்லிம் மக்களாகிய நாம் ஒரே மொழியைப் பேசுபவர்கள். இரண்டு சமூகங்களினதும் கலாசாரம் கிட்டத்தட்ட ஒரே தன்மையைக் கொண்டது. ஒரே பிரதேசத்தில் வாழ்பவர்கள் நாம். விடுதலைப் புலிகளின் போராட்டம் இரண்டு இன மக்களையும் அரவணைத்துச் சென்றிருக்க வேண்டும். தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பிரித்து வைத்து விட்டு போராட்டத்தில் வெல்வது என்பது ஒரு போதும் நடக்க முடியாத ஒன்று. அதேபோல் தமிழ் மக்களை விட்டுவிட்டு முஸ்லிம்கள் தீர்வு காணவிரும்பினால் அதுவும் நடக்க முடியாத ஒன்றுதான், விடுதலைப்புலிகள் கடந்த காலத்தில் அத் தவறைச் செய்து விட்டனர். புலிகளின் அவ்வரலாற்றுத்தவறு அவர்களின் போராட்டத்திலேயே பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் புலிகள் சரிசமமாக நடத்தினால் பிரச்சினை இல்லை. தமிழ் அமைப்புகளோ, விடுதலைப் புலிகளோ முஸ்லிம்களை மட்டும் பிரித்து வேறுவிதமாக நடத்தும் போதுதான் பிரச்சினை ஆரம்பிக்கிறது. கடந்த 3,4 வருடகாலமாக விடுதலைப்புலிகளின் கொள்கை மாற்றத்தின் கராணமாக சுமுகமான நிலைமை தோன்றியுள்ளது. தமிழ் முஸ்லிம் உறவை வளர்ப்பதில் நான் கூடுதலான முயற்சி எடுத்து வருகிறேன். அம் முயற்சி வெற்றியளிக்கும் என்பதில் நான் உறுதியாக விருக்கிறேன்.

**விடுதலைப் புலிகளிடம் முஸ்லிம்கள் தொடர்பாக கொள்கை ரீதியான மாற்றம் ஏற்பட்டுள்ளதாகச் சொல்கிறீர்கள். அதனை நீங்கள் எப்படி அடையாளம் காண்கிறீர்கள்?**

புலிகள் முஸ்லிம்களை அரவணைத்துப் போவதை அவர்களின் செயற்பாடுகளின் ஊடாக நான் அறிகிறேன். முஸ்லிம்களை விடுதலைப்புலிகள் இப்போது கொல்வதில்லை. புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முஸ்லிம்களை அனுமதிக்கிறார்கள். முஸ்லிம்கள் மீது புலிகள் எந்தவிதமான அச்சுறுத்தலையும் விடுக்கவில்லை. ஆகவே, இவை அனைத்தையும் தான் நான் கொள்கை மாற்றம் என்கிறேன்.

**முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் வரலாற்றுத்தேவை. இந்த வரலாற்றுத் தேவையின் ஊடாக நிலைபெற்ற முஸ்லிம் காங்கிரஸ் தனது கடமையை செவ்வனே செய்து வருகிறது எனத் துணிந்து கூறலாமா?**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசை ஒரு காலத்தில் முஸ்லிம்கள் தங்கள் உயிர் நாடியாக மதித்தார்கள். அம்மக்கள் எம்மிடம் ஒப்படைத்த பணியை நிறைவேற்றுவதற்காக 89இல் இருந்து நாங்கள் பாராளுமன்றத்தில் குரல்கொடுத்து வருகிறோம். குறிப்பாக 90,91இல் முஸ்லிம்களுக்கு பாதுகாப்புப் பிரச்சினை தோன்றிய போது முஸ்லிம்களை பாதுகாப்பதில் நாங்கள் ஈடுபட வேண்டியிருந்தது. இராணுவம், பொலிஸ், ஊர்காவற்படையில் முஸ்லிம் இளைஞர்களைச் சேர்க்க வேண்டிய சூழல் இருந்தது. இது எமது மக்களைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கை, அது எச்சமூகத்திற்கும் எதிரானதல்ல, ஆனால், இன்று அப்படியொரு தேவையிருப்பதாக நான் உணரவில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் இல்லாமல் இருந்திருந்தால் முஸ்லிம்களின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டு இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கும். ஆனால் இன்று இனப்பிரச்சிக்கான தீர்வில் முஸ்லிம் காங்கிரசின் பங்களிப்பு, முஸ்லிம்களின் பங்களிப்பு இருக்கிறது. 1987ம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட போதும் முஸ்லிம்கள் பற்றி அதில் ஒரு வார்த்தை கூட குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஏனென்றால், அப்போது முஸ்லிம் களுக்கென ஒரு கட்சி கூட இருக்கவில்லை. அன்று முஸ்லிம்களுக்கு ஒரு கட்சி இருந்திருந்தால் அப்படி நடந்திருக்க முடியாது! முஸ்லிம் காங்கிரஸின் வருகைக்குப்பின் நிலைமை அப்படி இல்லை. அரசியல் தீர்வு காணப்படல் வேண்டுமெனும் போது முஸ்லிம்களின் பிரச்சினையும் தீர்க்கப்படல் வேண்டும் என்ற நிலைமையை முஸ்லிம் காங்கிரஸ் தோற்றுவித்திருக்கிறது.

94ம் ஆண்டிற்குப் பின் இந்த அரசாங்கத்தில் நாங்கள் பங்காளிக் கட்சியாக மாறியபின் நிறைய சமூக, அபிவிருத்திப் பணிகளை செய்திருக்கிறோம். என்னைப் பொறுத்தவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் முஸ்லிம் வேறுபாடு இல்லாது நிறைய அபிவிருத்திப் பணிகளை செய்திருக்கிறேன். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் கூட எனது அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. முஸ்லிம்களின் அரசியல் தீர்வு தொடக்கம் ஏனைய பிரச்சினைகள் வரை முஸ்லிம் காங்கிரஸ் தனது பணியை சிறப்பாகச் செய்திருக்கிறது என்பதே எனது கருத்தாகும்.

**இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் முஸ்லிம்கள் பற்றி ஒரு வார்த்தைதானும் குறிப்பிடப் படவில்லை என்கிறீர்கள். ஆனால், தங்கள் ஆதரவுடன் ஆட்சிபீடமேறிய சந்திரிகா அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளில் கூட முஸ்லிம்கள் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லையே?**

முதலில் இது அரசின் தீர்வல்ல, தீர்வு யோசனைதான். அதில் ஒரு சமூகத்தையும் பற்றி சொல்லவில்லையே. அது அதிகாரப்பரவலாக்கல் தான். அது ஒரு சமூகத்திற்கு மாத்திரமல்ல முழுநாட்டிற்கும் தான். காணி, பொலிஸ், கல்வி, சுகாதார அதிகாரங்களை மக்களுக்கு, பிராந்தியங்களுக்கு பகிர்ந்து கொடுப்பதை பற்றி மட்டும் தான் சொல்லியிருக்கிறது. இன்றும் அந்த அதிகாரப் பரவலாக்கல் யோசனையில் அலகுகளைப் பற்றி சொல்லவில்லை. உதாரணமாக வடகிழக்கு மாகாணம் இணைந்திருக்கப் போகிறதா அல்லது பிரிந்திருக்கப்போகிறதா என்பதைப் பற்றி அது சொல்லவில்லை.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்தில் பிரபாகரன் அரசியல் அதிகாரங்களைப்பற்றி பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. அவரின் கோரிக்கையான வடக்கு கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்படல் வேண்டும் என்பதில் அவர் உறுதியாகவிருந்தார். இது தற்காலிகமான இணைப்பு இதனை ஏற்க முடியாது என்றால், முஸ்லிம்களின் பிரச்சினையும் அதிகாரமல்ல, அலகுதான். நாங்களும் முஸ்லிம்களுக்கென்று தனி அலகொன்று தான் கேட்டிருக்கிறோம். அரசாங்கம் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை என்பதல்ல விடயம், நாங்கள் கேட்டிருக்கிறோம் என்பதுதான் உண்மை.

**முஸ்லிம்களுக்கான தனிமாகாணம் அல்லது தனி அலகு என்ற கோரிக்கை இன்று பலத்த சர்ச்சைக்குள்ளாகி இருக்கும் சூழலில் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுக்காக கோரும் தனி மாகாணம் தொடர்பான ஒரு தெளிவான விளக்கத்தை தருவீர்களா?**

அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களை மையமாகக் கொண்டு மட்டக்களப்பு, திருகோணமலையில் உள்ள கூடுதலான முஸ்லிம் பிரதேசங்களை உள்ளடக்கிய ஒரு தனிமாகாணம் ஒன்று கேட்டிருக்கிறோம். வடக்கு கிழக்கு இணைந்த மாகாணத்தினுள் சுயமாக இயங்கக் கூடிய தனி அலகொன்று தான் எமது கோரிக்கை. பாதுகாப்பு, சட்டம், கலாசாரம் இவைகளை பாதுகாக்கக் கூடிய, முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பேணக்கூடிய அலகொன்றுதான் முஸ்லிம் காங்கிரசின் கோரிக்கை. அந்தக்கோரிக்கையில் நாங்கள் உறுதியாகவிருக்கிறோம். அதற்கு எதிர்ப்புக்கள் இருக்கலாம். உதாரணமாக வடக்கு கிழக்கு இணைப்பு என்றவுடன் அன்று நாடு முழுக்க எதிர்ப்பு இருந்தது. இன்று அப்படி இல்லையே.

தமிழ் மக்களின் பிரச்சினையும் அதிகாரம் அல்ல, அலகுதான். வடக்கு கிழக்கு பிரிந்த நிலையில் எவ்வளவு அதிகாரங்களை வழங்கினாலும் தமிழ்த் தலைமைகள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இன்றுள்ள கேள்வி இதுதான். வடக்கு கிழக்கு இணைப்புக்கு அரசாங்கம் ஆயத்தமாக விருக்கிறதா? ஐ.தே.கட்சி ஆயத்தமாக விருக்கிறதா? அப்படியாயின் இணைந்த் வட கிழக்குக்குள் முஸ்லிம்களுக்கு ஒரு தனி மாகாணம் வழங்கத் தமிழ்த் தலைமைகள் தயாராக விருக்கிறதா என்பதுதான் கேள்வி. இக்கேள்விக்கு விடை கண்டபின் தான் நாங்கள் அரசியல் தீர்வைப்பற்றி பேசலாம். சர்ச்சைக்குரிய விடயம் இதுதான், அதிகாரமல்ல - அலகுதான்.

**இந்த முஸ்லிம் மாகாணக்கோரிக்கையில் அம்பாறை மாவட்டத்திலுள்ள 3 தேர்தல் தொகுதிகளான கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தொகுதிகளை உள்ளடக்கிய ஒரு முஸ்லிம் மாகாணத்தையாவது முஸ்லிம் காங்கிரஸ் பெற்றுக்கொள்ளும் என சொல்லப்பட்டிருக்கிறதே?**

கட்சி அப்படியொரு முடிவுக்கும் வரவில்லை. ஆனால் கட்சி இதுபற்றி ஆலோசித்தது. பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அப்படிஒரு வழிவகை இருக்குமாயிருந்தால், இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு நாம் தடையாக இல்லாமல் மட்டக்களப்பு, திருமலை மாவட்டத்திலுள்ள முஸ்லிம்களை எப்படி சட்டரீதியாக பாதுகாப்பது என்பது பற்றி ஆலோசிப்பதற்கு தயாராக விருக்கிறோம். எந்தக் காரணம் கொண்டும் இனப்பிரச்சினையை நீடிக்கக் கூடாது! அதனை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு நாங்கள் குறுக்கே நிற்க முடியாது!

மட்டக்களப்பையும், திருமலையையும் வடக்குடன் இணைத்தவுடன் முஸ்லிம்களின் விகிதாசாரம் மிகவும் குறைவடைந்து விடும். ஆகவே இம்மக்களின் உரிமைகளை எப்படி நாம் பாதுகாப்பது என்பது தொடர்பாய் ஆராய்கிறோம். இதனை அம்மக்கள் ஏற்றுக் கொண்டால் அம்மக்களின் பாதுகாப்பை இது உறுதிப்படுத்துமானால் பிரச்சினை இல்லை.

***வடமாகாண முஸ்லிம்களை பற்றி...***

மட்டக்களப்பு, திருமலை மாவட்ட முஸ்லிம்களுக்கு என்னென்ன உத்தரவாதங்கள், ஏற்பாடுகள் உள்ளனவோ அதுவே வடக்கு முஸ்லிம்களுக்கும் உரித்தாகும். அம்மக்களை மீளக் குடியேற்றுவதற்கும், அம்மக்களின் பாதுகாப்பிற்கும் உடனடி உத்தரவாதங்கள் தேவை!

—▷14

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மலையக மக்களை வகைப்படுத்தல்: ஒரு கண்ணோட்டம்!

பீ.மரியதாஸ்

சமூகம், அதன் உருவாக்கம், இயக்கம் பற்றி விளக்குவதற்கு சில அணுகுமுறைகள் கையாளப்படுகின்றன. இவ்வணுகுமுறைகள் தாம் பின்பற்றும் சமூகநலன் சார்ந்தவையாக அமைகின்றன. இதனால் இவற்றின் நோக்கும், தாக்கங்களும் பண்பு ரீதியில் மாறுபடுகின்றன. இவற்றின் தாற்பரியம் புரிந்து கொள்ளப்படும் போதே அதன் பயன்பாட்டின் நோக்கும், பலாபலனும் உணர்ந்து கொள்ளப்பட முடியும்.

### வர்க்கப் பிரிவு நோக்கும், சமூகப் படையாக்கும் நோக்கும்:

புறநிலையிலுள்ள உற்பத்திச் சக்திகள், காரணிகள், இவற்றின் விளைவான உறவுகள் பற்றிய ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டது வர்க்கப்பிரிவு நோக்கு. ஸ்தூல நிலைமைகளை கவனத்திற் கொண்டும், அவை பரிணாமமடையும் போக்கைக் கருத்திற் கொண்டும் இவ்விளக்கம் அமைகின்றது. இதனை அகண்ட பார்வையின் (MACRO OUT LOOK) பாற்பட்டது என்று கூறலாம். மனிதனின் உற்பத்தி நடவடிக்கைகளையும் அதனூடாக அவனிடத்திலெழும் கலை,கலாசாரம் போன்ற மேல் மட்ட அமைப்புகளையும் அடிப்படையாகக் கொண்ட இவ்வாய்வு முறை பூரணத்துவமானதாகவும், விஞ்ஞான பூர்வமானதாகவும் அமைகின்றது.

சமூக படையாக்க நோக்கமென்பது சாதி, சமய, பால், தொழில் அடிப்படைகளை ஆதாரமாகக் கொண்டதாக அமைகிறது. இதனை சமூக அமைப்புப் பற்றிய நுணுக்கு நோக்கு (MICRO OUT LOOK) எனலாம். இது ஸ்தூல நிலைகளின் ஆதார சக்திகளைப் பற்றியல்லாது மேலோட்ட நிலைமைகளைப் பற்றியே கரிசனை காட்டுகின்றது. இவ்விரண்டு நோக்குகளுக்கும் தொடர்பு இருக்கின்றது என்பதில் ஐயமில்லை. ஆனால் அவற்றின் நோக்குகள் வித்தியாசமானவை. ''தனது சமூக நிலைமைக்கேற்பவே ஒவ்வொருவரினதும் சமூகம் பற்றிய விளக்கமும் அமைகின்றது'' என்ற கூற்றிற்கும் மேலாக ''ஒவ்வொருவரினதும் சமூக நலனுக்கேற்பவே'' அவ்விளக்கம் அமைகிறது எனக் கூறுவது பொருத்தமானது. எனவே, இவ்விரு நோக்குகளுக்கும் இடைத்தொடர்பு இருந்தாலும் அவற்றின் குறிக்கோள்கள் எதிரெதிரான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியவை.

### மலைய மக்களைப் பற்றிய ஆய்வு:

மலைய மக்கள் என்ற சொற்றொடர் இன்று வாதப்பிரதிவாதத்திற்குட்பட்டதாகியுள்ளது. மத்திய மலைநாட்டு பெருந்தோட்டத் தொழிலாளர்களை மட்டுமே இது உணர்த்தக் கூடும் என்ற அச்சத்தினாலேற்பட்டதே இவ்வாத விவாதம்.

(இதனைப்பற்றி தனியாக விளக்க வேண்டியுள்ளது) இந்திய வம்சாவழித் தமிழர்களையே இங்கு இச்சொற்றொடர் குறிக்கின்றது. இம்மக்கள் நாட்டின் எல்லாப்பகுதிகளிலும் வசித்த போதிலும் இவர்களின் செறிவு மலை நாட்டிலென்பதும்; சுமார் 80 வீதத்தினர் பெருந்தோட்டத் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர் என்பதும் யாவரும் அறிந்ததே. இம்மக்களில் பெரும்பான்மையானோர் தொழிலாளர்களாக இருப்பதால் இவர்களை வகைப்படுத்துவதில் ஆழ்ந்த கரிசனை தேவைப்படுகின்றது.

### இன, வர்க்க அடிப்படையிலான பிரச்சினைகள்:

1930 வரை இம்மக்கள் பிரித்தானிய குடியேற்றவாதிகளின் அடக்குமுறைக்கும், சுரண்டலுக்கும் ஆட்பட்டிருந்தனர். அதற்குப் பின்னர் இனவாத அடக்குமுறைக்கும் ஆளாக்கப்பட்டனர். தற்போது இவ்விருவகை அடக்குமுறைகளுக்கும் அவர்கள் முகங்கொடுக்கின்றனர். இதனால் இவர்களின் பிரச்சினைகள் சிக்கலானதாகவும், ஆழ்ந்த நிதானத்திற்குரியனதாகவும் உள்ளன.

குடியேறிய நாள் முதல் பொருளாதார சுரண்டலுக்காளான இம்மக்கள் அதிலிருந்து தப்பித்துக் கொள்ளவே ஆரம்ப முயற்சிகளிலீடுபட்டனர். எனினும், கல்வியறிவின்மையாலும், புறத்தாக்கங்களின்மையாலும் இம்முயற்சிகள் ஸ்தாபன மயப்படுத்தப்படாத, சித்தாந்தத் தெளிவற்றனவாகவே இருந்தன. எனினும் இவர்களின் வெளிப்படா குமுறல்களின் தாற்பரியத்தை பிரித்தானியரும், அவர்களின் அதிகாரத்தில் பங்காளிகளாக இருந்த சுதேசிகளும் உணர்ந்தே இருந்தனர். இதனால் இவர்களின் பாதையை மாற்றவும், உணர்வு வளர்ச்சியை மழுங்கடிக்கவும் ஏற்பாடுகளை மேற்கொண்டனர். தம்மைச் சுற்றி வாழ்வாரோடு கலந்துரையாட வசதியின்றி வறுமையின் பிடிக்குள் துவண்டு, தோட்ட முகாமைத்துவத்தில் சகல வற்றிற்கும் தங்கி வாழ்ந்த இம்மக்கள் நடப்பவற்றையும், நடக்க இருப்பவற்றையும் அறிய முடியாதோராய் இருந்தனர்.

1930க்குப் பிந்திய கட்டங்களில் பிரித்தானியருக்கெதிராக எழுந்த உணர்வலைகள் புதிய பரிணாமம் பெற்றன. இதன் வீச்சு பெருந்தோட்டங்களையும் சென்றடைந்தது. இடதுசாரி அரசியற் கருத்துக்கள், தொழிற்சங்க ஸ்தாபிதம் போன்றவை இதன் வெளிப்பாடேயாகும். இடதுசாரி அரசியற் கருத்துக்கள் இம்மக்களின் விமோசனத்திற்கு ஏற்றவை என்பதனை உணர்வுபூர்வமாக நம்பினர். அதே வேளை நடேச ஐய்யரின் தொழிற்சங்கப் பணியும் இவர்களைக் கவர்ந்தது. தேசிய தொழிற் சங்க நீரோட்டத்தில் இனவாதத்தைப் புகுத்தி மாசுபடுத்திய ஏ.ஈ. குணசிங்காவின் தோழராயிருந்த நடேச ஐய்யருக்கு ஏற்பட்ட கசப்பனுபவம் மலையக தொழிற் சங்க இயக்கம் தனிவழியே போகும் நிலைக்கு அத்திவாரமிட்டது. எனினும் நடேச ஐய்யர் பொருளாதார சுரண்டலுக்கு எதிராகக் குரல் கொடுக்கத் தயங்கவில்லை. கூலி உயர்வு கோரல் என்ற வட்டத்திற்குள் - இது தொழிற் சங்கவாதம்-அவரது இப் போராட்டம் அடங்கியது.

அடுத்த கட்டம் இடது சாரிக் கட்சிகளின் தொழிற் சங்கங்கள் மலையகத்தில் பரவத் தொடங்கிய துடிப்பான கட்டமாகும். இரண்டாம் உலகப் போரின் காரணமாகவும், உணவுத் தட்டுப்பாடு காரணமாகவும் இவ் வளர்ச்சிப் போக்கு நீடிக்காமல் போனது. ஆனால் அதன் பாதிப்பு நீறு பூத்த கனலாக இருந்தது.

தென்னிந்தியர் இலங்கைக்கு குடிபெயர்தல், அவர்களுக்கேற்பட்ட பிரச்சினைகள் போன்றன பல ஆண்டுகளாக இந்திய அரசின் கரிசனையைப் பெற்றன. இதனைத் தீர்த்து வைக்க இலங்கை வந்த நேரு இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் தமது பிரச்சினைகளைத் தீர்க்க தமது பலத்தையே நம்ப வேண்டுமென்று கூறியதோடு அவர்களின் விமோசனத்திற்கு வழியாக ஓர் அமைப்பை உருவாக்கவும் ஆலோசனை கூறினார். அதன் விளைவாக உருவான இலங்கை இந்திய காங்கிரஸ் மலையக மக்கள் தேசிய நீரோட்டத்திற் கலக்காது தனிவழிப் போகக் காரணமாகியது.


### இனவாத விரிவும் வர்க்க பேத வாழ்வும்:

சுதந்திரம் கிடைத்ததோடு மலையக மக்களுக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. அவர்களின் அரசியல் அபிலாசைகள் வலது சாரியினருக்கு எரிச்சலைக் கொடுத்தன. அதிகாரத்தைப் பெற்ற ஐ.தே.க இவற்றின் பிரஜா உரிமையை பறித்தது. 1931 முதல் வாக்குரிமையை அனுபவித்த இம்மக்கள் வாக்குரிமை இழந்து தேர்தல்களில் பாதிப்பை ஏற்படுத்த முடியாத பகுதியினராயினர். இதனால் பாராளுமன்றப் பாதையை இறுசப் பற்றிய இடதுசாரி கட்சிகளுக்கும் இம்மக்கள் வேண்டாதோராயினர். அதனால் இம்மக்களும் அரசியல் அநாதைகளாக தமது தனித்த சங்கங்களை இவர்கள் முற்றாக நிராகரித்து விடவில்லை. அதே போன்று புதிதாகத் தோன்றிய இடதுசாரி சார்பு ஸ்தாபனங்களையும் அவர்கள் உதறித்தள்ளி விடவில்லை. ஏதோ ஒரு வகையில் இடதுசாரித்தன்மை இம்மக்களிடையே தொடர்ந்து காணப்பட்டது.

சுதந்திரத்திற்கு முந்திய இன சுமுக மனப்பாங்கு பின்னர் மாறத் தொடங்கியது. புதிதாக உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருகையோடு ஐ.தே.க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டும் சிங்கள இனத்தாரின் கூடிய நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவோர் தாமே எனக் காட்டிக் கொள்வதில் போட்டி போட்டனர். இதன் பாதிப்பு பாராளுமன்ற தேர்தல் வெற்றியைக் குறியாகக் கொண்ட இடதுசாரிக் கட்சிகள் மீதும் ஏற்பட்டது. எனவே வர்க்க அடிப்படையில் பிரச்சினைகளை அணுகுவதை விட இன அடிப்படையில் அணுகுவதே நடைமுறையானது.

சிறுபான்மையினரின் உரிமைகள் மேலும் மேலும் பாதிக்கப்பட அவர்களும் தத்தம் தனி அடையாளங்களினூடாகவே மீட்சிக்கான வழிமுறைகளைத் தேடினர். இவ்வாறு இந்நாட்டின் தேசியப் பிரச்சினைகள் இனவாதக் கண்ணோட்டத்தில், நோக்கப்படும் நிலை தோன்றியது தற்செயல் நிகழ்ச்சியல்ல. பிரித்தானிய ஆட்சிக் காலத்திலேயே இதற்கான வித்துக்கள் இடப்பட்டன. இலங்கை தேசிய காங்கிரஸ் உருமாறத் தொடங்கியதோடு சுதேசிகள் இம்மார்க்கத்தில் செல்லும் போக்கு ஆரம்பமானது. இலங்கை தேசிய காங்கிரஸ், தமிழர் மகாசபை, சிங்கள மகாசபை ஆகிய ஸ்தாபனங்களின் முன்னணித் தலைவர்களினதும் ஐ.தே.க, பொ.ஐ.மு. போன்ற கட்சிகளின் தலைவர்களினதும் பொருளாதார, சமூக பின்னணிகளை கவனத்திற் கொள்ளின் இதன் தாற்பர்யம் புரியும். அதே போன்று இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கை சமஷ்டிக் கட்சி ஆகிய தமிழ்க் கட்சிகளின் தலைவர்களின் பின்னணியும் ஒத்த தன்மையானவை என்பதனையும் கருத்திற் கொள்ள வேண்டும். மொத்தத்தில் சமூக யதார்த்த நிலைமைகளை உணர்வோடு (DELIBERATELY) புறந்தள்ளி, உணர்ச்சிகளை (EMOTIONAL) தட்டியெழுப்பும் வழிதிறந்து வைக்கப்பட்டது. இதனால் எந்தப் பிரச்சினையானாலும் இன அடிப்படையில் இனங்காணப்படவும், தீர்வு கோரப்படவுமான போக்கு ஏற்பட்டது.

1977க்குப் பின்னர் இன முரண்பாடுகள் தீவிரமாகத் தெரிந்தன. அப்போதே இனப்பிரச்சினையை சுலபமாகத் தீர்த்து, சுமூகப்பாட்டை ஏற்படுத்தியிருக்கலாம் என்று இன்று சிலரால் கூறப்படுகின்றது. ஏன் அவ்வாறு செய்யப்படவில்லை என்ற கேள்விக்கான விடையில் இத்தடம் மாற்றப்பட்ட சூழ்ச்சி அடங்கி இருக்கின்றது. இன்று நாட்டு மக்களைத் திணறச் செய்யும் பொருளாதாரப் பளு, தனியார், மயமாக்கத்தால் மக்கள் எதிர்கொள்ளும் சங்கடங்கள், தாராள மயத்தால் மக்களுக்கேற்படும் பாதிப்புக்கள் ஆகிய



→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வற்றை ஒரு புறத்திலும் அரசாங்கத்தின் செயல்களையும், பிரச்சாரங்களையும் மறுபுறத்திலும் வைத்து ஆராயின் இதன் சாராம்சம் புரியும்.

### மலைய மக்களும் வர்க்கக் கண்ணோட்டமும்:

மலையக மக்களில் சுமார் 80% பெருந்தோட்டத்துறையில் ஈடுபட்டவர்கள். 1977 க்குப் பின்னர் கணிசமான தொகையினர் (சுமார் 1 1/2 லட்சம் பேர்) வடகீழ் மாகாணங்களுக்குக் குடி பெயர்ந்துள்ளனர். ஏனையோர் பொதுத்துறை, தனியார் துறைத் தொழில்களிலும், வர்த்தகத்திலும், சுய தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளனர்.

ஆங்கிலேயராட்சிக் காலத்தில் இவர்கள் பயங்கர சுரண்டலுக்காளாயினர். சுதந்திரத்திற்குப் பின்னரும் நிலைமை சீரடையவில்லை. தொழிற்சங்க இயக்கம் வளர்ச்சி அடைந்த பின்னர் கூலி உயர்வு, வேலை நிலைமைகளில் ஓரளவு கெடுபிடி தளர்வு போன்ற மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் அவர்களின் வாழ்க்கையில் அடிப்படை மாற்றங்கள் ஏற்படவில்லை. பெருந்தோட்டத்துறை அரசாங்கப் பொறுப்பில் இருந்த போது அவர்களின் நிலைமை ஓரளவு திருந்திய போதிலும் தனியார் கம்பனிகளுக்கு தோட்டங்கள் கொடுக்கப்பட்டதன் பின்னர் கஷ்டங்கள் கூடியுள்ளன. இம்மக்களிடையே மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதினை மறுப்பதற்கில்லை. ஆனால் அடிப்படையில் தொடர்ந்தும் சுரண்டப்படுவோராகவே இருக்கின்றனர். இவ்வுண்மையைக் கருத்திற் கொண்டே இவர்களின் விமோசனத்திற்கான வழிவகைகளைக் காண வேண்டும்.

இதற்கான முதற்கேள்வி இவர்கள் யார் என்பதே. இவர்களில் பெரும்பான்மையானோர் தொழிலாளர்கள். அதுவும் நாட் கூலி பெறும் தொழிலாளர்கள். இவர்கள் எந்தவித சொத்துக்கும் உரிமையற்றவர்கள். இதனால் இவர்களால் உற்பத்தியில் அல்லது பங்கீட்டில் உழைப்பைத் தவிர வேறு எந்தவித செல்வாக்கினையும் செலுத்த முடியாது. அதனால் தனிச் சொத்துடைமை அமைப்பின் கீழ் இவர்களால் விமோசனமடைய மார்க்கமில்லை. எனவே இவர்களை வர்க்க அடிப்படையில் நோக்குவதே பொருத்தமானது.

இம்மக்களில் ஒரு சாரார் மத்திய வகுப்பினர் என்று கருதப்படுகின்றனர். இவ்வாறான கருத்து விவாதத்திற்குரியது. நீலநிற சட்டைத் தொழில், வெண்நிறச் சட்டைத் தொழில் (BLUE AND WHITE COLOUR JOBS) என்ற ஆங்கில மொழி மூலமான வகைப் பிரிவிற்குள் வேண்டுமானால் இப்பகுப்பினை அடக்கலாம். ஆனால் மலையக சமூகம் என்ற வன்ரயறைக்குள் மத்திய வர்க்கம் என்று துல்லியமாகக் கூறக்கூடிய கூறு ஒன்றை இனங்காண்பது கஷ்டம். பெருந்தோட்டங்களிலுள்ள மேற்பார்வையாளர்கள், இலிகிதர், தொழிற்சாலை உத்தியோகத்தர்கள், சமூக, வைத்தியத்துறை உத்தியோகத்தர்கள் ஆகியோர் தொழிலாளர்களிலிருந்து வேறுபட்டு இருப்பினும், வர்க்க அடிப்படையில் அவர்கள் மேலோங்கி இருப்பதாகக் கருத முடியாது. அதே போன்று பொதுத்துறையில் சிறிது கூடிய எண்ணிக்கையிலுள்ள ஆசிரியர்களையும் அவ்வாறு கொள்வதற்கான வாய்ப்புக்கள் குறைவு. விரல் விட்டெண்ணக் கூடிய தொகையினர் பொதுத்துறையில் வேறு சில மட்டங்களை எய்தியிருந்தாலும் அது ஒரு வர்க்கப் பிரிவுக்குள் அடக்கப்படக் கூடிய எண்ணிக்கையைக் கொண்டதல்ல. இவர்களைத் தவிர்த்துப் பார்ப்பின் வர்த்தகத் துறையில் ஈடுபட்டுள்ளோர் சற்று வித்தியாசப்பட்டுள்ளார்கள். தோட்டங்களில் பெட்டிக் கடை வைத்திருப்போர் உட்பட சிறு நகர்ப்புற வர்த்தகர்கள், பட்டினப் பகுதி வர்த்தகர்கள் ஆகியோர் இதிலடங்குவர். இப்பிரிவினருள் பட்டினப்பகுதி (CITY) வர்த்தகர்கள் முதலீட்டாளர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் தனியொரு வர்க்கப் பிரிவிற்குள் அடங்குவர். எனவே மலையகச் சமூகத்தார் தொழிலாளர், வர்த்தகர்கள் என இரு பிரிவுக்குள் அடங்கியோராகவே காணப்படுகின்றனர்.

### சமூகப் படையாக்க நோக்கு:

மக்களை இன, மத, சாதி, பால் ஆகிய அடிப்படைகளில் பிரித்து பிரச்சினைகளை ஆராய்வது சமூகப் படையாக்க நோக்காகும். இவ்வாறு நோக்குகையில் மலையக மக்களை தமிழரென்றும், இந்துக்கள், கிறிஸ்தவர்களென்றும், அவர்களிடையே கூறப்படும் பல்வேறு சாதியினரென்றும், ஆண், பெண் என்றும் பிரிக்க முடியும். இவை மாத்திரமன்றி வேறு அடிப்படைகளைக் கொண்டும் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கலாம். உதாரணமாக ஒவ்வொரு தொழிலிலும் காணப்படும் வேறுபாடுகளை வைத்து படைகளாகப் பிரிக்கலாம். இவ்வாறு பிரிக்கும் போது சமூகத்தின் பரவலான பண்புகள் பேணப்படாமல் தனித்துவப் பண்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அதாவது பொதுமைப் பண்புகள் புறந்தள்ளப்பட்டு, தனி அடையாளங்கள் முக்கியத்துவமடைகின்றன.

சமூக ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் சில வேளைகளில் தரவுகளைப் பெறுவதற்காக இவ்வாறான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவையும் சில தீர்மானங்களை எடுப்பதற்காகவே உதவுகின்றன. மலையக மக்களை இவ்வாறான ஆய்வுக்குட்படுத்தும் போது அவர்களிடையே இருக்கக் கூடிய தனிக்கூறுகள் வெளிப்படும். சிலவேளைகளில் உணரப்படாத, புலப்படாத கூறுகள் கூட வெளிப்படலாம். அதே போன்று அருகிக் கொண்டுவரும் கூறுகளும் வெளிப்படும். தகவல்கள் என்ற அடிப்படையில இவை உதவக் கூடும் என்றாலும் இவ்வாறான பண்புகளுக்கு முக்கியத்துவமும், அழுத்தமும் கொடுக்கும் போது ஏற்படும் பயன்பாடு வித்தியாசமானது. இவ்வாறான தனித்த கூறுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போது குறுகிய கண்ணோட்டம் ஏற்படும். அவை முனைப்படையின் வேண்டத்தகாத விளைவுகள் ஏற்படும். உதாரணமாக இன்றைய சமூக வளர்ச்சிக் கட்டத்தில் சாதியமைப்பு முறை அருகிவரும் ஒன்றாகும். இவ்வம்சத்தை முக்கியத்துவப்படுத்தினால் மக்களிடையே பிளவுகள் தான் தோன்றும். அவ்வாறு ஏற்படும் போது மக்களை ஐக்கியப்படுத்தக்கூடிய பண்புகள் மறைக்கப்படுகின்றன. திட்டமிட்ட சதியாக இது தொழிற்படுகிறது. ஆகவே சமூகப் படையாக்கப் பார்வை சமூக வளர்ச்சிக்கும், மாற்றத்திற்கும் தடையாகும் கண்ணோட்டமாக அமைகின்றது. ○





# பெண்புலிகளும் பெண்விடுதலைப் பிரச்சினையும்

## ஓர் எதிர்வினை

பெண்புலிகளின் வருகை மூலம் தமிழர் சமூகத்தின் பாரம்பரிய செயற்பாடுகளில் மாற்றம் கண்டுள்ளது. (தமிழ்ச் சமூகத்தின் இயங்கியலே மாற்றத்திற்குட்பட்டது) எனக்கூறி இம்மாற்றங்கள் கூட போரற்ற சூழல் ஒன்றில் மீள் நிலைக்கு வருமெனக்கூறுகிறார். ஆனால் மறுபுறத்தே அதே தமிழர் மரபியலையும், பாரம்பரிய கோட்பாடுகளையும் பிரதிபலிக்கின்ற சங்க இலக்கியத்தை இழுத்து அங்கே கன்னிப்பெண்கள் ஆயுதம் தரித்தவர்களாக இல்லை என்ற ஒரு காரணத்தைக் கூறி தற்போதைய மாற்றங்கள் கூட புலிகளின் கண்டுபிடிப்பே எனக்கூறுகிறார். எனக்கென்னவோ புலிகளின் கண்டுபிடிப்பு என்பது உண்மை போலத்தான் தென்படுகிறது. ஏனெனில், உலக விடுதலைப் போராட்ட வரலாறுகளை எடுத்துப்பாருங்கள். அங்கு புரட்சியாளர்கள் புதிய புதிய விடயங்களை உள்வாங்கித்தான் வளர்ச்சியெய்தி இருக்கிறார்கள். அது அவர்களின் கண்டுபிடிப்பாகக் கூட இருக்கலாம். உண்மையில் புலிகளை விமர்சிப்பதற்கு வேறுபல விடயங்கள் இருக்கின்ற போதும் இவர் முன்னுக்கு பின் முரணான முறையில் பெண் புலிகளின் வருகையை விமர்சிக்கிறார். ஒரு கட்டத்தில் தமிழர் பாரம்பரிய மரபியல் பெண்களை ஒடுக்குவதாக கூறுகிறார். மறுபுறத்தே அதே மறுப்பியலின் மூலம் பெண்கள் அனுபவித்த விடயங்களை புலிகள் மறுக்கிறார்கள் என்கிறார். இது ராதிகா குமாரசுவாமியின் முரண்பட்ட கூற்று அல்லவா?

புலிகளின் கருத்தியலில் சங்ககால இலக்கியங்களின் தாக்கம் இருப்பது உண்மைதான். குறிப்பாகபுலிகளின் புரட்சிப்பாடல்களில் சங்ககால சோழர்களின் ஆற்றல்களை, போர் வெற்றிகளை பறைசாற்றும் உணர்ச்சிக்குரிய விடயங்களை தமது பாடல்வரிகளில் சேர்த்திருக்கிறார்கள். இக் கருத்தியலுக்கு புலிகள் உட்பட்டிருப்பதற்குரிய காரணமாக சங்ககால தமிழர்கள் ஆற்றல்மிக்க அரசாட்சியுடையோராக இருந்திருக்கிறார்கள். எனவே தற்போதைய தமிழர்களுக்கும் அரசாட்சியை பெற தகுதியுடையோர் என்பதை வலியுறுத்துவதற்காகவும் இருக்கலாம். புலிகளின் பாடல்வரி ஒன்றில் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்றான் சங்கத் தமிழனவன் என்று பாடல்வரி செல்கின்றது. ஆம், சகல இனத்தவரையும் பாகுபாடின்றி அரவணைத்து மதித்த தமிழினம் இன்று மிதிப்பட்டுக் கிடக்கின்றது என்பதனை சொல்கிறது அந்தப் பாடல் வரி. ஆகவே புலிகளின் கருத்தியலில் சங்ககால இலக்கியங்களின் தாக்கம் இருப்பது வியப்புக்குரியது அல்ல.

சங்ககால தமிழ் இலக்கியத்தில் ஆயுதமேந்திய கன்னிகள் இல்லையென்பதை உறுதியாக கூறுகிறார். வேடிக்கைதான். இவர் சங்க இலக்கியத்தின் ஒரு வரிகளைக் கூட தொட்டிருக்கமாட்டார் போல இருக்கின்றது. ஏனெனில், சங்ககால தமிழ் இலக்கியங்களில் அரசிளங்குமரிகள் போர்ப்பயிற்சி பெற்றமையை பரவலாக அறியமுடியும். அவர்களின் வீரம், திறமை, மனோவலிமை என்பவற்றைக் கூறுகின்ற கவிதைகள், வரலாற்றுக் கதைகள் நிறைய உண்டு.

அடுத்து பெண் போராளிகள் சமதையாக நடாத்தப்படவில்லையென்றும் அவர்களது உரிமைகள் மறுக்கப்படுவதாகவும் ராதிகா குமாரசுவாமியால் கூறப்படுகிறது. இதுமேலும் ஆய்வுக்கும் விமர்சனத்துக்கும் உள்ளாக்கப்படவேண்டியதுதான். பெண்புலிகளின் வருகை பெண்விடுதலையில் முழுமையான வெற்றியை கண்டிருப்பதாகக் கொள்ளமுடியாது. ஆனால் ஏறுமுகம் ஒன்றை அது கண்டிருப்பது உண்மையே. இதனை முன் பகுதியில் ஓரளவுக்கு விளக்கியிருக்கிறேன். பெண் போராளிகள் சமதையாக நடத்தப்படவில்லை எனக்கூறும் ராதிகா குமாரசுவாமி அதற்கு கொடுக்கும் விளக்கம் வினோதமானது. பெண்களிடையே ஆண் மயத்தன்மையை தோற்றுவிப்பதாக கூறப்படுகின்றது. அதாவது பெண்கள் ஆண்களைப்போல் முடிவெட்டல், காதணிகளை அணியாமை போன்றவை இவற்றுக்கு இராணுவ காரணங்களே முதன்மை வகிக்கின்றன. நீண்ட தலைமயிருடன் போருக்குப்போதல் இடைஞ்சலாக இருக்கும். விலையுயர்ந்த ஆபரண்ங்களை அணித்துக் கொண்டு போருக்கு முட்டாள்கள்தான் போக முடியும். பெண் புலிகளில் வசதிகுறைந்த பெண்கள் காதணிகளை அணியமுடியாது இருக்கலாம். அதற்காக சகல பெண் புலிகளும் காதணி அணிவதை தவிர்த்திருக்கமுடியும். பெண் புலிகளில் மாற்றங்கள் உண்டென்பது உண்மைதான். அதற்கு வேறு பல காரணங்களும் இருக்கமுடியும். அதனை புலிகளிடம் தான் நாம் கேட்க வேண்டும்.

பெண்புலிகளில் திருமண பந்த பாச உறவுகள் சமூக கலப்பு என்பன தடை செய்யப்பட்டதாக கூறப்படுகின்றது. இவற்றில் எந்தளவுக்கு உண்மை இருக்கிறது என்பது தெரியவில்லை. ஆனால் புலிகளின் பத்திரிகை ஒன்றில் 25 வயதிற்கு மேற்பட்ட பெண்களும் 28 வயதிற்கு மேற்பட்ட ஆண்களும் விரும்பினால் திருமணம் செய்வதற்கு அனுமதி இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு அன்டன் பாலசிங்கத்தை தலைமையாகக் கொண்ட குழுவொன்றும் இயங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. தமிழர்கள் பாரம்பரியமாக பின்பற்றும் கலாசார மரபுகளின்படி சமூக அங்கீகாரம் பெற்ற திருமணத்தின் பின்பே பாலியல் இன்பம் பெறுவது அனுமதிக்கப்படுகிறது. இந்நிலையில் தமிழர் உரிமைகளுக்காக போராடுவதாகக் கூறும் அமைப்பு என்ன இனச்சேர்க்கைக்காகவா உறுப்பினர்களைச் சேர்க்கும். இந்நிலையில் புலிகளில் சேருவோர் எழுந்தமான மாக பாலியல் இன்பம் பெற அது ஒன்றும் ரஜினீஸ் சுவாமிகளின் குழுவல்ல. புலிகள் அமைப்பு சிறந்த கட்டுப்பாடான கெரில்லா அமைப்பு என்பதை சகலருமே ஏற்றுக் கொள்கிறார்கள். நிறைவான வாழ்வொன்றை மற்றவர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்காக தமது வாழ்வைப் பெண்புலிகள் தியாகம் செய்யக்கூடும். இதன் காரணத்தால் பெண்புலிகள் நிறைவான வாழ்வொன்றை நோக்கி தம்மை நகர்த்த உரிமையில்லை என அர்த்தப் படுத்தலாகாது.

ராதிகா குமாரசுவாமிக்கும் அவர் போன்ற பலருக்கும் ஒரு பணிவான வேண்டுகோள். யாழ்ப்பாணத்திலோ அல்லது கிழக்கிலங்கையிலோ சிறிது காலம் வந்து வாழ்ந்து பாருங்கள். அப்போது உங்களுக்கு தெரியவரலாம். பெண்கள் ஆயுததாரிகளாக ஏன் மாறினார்கள் என்பதை. தற்போதும் மாறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை. எனவே புலியெதிர்ப்பு மனநோயாளர்களுக்கு கூறவிரும்புவது என்னவென்றால், நீங்கள் புலிகளை விமர்சிக்க விரும்பினால், புலிகள் தமது போராட்டப்பாதையில் இழைத்த பாசிக் கொடுமைகளைக் கண்டியுங்கள். புலிகளால் மேற்கொள்ளப்பட்ட சகோதரப் படுகொலைகள், அப்பாவி சிங்கள, முஸ்லிம் சிவிலியன்கள் மீதான நியாயமற்ற படுகொலைகளை மாற்று கருத்துச் சுதந்திர மறுப்பு என்பவற்றைக் கண்டியுங்கள், விமர்சியுங்கள். புலிகள், அரசு என்பவற்றில் சமாதான ஈடுபாடின்மையை கண்டியுங்கள். மாறாக தமிழ்ச் சமூகம் எதிர்கொள்கின்ற கொடுமைகளுக்கு எதிரான நீதியான போராட்டங்களை கொச்சைப்படுத்துவதோ அறிவிலித்தனமாக விவாதிப்பதோ ஆரோக்கியமானதாக இருக்கப் போவதில்லை. இறுதியாக நான் கூறுவது என்னவென்றால், சமாதானப் பிரியர்களே, மனித உரிமைவாதிகளே, பெண்ணிலைவாதிகளே அடக்கு முறைக்கும், கொடுமைகளுக்கும் ஆளாகி மரணித்த மக்களின் புதைகுழிகளின் மேல் ஏறிநின்று உங்களது கோசங்களால் அவர்களை மீண்டும் மீண்டும் கொலைசெய்யாதீர்கள்.

*எஸ். ஜி. இராகவன்.* ○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேவை:

## அறிவு பூர்வமான நடவடிக்கை

எம்.எம். நாஹுல்ஹக்

சென்ற இதழ் தொடர்ச்சி..

''ஊர்காவல் படை என்ற பெயரில் ஊர் சுற்றித்திரியும் இளைஞர் தங்களின் எதிர்கால நிலையென்ன. இந்தப் போரில் தாங்கள் ஆற்றும் பங்கு என்ன என்பதை சிந்தித்துப் பார்க்கிறார்களா? துப்பாக்கி ஏந்துவதன் மூலம் சண்டையினை வாசலுக்கு வரவழைக்கும் அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் ஸ்ரீலங்கா படையின் யுத்த தந்திரோபாயத்தில் தாங்கள் பலியாகிக் கொண்டிருப்பதை உணர்வார்களா?''

மேற்படி கருத்துக்களை துரை அவர்கள் தெரிவித்திருப்பதன் மூலம் முஸ்லிம் ஊர்காவல் படையின் தோற்றம் அர்த்தமற்றவொன்று எனவும், இதனால் தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்ப்பையும், சண்டையையும் முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தை திணிக்கிறதென்ற கருத்தையும் நாம் விளங்கிக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

ஊர்காவல் படையினர்கள் அரச படைகளின் ஓர் அங்கம் போலிருந்தாலும், இதன் உருவாக்கத்திற்கு காரணமானவற்றுள் தமிழ் மக்களின் ஆயுத மேந்திய போராட்டக் குழுக்களும் அங்கம் கொள்வதை யாரும் மறைத்துவிட இயலாது.

இலங்கை முஸ்லிம்கள் சிங்கள, தமிழ் எனும் இரு சமூகங்களின் பேரினவாதப் போக்குகளில் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்பது வெள்ளிடைமலையானது.

முஸ்லிம்களின் பாதுகாப்பு முஸ்லிம் மக்களின் பிரதேசங்களின் பாதுகாப்பு என்ற வகையில் முஸ்லிம்களுக்குள்ளும் ஓர் ஆயுதம் தரித்த குழு இருக்க வேண்டிய ஒரு வரலாற்றுத் தேவையுடைய காலகட்டத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஆயினும் சட்ட ரீதியற்ற ஆயுதம் ஏந்துதலும், போராட்ட வழிமுறைகளிலும் முஸ்லிம்கள் முழுமையாக நம்பிக்கை வைத்து தொழிற்பட முடியாத ஒரு சூழலில் இலங்கை முஸ்லிம்களின் குடியிருப்பு, வாழ்க்கை அமைப்பு என்பன அமைந்திருப்பது அவர்களின் துரதிர்ஷ்டமான நிலையே.

இதுவே சட்டரீதியான அரச படைகளில் இணைந்து ஆயுதமேந்துவதின் இரகசியமுமாகும். இவர்களுள் முஸ்லிம் ஊர்காவல் படையினரின் நிலையோ வேறானது. முழுக்க முழுக்க முஸ்லிம்கள் வாழும் ஊரிலிருந்து ஊர்காவல் படையில் இணைந்து கொண்டோர்கள் பின்வரும் காரணங்களுக்காகவன்றி வேறில்லை என்பது மிகவும் நிதர்சனமானவொன்றாகும்.

முஸ்லிம்களின் ஊர்களுக்குள் 1985 களுக்குப் பின்னர் அடிக்கடி அத்துமீறி நுழைந்த ஆயுதக் குழுக்களின் அட்டகாசத்திலிருந்து முஸ்லிம்களைப் பாதுகாப்பது.

1990களில் தான் ஊர்காவல் படையின் அவசியத்தை வலியுறுத்தியோரும், இணைந்து கொண்டோரின் தொகையும் அதிகரித்து காணப்பட்ட காலமாகும்.

முஸ்லிம் ஊர்காவல் படையின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் தமிழ் மக்களின் ஆயுத மேந்திய குழுவினர்களின் அறிவுபூர்வமில்லா நடவடிக்கைகளும் பின்புலமாக அமைந்தனவென்பது நிதர்சனமானது. அவ்வாறாயின் தமிழீழ விடுதலைப் புலிகளும் இதில் ஓர் அங்கமாகும்.

முஸ்லிம் இளைஞர்கள் ஊர்காவல் படை என்ற அமைப்பில் இணைந்து தங்களூரினதும், தங்கள் சமூக மக்களின் உயிர், உடைமைப் பாதுகாப்பில் ஈடுபட்டனர் என்பது உண்மையாகும்.

மாறாக, ஆயுதப் போராட்டம் ஒன்றினை நடத்த வேண்டும். அதன் மூலமே நாம் இழந்த, இழக்கின்ற , இழக்கப்போகின்ற உரிமைகளைத் தவிர்க்கலாம் என்ற சிந்தனையில் முஸ்லிம்கள் தங்களை உட்படுத்திக் கொண்டிருக்கவில்லை.

தங்களின் உயிரிலும் மேலான இஸ்லாம் எனும் அறநெறிகளை கடைப்பிடித்தும், ஈமான் என்னும் விசுவாசப் பிரமாணங்களுக்கு மாற்றமாக வாழப் பணிக்காவிட்டால் சரிதான் என்று வாழ்ந்து வந்தவர்களே பொதுவாக இலங்கை முஸ்லிம்கள் ஆவார்கள்.



இத்தகையோர்களிடத்தில் தான் போராட்டச் சிந்தனைகள், சமூக விடியல், சுயநிர்ணய உரிமை போன்ற சிந்தனைகளையும், போராட்ட வடிவங்களையும் பற்றிச் சிந்திக்க வேண்டிய ஒரு நிலை தோன்றியதென்பது வரலாற்று நிர்ப்பந்தமாகவே இருக்க முடியும். ஆயுத கலாசார சூழலில் வாழ விரும்பாத முஸ்லிம்களும் அது பற்றிச் சிந்திக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டனர். ஆகையால் ஊர்காவல் படை எனும் அம்சத்தில் முஸ்லிம்கள் தங்களை இணைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

முஸ்லிம் ஊர்காவல் படையினர் தமிழ் மக்கள் மீது வெறுமனே காழ்ப்புணர்வு கொண்டு, அத்துமீறி நடந்து கொள்ளவில்லை. மாறாக, அவர்களின் கடமையின் போது, முஸ்லிம்கள் மீது ஆயுதக்கரங்கள் நசுக்கிக்கொள்கின்ற போதே முஸ்லிம் ஊர்காவல் படையினர் எதிர்ப்பு நடவடிக்கையில் இறங்குகின்றனர்.

ஆகவே, இத்தகைய நிலையில் இயங்கும் முஸ்லிம் ஊர்காவல் படையினர்களைக் கொல்வதென்பதும், அரசபடைகளைக் கொல்வதென்பதும் ஒரே நிகழ்வா? இது நியாயமான நிலைப்பாடுதானா? இது ஐக்கியத்திற்கான அணுகுமுறைதானா?

''ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர் குறுகிய லாபம் கருதி இனத்துவேச விதைகளை வீசி வாக்குச் சீட்டுக்களை அறுவடை செய்யும் அரசியல் முறையைப் பின்பற்ற காரணம் என்னவென்பது எவருக்கும் புரியாத புதிராகவே யுள்ளது. தாங்கள யாருக்காக உழைக்கின்றோம் என்று சொல்கிறார்களோ அதே முஸ்லிம் மக்களுக்காக ஒரு யுத்தமும், பகைமையும், கசப்பும், நிறைந்த புதைகுழி எதிர்காலமொன்றை அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை உங்களைப் போன்ற பொதுநல நோக்குடைய தலைமையாளர்கள் உணர வேண்டும். உணர்த்த வேண்டும்.'' இது துரையவர்களின் கூற்று.

சமாதானம், ஐக்கியம், அமைதி, பரஸ்பர உறவு என்பவை தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் ஏற்படுத்தப்படல் வேண்டும் என்ற நல்லெண்ணம் நடைமுறையில் கைக்கொண்டொழுகப்படுவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பங்களிப்பு இன்றியமையாத ஒன்றாகுமென்பது நாமின்று தெளிவாகக் காணும் உண்மையாகும்.

''இனத்துவேச விதைகளை வீசி வாக்குச் சீட்டுக்களை அறுவடை செய்யும்.'' ஓர் அரசியற் கட்சியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை சித்திரிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அவர்களின் இனவாதம் எது என்பதைக் கோடிட்டுக் காட்டாது கோட்டை விட்டதேன்? பொதுவாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இது வரை பங்கு கொண்ட தேர்தல்களின் போது பின்வரும் மூன்று காரணங்களையும் முதன்மைப்படுத்தப் பட்டதாக மக்கள் முன் தேர்தல் வாக்குறுதிகளாக வழங்கினர் என்பது நாடறிந்த நிஜம்.

(1) இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்துள் முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட தனியானதொரு மாகாண சபை அல்லது ஒரு அரசியல் அலகு பெறுதலுக்காக உழைத்தல்

(2) இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ் மக்களைப் போல் சகல உரிமைகளும் பெற்று வாழத் தகுதியான ஒரு தனித்துவமிகு தேசிய சமூகமே முஸ்லிம்கள் என்ற அந்தஸ்துக்காக உழைத்தல்.

(3) இலங்கை முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும், அதற்கான தீர்வுகளையும் அவர்களிலிருந்து தோன்றும் தனித்துவக் கட்சியினாலேயே அடையாளப்படுத்த முடியும் என்ற கோஷம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களின் பெரும் பகுதியினர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஆதரித்துள்ளனர் என்பதை தேர்தல் முடிவுகள் சுட்டிக் காட்டுகின்றன. ஆயின், அதன் செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது தவிர குறையவில்லை. இத்தகைய நிலையில் உள்ள கட்சி பற்றி குறைப்படுவதென்பது ஐக்கியத்திற்கு பங்கமாக அமையக்கூடும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆரம்ப காலந்தொட்டு அதன் கருத்துக்களில் மிக அவதானம் செலுத்தியவன் என்றவகையில் உறுதியாகக் கூற முடியும். இக்கட்சி தமிழ், முஸ்லீம் மக்களுக்கிடையில் நல்லிணக்கத்தையும், பரஸ்பர உறவையும் ஏற்படுத்தும் வகையில் தான் கருத்துக்களை முன் வைத்து வந்திருக்கின்றன, முன்வைத்து கொண்டிருக்கின்றன என்று.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரான கௌரவ அமைச்சர் அல்-ஹாஜ், எம்.எச். எம்.அஷ்ரப் (எல்.எல்.எம்) அவர்கள் இயல்பாகவே தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் ஒற்றுமை நிலவுவதற்கு ஒரு பாலமாகவும், சமூக ஐக்கியங்கள் பற்றிய கருத்துக்களில் மிக ஊறித் திளைத்தவரென்பதும் அவதானத்துக்குரியவைகளே.

உண்மைகள் இப்படி இருக்க அதற்கு மாற்றமான கருத்துக்களை அக்கட்சியின் மீது திணிக்க முற்படுவதென்பது மேலும் கசப்பான அனுபவங்களைத் தோற்றுவிக்கலாம் என்பதும் நாம் கவனஞ் செலுத்த வேண்டிய பக்கங்களே.

சுருங்கக் கூறுமிடத்து, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல் வெற்றியை மையமாக வைத்து தமிழ், முஸ்லிம் மக்களிடையே மோதலைத் தூண்டும் வகையிலோ, அல்லது இனத்துவேச முனைப்புடன் அதன் நடவடிக்கைகளை ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்பதுமே யதார்த்தமான வரலாறு.

''மார்க்கத்திற்குப் புறம்பான வழியில் அவர்களைப் போன்ற சிறுபான்மையினராகிய தமிழருக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டிருப்பதும் துரதிர்ஷ்டவசமானது.'' என துரை அவர்கள் குறிப்பிடுவதும் ஐக்கியத்திற்கு பங்கமான கூற்றே.

தமிழ் மக்களுக்கெதிரான மனோநிலையில் - கருத்துக்களில் முஸ்லிம்கள் நிலை கொண்டிருக்கின்றனர் என்ற வாதம் அர்த்தமற்றவொன்றாகும். ஒரு போதும் இத்தகைய நிலையில் முஸ்லிம்கள் இல்லை என்பதை பின்வரும் காரணங்களிலிருந்து தெட்டத் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

0 தமிழ் மக்களின் போராட்டம் அர்த்தமற்ற ஒன்று என பேரினவாத கட்சிகளின் அதியுயர் அரசியல் பீடத்தைச் சேராத எந்தவொரு முஸ்லிம்களும் கூறிக்கொள்ளாமை.

0 தமிழ் மக்களின் பிரதேசத்துள் இலங்கை பாதுகாப்பு படைகள் சுற்றிவளைப்புத் தேடுதலின் போது, முஸ்லிம் பிரதேசத்து தமிழ் இளைஞர்கள் மறைந்த வேளையில் முஸ்லிம்கள் காட்டிக் கொடுக்காமை.

0 தமிழ் மக்கள் மத்தியிலிருந்து எழுகின்ற நியாயமான கோரிக்கைகளுக்கு தடைக்கற்களாக இல்லாமலிருப்பது.

0 1985 களுக்கு முன்னர் தமிழ் போராளிகள் முஸ்லிம்களிடம் வந்து உணவு, உறைவிடம், கைச் செலவிற்காக பணங்கள் கேட்ட போது இல்லை என்று கூறாது கொடுத்துதவியது.

இப்படியிருந்தும் தமிழர்களுக்கெதிரானமனோநிலையுடையோர்களாக முஸ்லிம்களிருக்கின்றனர் என்று பக்கசார்பான கருத்துக்களை துரை அவர்கள் விரித்திருப்பது விவேகமற்ற நடவடிக்கையாகும்.

உண்மையில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் ஐக்கியம் முக்கியமானது. ஆயினும் அதனை கட்டி எழுப்புவதற்கு எந்தச் சமூகத்தினர் விட்டுக் கொடுப்புக்களையும், நம்பிக்கைகளையும்'' ஏற்படுத்த வேண்டிய பொறுப்பிலிருக்கின்றனர் என்பது முதலில் தெளிவு பெற வேண்டியது.

தமிழ், முஸ்லிம் மக்களிடமிருந்து இன்று முன்வைக்கப்படும் கோரிக்கைகளின் நியாயபூர்வமானவைகள் செத்துவிடாத நிலையில் இவ்விரு சமூகங்களும் சுமுகமாக அதே நேரம் தனித்துவம் கசங்காத நிலையில் விட்டுக் கொடுப்புக்களில் கவனஞ் செலுத்திக் கொள்ளல்.

கடந்த கால கசப்பான அனுபவங்கள் இனங்காணப்பட்டு, எதிர்காலத்தில் அவற்றினைத் தவிர்த்துக் கொள்வதற்கான உத்தரவாதங்களை இவ்விரு சமூகத்தினர்களும் ஏற்படுத்துதல்.

சந்தேகப்பார்வைகள் மறையப் படக்கூடிய வகையில் இவ்விரு சமூகங்களும் தங்களை மாற்றிக் கொள்வதோடு நம்பிக்கைகள் ஏற்படக்கூடிய வகையில் எதிர் காலத்தில் தங்கள் நடவடிக்கைகளை ஏற்படுத்திக் கொள்ளல்.

இவ்வாறான வழிமுறைகள் மூலமே தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் ஐக்கியம் ஏற்படுத்தும் முயற்சிகள் நடைபெற முடியும் தவிர வேறுவழியில் அல்ல.

முன்னர் சமூக மோதல் ஏற்படக் காரணமாக இருந்தவற்றில் ''விடாப்பிடியாக'' தொங்குவது நல்லதல்ல.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஒதுக்கிவிட்டு வேறு எந்த முஸ்லிம் அமைப்புக்களுடன் இணைந்து கொண்டு எத்தனை சமரச முயற்சிகள் மேற்கொண்டாலும் அவைகள் தோல்வியைத் தழுவ வல்லன என்பது தமிழீழ விடுதலைப் புலிகள் உணரத்தக்க உண்மையாகும்.

முன்னர் ''கிழக்கு இலங்கை முஸ்லிம் முன்னணி''யுடன், தமிழர் விடுதலைக் கூட்டணி ஓர் இணக்கப்பாட்டை ஒப்பந்தமாக்கிக் கொண்டது. அது நடைமுறைக்கு வராமற் செயலிழந்து போனது. அந்த இணக்கத்தை உருவாக்க மும்முரமாக உழைத்தவர்களுள் பெரும்பகுதியினர் இப்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்ஸில் இணைந்துள்ளனர்.

இவைகள் எல்லாம் நமக்குணர்த்துவது என்ன? வடக்கு, கிழக்கு முஸ்லிம்களினது அரசியல் சக்தியாக ஸ்ரீலங்கா முஸ்லிம்

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிதைந்த நம்பிக்கை!

எந்தவொரு தேசிய அரசும் இன ஒடுக்கல் கொள்கையைக் கையாளும் போது குறித்த சிறுபான்மையினம் அதற்கெதிரான ஜனநாயக ரீதியிலான எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல் லும். காலப்போக்கில் இது அரச சார்புசக்திகளால் இரும்புக்கரம் கொண்டு நசுக்கப் படும். அதிலிருந்து துளிர் விடும் போராட்ட வடிவம் ஆயுத ரீதியிலான கெரில்லா அமைப்பைக் கொண்டதாக இருக்கும்.

**வன்முறையின் விளைவு:**

இலங்கையிலும் இனரீதியிலான ஒடுக்கு முறைகள் காலத்துக்குக் காலம் இடம் பெற்று வந்துள்ளன. இது தமிழ் மக்களை மட்டுமல்ல, முஸ்லிம் மக்களையும் பாதிப்புக்குள்ளாக்கிய ஒரு விடயம் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் ஆதாரமாகவுள்ளன. இதற்கு 1915ம் ஆண்டு ஏற்பட்ட சிங்கள முஸ்லிம் கலவரம், 1962ம் ஆண்டு ஏற்பட்ட சிங்கள இனத்தின் முஸ்லிம்கள் மீதான அத்துமீறல், ஏன்? தற்போது கூட தென்னிலங்கையில் ஏற்படும் சிறு சிறு சம்பவங்களைக் கூட உதாரணமாகக் காட்டலாம். இருந்தாலும் முஸ்லிம் மக்களை விட தமிழ் மக்கள் மீது சிங்கள இனவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை அழுத்தம் கூடியது என்பதை மறுப்பதற்கில்லை. இதற்கு அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழ மக்களிலிருந்து ஆயுதம் தாங்கிய இளைஞர் படையொன்று தோற்றம் பெற்றதை முக்கிய காரணமாகக் கொள்ளலாம்.

**முஸ்லிம்களின் ஆதரவு:**

1983க்கு முற்பட்ட காலங்களில் மிக மந்தமாக இருந்த தமிழ் இயக்கங்களின் ஆயுதப்போராட்ட வடிவம் 1983 ஜூலையில் தென்னிலங்கையில் தமிழ் அப்பாவி மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட காட்டுமிராண்டித்தனத்தின் பின்னர் மிகத் தீவிரமடைந்து தமிழீழம் ஒன்றைத் தோற்றுவிப்பதற்கான முனைப்பை அதிகப்படுத்தியது என்று கூடக்கூறலாம். இக்கால கட்டத்தில் தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்திற்கு முஸ்லிம்கள் மதிப்பளித்து வந்ததுடன் முஸ்லிம் வாலிபர்களில் சிலரும் நேரடியாக ஆயுதக் குழுக்களுடன் இணைந்து செயற்பட்டும் வந்தனர் என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மை. அரசுக்கு எதிரான தமிழ் ஆயுதக்குழுக்களின் போராட்டம் நியாயமானது என்பதை முஸ்லிம்கள் முழுமனதாக ஏற்றுக்கொண்டிருந்தனர். ஆயுதம் தாங்கிய தமிழ் அமைப்புக்களை நசுக்கிவிட வேண்டுமென்ற வேட்கையுடன் இலங்கை அரச படைகள் செயற்பட்ட காலகட்டத்தில் தமிழ் இளைஞாகளுக்கு முஸ்லிம்கள் அடைக்கலம் வழங்கியதோடு மட்டுமல்லாமல் பண உதவிகளையும் செய்து வந்திருந்தமைக்கு வரலாற்றுச் சான்றுகள் நிறையவே உள்ளன.

முஸ்லிம் மக்களுக்கு தனி நாடொன்றைப் பெற்றுக்கொள்வதில் உடன்பாடு இல்லாமல் இருந்தாலும் கூட தமிழ் இளைஞர்களின் நியாயமான போராட்டத்தை அங்கீகரிக்கத்தவறவில்லை. மொழி ரீதியாக சிங்கள, முஸ்லிம் மக்கள் வேறுபட்டுக் காணப்பட்டாலும் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் முஸ்லிம்களின் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருந்தமையும் (அம்பாறை மாவட்டத்தில் தீகவாபி புனித பிரதேசத் திட்டத்தின் மூலம் 100 வருடங்களுக்கு மேல் ஆட்சி செய்து வந்த நிலங்கள் சிங்கள அரசால் ஆக்கிரமிக்கப்பட்டமை, கரும்புச் செய்கையைக் காரணம் காட்டி முஸ்லிம்களின் பிரதேசமான வட சேரியா, கள்ளியம்பத்தை, மேல் கண்டம், வைரத்தடி, உம்மாரி, நெட்டுறாம்புல், கொண்டவட்டுவானின் சில பகுதிகள். இது போன்ற முஸ்லிம்களின் பல பாரம்பரிய பிரதேசங்கள்) உயர் பதவிகளில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப் பட்டமையும், கல்வி, வேலை வாய்ப்புக்கள், பல்கலைக்கழக அனுமதி புறக்கணிக்கப்பட்டமையும், சிங்களப்பேரினவாதிகள் மீது முஸ்லிம்கள் வெறுப்புக்கொள்ளக் காரணமாயிருந்தது. இதுவே காலப் போக்கில் சிங்கள அரசுக்கெதிராக தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திய போராட்டத்தில் ஈடுபட்ட போது அதற்கு முஸ்லிம்கள் முழு ஆதரவையும் வழங்க முற்பட்டமைக்கான முக்கிய காரணங்களெனக் கொள்ளலாம்.

> **தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்திற்கு முஸ்லிம்கள் மதிப்பளித்து வந்ததுடன் முஸ்லிம் வாலிபர்களில் சிலரும் நேரடியாக ஆயுதக் குழுக்களுடன் இணைந்து செயற்பட்டும் வந்தனர் என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மை. அரசுக்கு எதிரான தமிழ் ஆயுதக்குழுக்களின் போராட்டம் நியாயமானது என்பதை முஸ்லிம்கள் முழுமனதாக ஏற்றுக் கொண்டிருந்தனர்.**

**தவறான வழிமுறை:**

அடக்கு முறை அரசுக்கெதிராக ஆயுதப்போராட்டத்தில் தமிழ் இளைஞர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொண்டமை தமிழ்ச் சமூகத்தில் அவர்கள் மீது ஒரு கௌரவத்தை தோற்றுவித்தது. இதன் விளைவாக ஒரு காலகட்டத்தில் பெரும்பாலான தமிழ் இளைஞர்கள் ஆயுதப் பயிற்சியில் தீவிர அக்கறை காட்டினர். இதற்காகத் தமிழ் நாட்டின் பல முகாம்களில் ஆயுதப் பயிற்சியைப் பெற்றதோடு ஆயுத உதவிகளையும் பெற்று வந்தனர். காலப்போக்கில் தமிழீழத்துக்கான போராட்டப் பாதையில் இறங்கிய தமிழ் இளைஞர்கள் குழுக்களாகப்பிரிந்து தங்களுக்கிடையே மோதிக்கொள்ளத் தலைப்பட்டனர். பல இயக்கங்களாக தங்களை இனங்காட்டிக் கொண்டனர். தமிழீழம் என்ற உன்னத இலட்சியத்தை அடைவதற்காகத் தம்மை அர்ப்பணித்த இளைஞர்கள் காலப்போக்கில் ஆயுதங்களை தவறான வழியில் பிரயோகிக்க முற்பட்டனர். இவர்களின் ஆயுதங்களுக்கு முன் மனித உயிர்களுக்கு எவ்வித பெறுமதியும் இல்லாமல் போய்விட்டது. தங்களின் சொந்த குரோதங்களைத் தீர்ப்பதற்கும், பொதுமக்களின் சொத்துக்களை கொள்ளையிடுவதற்குமாக ஆயுதப்போராட்ட வரலாற்றுக்கு மாசு கற்பிப்பதில் வெற்றியும் கண்டனர். தமிழினம் தங்களுக்கிடையே பலப்பரீட்சையைத் தோற்றுவித்ததன் மூலம் பெறுமதிமிக்க ஆயிரக்கணக்கான உயிர்கள் மண்ணோடு மண்ணாகிப் போனது, தமிழினத்தின் உரிமையை உறுதிப்படுத் திக் கொள்வதற்காகவும், சுய கௌரவத்தைப் பேணிக்கொள்வதற்காகவும், தோற்றம் பெற்ற ஆயுதப்போராட்ட வரலாற் றில் மிக வெட்கக்கேடான விடயம் என்னவென்றால், ஒரு பெரும்பான்மையினத்தின் அட்டூழியங்களுக்கும், அடக்கு முறைகளுக்கும் எதிராகப் போராடப் புறப்பட்ட ஒரு சிறுபான்மை இனம் இன்னொரு சிறுபான்மையினத்தை அதுவும் தன் பக்கத்து வீட்டுக்காரனை ஆயுத முனையில் அடக்கியாள முற்பட்டதேயாகும்.

**சின்னாபின்னமான நம்பிக்கை:**

1992ம் ஆண்டு வெளியான ''ஈழத்தின் இன்னுமொரு மூலை'' என்ற புத்தகத்தின் தரவுகளின்படி ஆயுதமேந்திய தமிழ் இயக்கங்களால் சம்மாந்துறையில் மட்டும் படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம்கள் 132 எனவும், படுகாயமடைந்தவர்கள் 54 எனவும் பெயர் குறித்துக் காட்டப்படுகின்றது. மேலும் சம்மாந்துறையில் 1989.05.17ம் திகதி மட்டும் தமிழ் தீவிரவாதிகளால், சேதமாக் கப்பட்ட அல்லது கொள்ளையிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி சுமார் ரூபா. 250 மில்லியன்களெனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது வடகிழக்கு மாகாண ரீதியாக கணிப்பிடப்படும் போது நமக்கு அதிர்ச்சி தரும் கணிப்பீடாகவே இருக்க முடியும்.

தமிழீழத்திற்கான ஆயதப்போராட்டத்தில் முஸ்லிம்கள் கொண்டிருந்த நம்பிக்கை மேற்கூறப்பட்ட நடவடிக்கை களால் சின்னாபின்னமாகிப் போனது. ஆயுதமேந்திய தமிழ் இளைஞர்கள் மீது சொல்ல முடியாத வெறுப்புத் தோன்றியது. ஒரு காலகட்டத்தில் சிங்கள இனவாதிகளின் திட்டமிட்ட சுரண்டல் களால் விரக்தியடைந்த முஸ்லிம்கள் எப்படி தமிழ் இயக்கங்களுக்கு ஆதரவு வழங்க முற்பட்டனரோ அதே போல் தமிழீழப்போராட்டத்தை நசுக்க முற்பட்ட அரச படைகளை வரவேற்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர். இந்நிகழ்வுகளால் முஸ்லிம்களிலிருந்தும் சில பிரதேசங்க ளில் ''ஜிஹாத்'' என்ற போராட்ட அமைப்பு தோற்றம் பெற்றது. இது தமிழ் இயக்கங்களைப்போல் வளர்ச்சியடையவில்லை. இவர்களின் நோக்கம் தமிழீழம் கோருவதாகவோ அல்லது முஸ்லிம்களுக் கென்ற ஒரு பிரதேசத்தைப் பெற்றுக் கொள்ளும் போராட்டமாகவோ இருக்கவில்லை. தமிழ் ஆயுதக்குழுக்களின் அட்டகாசங்களுக்கெதிரான போராட்ட மாகவே இருந்தது. இருந்தாலும் தமிழ் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களுக்கு முன்னால் இவர்களால் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பிரயோசனங்களை அடைய முடியவில்லை. காலப்போக்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் அரசியல் எழுச்சியின் பயனாக இவ்வமைப்பு அரசியல் ரீதியான போராட்டத்தில் நம்பிக்கை கொள்ளத் தலைப்பட்டது. ''ஜிஹாத்'' தோற்றம் பெற்றிருந்த காலத்தில் சில அப்பாவித் தமிழ் மக்களும் பாதிக்கப்பட்டிருந்தனர் என்பதையும் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். இருந்தாலும் தமிழ் இயக்கங்கள் முஸ்லிம்களுக்கு விளைவித்த கொடுமைகளுடன் ஒப்பிடும் போது மிகச் சொற்பம் என்றே சொல்லலாம்.

சகல இயக்கங்களும் தமிழீழத்திற்காகப் போராடிக்கொண்டிருந்த போது இந்திய தலையீட்டினால், 1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. சில இயக்கங்கள் அரசியல் அதிகார ஆசை காரணமாகவும் சில இயக்கங்கள் நிர்ப்பந்தம் காரணமாகவும் இலங்கை -இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு தமிழீழப்போராட்டத்தை கைவிட்டதுடன் 'ஜனநாயக' நீரோட்டத்திலும் குதித்தன. ஆனால் விடுதலைப்புலிகள் இயக்கம் இந்திய அரசின் நிர்ப்பந்தம் காரணமாக தமிழீழப் போராட்டத்தைக் கைவிட்டதாகக் கூறினும் இலங்கையில் தமிழீழம் ஒன்றை உருவாக்குவதே அவர்களின் எதிர்காலத் திட்டமாகவும் இருந்தது. காலப் போக்கில் இந்திய இராணுவத்துடன் நேரடியாக யுத்தத்தில் ஈடுபட்டதோடு தங்களுடைய இலட்சியம் ''தமிழீழம் ஒன்றே'' என்பதை மீண்டும் திட்டவட்டமாக உறுதிப் படுத்தினர்.

**மோசமான கால கட்டம்:**

ஏனைய இயக்கங்கள் தமிழீழக் கோரிக்கை யைக் கைவிட்டாலும் அவற்றுள் சில தமிழ்த்தேசிய இராணுவம் என்ற பெயரில் கூட்டு இராணுவ அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு செயற்படலாயினர். இந்நிகழ்வின் மூலம் தமிழ் மக்களைப் பொறுத்த வரை தங்கள் இனமே தங்களை ஆள வந்ததையெண்ணி பெருமைப்பட்டுக் கொண்டனர். இருந்தாலும் முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை மிகவும் அச்சமும் நம்பிக்கையீனமும், கொண்டவர்களாகக் காணப்பட்டனர். இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலகட்டத்தில் தமிழ் தேசிய இராணுவத்தால் முஸ்லிம்கள் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்து வந்தனர். இதுவே இலங்கையில் முஸ்லிம்களின் வரலாற்றில் மிக மோசமான கால கட்டம் என்று சொன்னால் மிகையாகாது.

இப்போதும் கூட தமிழ் மக்களின் நியாயமான உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய கடப்பாடு முஸ்லிம்களுக்கு இருக்கின்றது. அது ஒரு போதும் முஸ்லிம்களுக்கு எதிரான போராட்டமாக இல்லாத வரை. தமிழீழப்போராட்டத்துக்கு ஒரு காலகட்டத்தில் முஸ்லிம்கள் வழங்கிய ஆதரவைப்போல் எதிர் வரும் காலங்களிலும் பழைய விடயங்களை மறந்து ஏற்றுக் கொள்ளத் தக்க தமிழ் மக்களின் நியாய மான உணர்வுகளுக்கு தொடர்ந்தும் முஸ்லிம்கள் ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இன்னும் அழிந்து போக வில்லை. இலங்கைத் திருநாட்டில் சகல இனங்களும் இறைமை மிக்கவர்களாக வாழ வேண்டுமென்பதே முஸ்லிம்கள் மட்டுமல்ல, இனசமத்துவ உணர்வு கொண்ட சகல இனத்தவர்களும் வேண்டிக் கொள்ளும் ஒரு விடயமாகும்.

நடந்தவைகள் கசப்பானவையாக இருந்தாலும், நடக்கப்போவது நல்லதாக அமையட்டும்.

- ஏயெம்மே நிஸாம்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வெஞ்சர் தோட்டத்தில் பெ



திருமதி செல்லம்

"நாங்க என்னத்தத்தான் அவங்களுக்கு செஞ்சோம். அவங்களுக்கு ஒண்ணுமே செய்யலியே. நியாயத்த தானே கேக்கப் போனோம். அதுக்கு போயி ஏனுங்க இத்தனை பெரிய கொடுமை."

ஜனவரி.3ம் திகதியன்று நோர்வூட்-வெஞ்சர் தோட்ட நிர்வாகம் அத்தோட்டத்தின் தொழிலாளர்கள்மீது பொலிஸாரை ஏவி கொடூரமாகத்தாக்கி விரட்டடியதுமல்லாமல் அவர்கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டை எறிந்து நடத்திய அட்டுழியங்களைப் பற்றி ஒரு அப்பாவி தொழிலாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்டதன் பின் ஏற்கெனவே அடிமை நிலைக்குள் தள்ளப்பட்டு இலங்கையிலேயே பின்தங்கிய வாழ்க்கைத்தரத்தை அனுபவித்து வந்த மலையகத் தொழிலாளர்கள், மேலும் மோசமாக கீழே தள்ளப்பட்டுவிட்டார்கள். நாளுக்கு நாள் அதிகார வர்க்கத்தினாலும் தம்மை நேரடியாக ஆதிக்கம் செலுத்தி வரும் கம்பனிகளாலும் மேற்கொள்ளப்பட்டுவரும் அநியாயங்கள் அடக்கு முறைகள் என்பவற்றினால் மிகச் சோகத்துக்குரிய அவலத்தை அனுபவித்து வருகிறார்கள். இதற்கு வெஞ்சர் தோட்டத்தில் கம்பனி முதலாளிகளும் கூலிப்படையினரும் கூட்டாக நடத்திய காடைத்தனம் ஒரு சிறந்த சான்று. எவ்வித எதிர்ப்பு நடவடிக்கையோ, போராட்டமோ நடத்தாது தமக்கு நேர்ந்த கொடுமைகள் குறித்து நியாயம் கேட்கச் சென்றதற்கே இப்படியான அடக்கு முறையென்றால் அங்கு நிலவுகின்ற சூழலை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இந்த அவலத்தை தட்டிக் கேட்க இதுவரை எந்தவொரு சரியான தலைமையும் இல்லாதது என்றும் தீர்மானித்தனர்.

அடுத்த நாள் ஜனவரி 3ம் திகதி காலை 8 மணியளவில் ஏறத்தாழ 300க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தொழிற்சாலையின் அருகில் கூடினர். தோட்ட அதிகாரிகள் முன்னிலையில் அவர்கள் தமது கோரிக்கைகளான 21 பெண் தொழிலாளர்களுக்கும் முழுநாள் சம்பளத்தைப் பெறுவது, மற்றும் லாபத்தில் 10 வீதத்தை பெறுவது ஆகியவற்றைக் கோரினர். கூட்டத்தினர் மீது அதிகாரிகள் மோசமான வார்த்தைகளால் திட்டியுள்ளனர். அதற்கிடையில் தோட்ட (சுப்பிரின்டன்ட்) அதிகாரிக்கு இத்தகவல் ஏனைய அதிகாரிகளால் அனுப்பப்பட்டிருந்தது.

### யாருக்காக பொலிஸ்?

சரியாக மணி 11.00 ஐ நெருங்கிக் கொண்டிருந்தது. அவ்விடத்துக்கு தோட்ட அதிகாரியின் வாகனமும் அதன் பின்னால் பொலிஸார் நிறைந்த வாகனமும் வந்து சேர்ந்தது. தோட்ட அதிகாரி வரும் வழியில் நோர்வூட் பொலிஸாரைச் சரி செய்து கூடவே அழைத்து வந்திருப்பதை தொழிலாளர்கள் தெரிந்து கொண்டனர். வந்திறங்கிய அதிகாரி ஏனைய அதிகாரிகளுடனும் பொலிஸாருடனும் கூடிக் கதைத்தார். தொழிலாளர்கள் தூரத்தே நின்று அவதானித்துக் கொண்டிருந்தனர்.

அதிகாரி வந்து கூறினார், "எதையும் ஏற்க முடியாது. இடத்தை விட்டு போங்கள்... இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்களுக்கு காட்டுகிறேன் விளையாட்டு. நான் பதில் சொல்லப் போவதில்லை. பொலிஸார் பதில் சொல்வார்கள்.!" என கத்தினார்.

தொழிலாளர்கள் ஏற்கெனவே பதட்டமடைந்திருந்தனர். நாங்கள் என்னத்தை பண்ணிபோட்டோம்? ஏன் பொலிஸாரை இவர்கள் அழைத்து அம்மக்களின் அவலத்தின் உச்சமென்றே சொல்லலாம். இந்த வெஞ்சர் தோட்ட சம்பவத்தைப் பொறுத்தளவில் உண்மை நிலையைக் கண்டறியச் சென்ற எமக்கு, மலையகத்தின் பலம்பொருந்திய அமைப்பான இ.தொ.கா கூட கம்பனியின் நடவடிக்கைக்கு துணைபோகின்ற நிலையை காணக் கிடைத்தது.

### ஆரம்பம்: முழு நாள் வேலை. அரை நாள் கூலி!

கடந்த ஜனவரி 2ம் திகதியன்று வழமைபோல் தொழிலாளர்கள் தமது வேலையைச் செய்தனர். பெண் தொழிலாளர்கள் எல்லோரும் தாம் பறித்த கொழுந்தை கொண்டு சென்று போட்டதன் பின் அவர்களில் 21 பேருக்கு அரைநாட் சம்பளமே போட்டனர். அத்தொழிலாளர்கள் 'இது அநியாயம் இவ்வளவு நேரமும் வேண்டா வெய்யிலில் வேலை செய்தும் அரைபேர் (அரை நாள் சம்பளம்) போடுவது அநியாயம் என்று கெஞ்சினர். ஆனால் நிர்வாகம் அதனை ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லை. சில மணிநேரம் காத்திருந்து கெஞ்சியும் அன்று முடிவாகவே கூறிவிட்டனர்.

"இவ்வளவு நேரம் வேல செஞ்சும் இவ்வளவு கொழுந்து தான் பிச்சிங்களா?"

என்னங்க புரியாம பேசுரீங்களே! கொழுந்து இருந்தா தானுங்களே பிக்கிறதுக்கு.."

"அதெல்லாம் எனக்குத் தெரியாது அரைநாள் போட்டது போட்டது தான்.!"

அன்று தொழிலாளர்கள் அனைவரும் வீடு திரும்பியதன் பின் அத்தோட்டத்தைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவர்கள் கூடி கதைத்தனர். காலையில் துரையிடம் சென்று இது பற்றி கதைப்பது என்றும் கூடவே தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய 10 வீத லாபத்தையும் கேட்பது வந்திருக்கிறார்கள். அப்படி வந்தாலும் எங்களது நியாயத்தின் தரப்பிலல்லவா அவர்களும் இருக்க வேண்டும்? ஏன் எங்களின் நியாயத்தைக் கூட கேட்காது அவர்களுடன் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள்?" என கலவரமடைந்திருந்தனர்.

### அடித்து நொறுக்கப்பட்ட தொழிலாளர்கள்

கொஞ்ச நேரத்தில் பொலிஸாரின் திசையை நோக்கி சைகை காட்டப்பட்டது. தொழிற்சாலையின் வாசலில் இருந்த தொழிலாளர்களை நோக்கி "எல்லோரும் ஓடுங்கள்" என சத்தமிட்டுக்கொண்டே எட்டுப் பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்தனர். ஆண், பெண் தொழிலாளர்கள் அத்தனை பேரின்மீதும் கடும் தாக்குதல் நடத்தப்பட்டது. கண்மண் தெரியாமல் அடித்து நொருக்கினர். எதிர்பாராத தாக்குதலை சமாளிக்க முடியாத நிலையில் தொழிலாளர்கள் ஓட்டமெடுத்தனர். தொழிற்சாலையின் வாசலைத் தாண்டியதும் வாசற் கதவை இறுக்கி மூடிக்கொண்டனர்.

தொழிற்சங்க தலைவர்கள் தொழிலாளர்களை நோக்கி அனைவரையும் போய்விட வேண்டாம் என அறிவுறுத்தினர். பலர் காயப்பட்ட நிலையில் வாயிற் கதவுக்கு வெளியில் ஆங்காங்கு அமர்ந்திருந்திருந்தனர். தங்கள் மீது திட்டமிட்டே தாக்குதல் நடத்தப்பட்டதை உணர்ந்து கொண்டனர். சில தொழிலாளர்கள் உரக்க சத்தமிட்டுத் திட்டினர். சில பெண் தொழிலாளர்கள் பாதையோரத்தில் உட்கார்ந்தபடி சாபமிட்டனர்.

### பொலிஸ்–நிர்வாகம்: கூட்டாக காடைத்தனம்!


கொஞ்ச நேரத்தில் திடீரென உள்ளேயிருந்த பொலிஸ் வாகனம் வெளியே வந்தது. அதில் நோர்வூட் பொலிஸ் ஸ்தானாதிகாரி (OIC) உட்பட ஏனைய எட்டுப் பொலிஸாரும் இருந்தனர். பொலிஸ் வாகனம் அங்கிருந்து போவதாக நினைத்த தொழிலாளர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் தொழிற்சாலை வாயிலிலிருந்து ஏறத்தாழ 30 மீற்றர் தொலைவில் வாகனம் நிறுத்தப்பட்டது. நிறுத்தப்பட்டதும் வாகனத்திலிருந்து பொலிஸார் அனைவரும் இறங்கினர். அவர்களில் இருவர் கண்ணீர்ப்புகைக்குண்டு எறியும் துப்பாக்கியை ஏந்தியபடியிருந்தனர்.

தோட்ட அதிகாரி சைகை செய்வதை தொழிலாளர்கள் பார்த்தார்கள். அவர்கள் சுதாகரிப்பதற்குள் முதலாவது கண்ணீர்ப்புகைக்குண்டு வந்து வேலு என்பவரின் வயிற்றில் விழுந்தது. அவர் அதிலேயே கதறிக்கொண்டு சுருண்டு விழுந்தார். அதே நேரம் ஏனையோர் கண்களைக் கசக்கிக் கொண்டு ஓடுமிடம் தெரியாது கலவரமடைந்த நிலையில் ஒருவர் மீது ஒருவர் இடித்துக்கொண்டு கதறினர். இந்த ஓலத்தின் மத்தியில் இன்னுமொரு குண்டு வந்து விழுந்தது. அந்த இடத்தில் பல பெண் தொழிலாளர்கள் இருந்தனர். கதறிக் கொண்டே தடுமாறி ஓடினர். அவர்களில் வயது முதிர்ந்த பெண் தொழிலாளர்கள் உட்பட பலர் தடுமாறி விழுந்தனர். விழுந்தெழும்பிய சிலரால் ஓடமுடிந்தது. சிலர் விரைவாக ஓட முடியாது தவித்தனர். பொலிஸாரும் சில நிமிடங்களில் இடத்தை விட்டு அகன்றனர். காயப்பட்ட தொழிலாளர்கள் ஏனைய தொழிலாளர்களின் உதவியுடன் உடனடியாகப் பொகவந்தலாவ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். முதல் கண்ணீர்ப் புகைக்குண்டு வந்துவிழுந்த பழனியப்பன் வேலு (வயது 51) அத்தோட்டத்தின் தொழிற்சங்கத் தலைவர்களில் ஒருவர் (அஸீஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்).

### வயிற்றில் விழுந்த காயம்!

சம்பவம் நடந்து 20 நாட்களின் பின் சரிநிகர் அவரை அவரது வீட்டுக்கு சென்று சந்தித்த போது அவர் அப்போதும் படுக்கையிலேயே காணப்பட்டார். ஆஸ்பத்திரிக்கு மருந்து எடுக்கச் செல்வதற்காக அவருடன் துணைக்குச் செல்ல இன்னும் சில தொழிலாளர்களும் அங்கு வந்திருந்தனர். அவர் சரிநிகரிடம் கருத்து தெரிவிக்கையில்,

"நாங்கள் அவர்களிடம் சண்டை பிடிக்கப்போகவில்லை. ஆனால் எம்மீது அநியாயமாக தாக்கினார்கள். பொலிஸார் கூட எங்களது நியாயத்துக்காகப் பேச முன்வரவில்லை. தோட்ட அதிகாரி தனது அதிகாரத்தையும் பலத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்தி பொலிஸாரை தனக்கு வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டார். பொலிஸார் அந்த இடத்தில் எங்கள் தரப்பு நியாயத்தை அறிவதில் அக்கறை காட்டவே இல்லை. நாங்களாக பேசியும் கூட அதனை அசட்டை செய்தனர்." என்றார்.




டொக்டர் · 

இவரின் வயிற்றில் விழுந்த குண்டினால் ஏற்பட்ட புண்காயங்கள் அப்படியே இருந்தன. குனிய, எழும்ப மிகவும் கஷ்டப்படுகிறார். அந்த இடத்தில் ஒரு கட்டியொன்று காணப்படுவதாகவும் எமது கையை பிடித்து வயிற்றில் வைத்துக் காட்டினார்.

இச்சம்பவத்தின் போது 6 பெண் தொழிலாளர்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாகியிந்தனர்.

### பெண் தொழிலாளர்களின் கதை!

வீகந்தையா லெச்சுமி (வயது.47),



வேலு

கே.பார்வதி (
வள்ளியம்மா
(வயது.35), புஸ்
ஆறு பேரே
இவர்கள் ஒவ்
ஏழு நாட்களு
ஆஸ்பத்திரிய
தார்கள். கந்
கூறினார்.

"அன்றை
கொழுந்து
கொழுந்து
பிய்க்கலாம்.
சேகரித்துச்
பறித்துவிட்
விட்டார்கள்.
மொத்தம் 9 ந

ஆஸ்பத்
அ

ஆஸ்
இரு நாட்கள
திருப்பி அனு
பூரண சுகமாக
அனுப்பினா
தெரியவில்ல
ஆஸ்பத்தி
இருப்பது பொ
ஏற்படுத்தும்
எங்களை உ
ஆஸ்பத்திரி
தெரியவந்தது
தரவேண்டியி
பெரிசாக ஒ
காட்ட வே
அதிகாரிக்கு
அதிகாரியும்
சொன்னதாக
இரண்டாவது
அவசரமாக
விட்டார்கள்
அத்தனை
காய்ச்சல்,
தொடர்ச்சியா
தொழிற்சங்
திரும்பவும்
போய் சேர்
சிகிச்சை பெ
பின் குணப்
சேர்ந்தேன்.
இருந்த அ
நோயாளிக
உணவு கூட
வில்லை. ஒரு
வேளை கி
அலட்சியமா
நடத்தினர். இ
தெரியவில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





...திரகுமார்

...38), செல்லத்துரை ...து.38), மாரியாயி ...ி (வயது.32) ஆகிய ...க்கப்பட்டவர்கள். ...வரும் குறைந்தது ...யது 9 நாட்களும் ...கிச்சை பெற்றிருந் ... லெச்சுமி இப்படிக்

...நாங்கள் பறித்த ...து என்கிறார்கள்.

போகவில்லை. விழுந்ததில் பட்ட காயத்தின் வலி தீரவில்லை." என்றார். இவர் தொழிற்சங்க மொன்றின் (இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்) தோட்டத்தலைவியும்கூட.

கே.பார்வதி என்பவர் இப்படி தெரிவித்தார்.

"அன்று அடித்து விரட்டிய போது தலை தெறிக்க ஓடியதில் இடுப்பில் பலத்த அடிபட்டு இன்னும் வருத்தம்.

வற்றவில்லை. நான் ஆஸ்பத்திரியில் ஏழு நாட்கள் இருந்தேன்" என்றார்.

வள்ளியம்மாள் என்பவர் இப்படிக் கூறினார்.

"அன்று பொலிஸ் விரட்டிக் கொண்டே வந்தது. நான் ஓடியும் கூட கட்டைக்கம்பால் அடித்த அடி முதுகில் பலமாக பட்டது. நெஞ்சு இன்னமும் வலிக்கிறது. எனது ஒரு வயது கூட ஆகாத குழந்தைக்கு பால் கொடுக்கக் கூட முடியவில்லை சாமி. நான் ஏழு நாள் ஆஸ்பத்திரியில் இருந்தேன்." என்றார்.

ஆரம்பத்தில் இந்த தொழிலாளர்களை ஆஸ்பத்திரியில் அழைத்து சென்று அவர்களை கவனித்தது தொடக்கம். ஆஸ்பத்திரி அலட்சிய நிலை காரணமாக தொழிலாளர்களை தனியார் மருத்துவமனையொன்றிற்கு அழைத்துச் சென்று சிகிச்சை செய்ததெல்லாம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத் தொண்டர்களே என்பது தெரிவந்தது.

**டொக்டர் சாந்தகுமார்**

அத்தொழிலாளர்களுக்கு இலவச மருத்துவசிகிச்சை செய்திருப்பவர் புதிய ஜனநாயக முன்னணியின் மத்திய குழு உறுப்பினரும் அண்மையில் விடுதலை செய்யப்பட்டவருமான (சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு இரண்டு வருடங்களுக்குப் பின் விடுதலை செய்யப்பட்ட) ஹோமியோபதி டொக்டர்.சாந்தகுமார் அவர்களே.

அவர்களே அவர்களின் எதிர்காலத்தை தீர்மானித்துக் கொள்வார்கள் என்பது மட்டும் உறுதி!" என்றார்.

சம்பவம் நடந்த நாளிலிருந்து இத் தொழிலாளர்கள் தமது வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்தனர். அவ் வேலை நிறுத்தத்தின் போது தமது பிரதான கோரிக்கைகளாக பின்வருவனற்றை முன்வைத்தனர்.



கே. பார்வதி

விடுகிறார்கள். தொழிலாளர்கள் தங்களது வேலையை சரியாக செய்து வருகிறார்கள். அன்றும் சரி இன்றும் சரி எந்தவித தொழில்நுட்ப கருவிகளுமின்றி தமது உடலுழைப்பாலேயே கொடுக்கப் பட்ட வேலையை சரியாக முடிக்கிறார்கள். உதாரணத்திற்கு 35 பேருக்கு ஒரு ஹெக்டேர் கவ்வாத்து வெட்ட கொடுக்கப்பட்டால் 35 பேரைவிட அதிக தொழிலாளர்கள் அதில் ஈடபடுத்தப்பட்டாலோ அல்லது ஒரு ஹெக்டேரை விட குறைந்த பரப்பில் கவ்வாத்து வெட்டப்பட்டாலோ நாங்கள் குற்றத்தை ஏற்போம். ஆனால் அப்படி நடப்பதில்லையே. அப்படியென்றால் எங்கு பிழை தோட்டம் நஷ்டமைடைவதைக் காட்டி தொழிலாளர்களின் சலுகைகளையும், அவர்களின் வசதிகளையும் குறைப்பதையும் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்." என்றார்.

ஆனால் ஒரு மாதமாகிவிட்ட நிலையில் இன்னும் எதுவித முன்னேற்றமுமில்லை. பழைய அதிகாரிக்குப்பதிலாக, புதிய அதிகாரி. மாறியது "அதிகாரி" ஒருவர் தான். அதிகாரம் அப்படியே இருக்கிறது. அதே நடைமுறை அதே போக்கு. வழமைபோல் தொழிலாளர்கள் இம்முறையும் ஏமாற்றப்படடனர்.

இதற்கிடையில் தோட்டக்கம்பனி அதிகாரியின் வேண்டுதலின் பேரில் இடை நீக்கம் செய்யப்பட்ட தோட்ட அதிகாரியை மீண்டும் நியமிப்பதற்கான முயற்சிகள் நடந்து வருவதாகவும் வெஞ்சர் தோட்டத்து இ.தொ.கா. தொழிற்சங்க தலைவர்கள் இதற்காக கொழும்பிலுள்ள இ.தொ.கா. தலைமையின் செல்வாக்கைப் பயன்படுத்த முயற்சித்து வருவதாகவும் பேசப்படுகிறது.

# ...லிஸ் காடைத்தனம்!

...ந்தால் தானே ...தவரை நாங்கள் ...ற கொழுந்தை ...ரநாள் போட்டு ... ஆஸ்பத்திரியில் ...ந்தேன்.

**...ம் எம்மீது ...சியம்**


...அனும...ப்பட்டு ...னை வட்டுக்குத் ...டார்கள். எனக்குப் ...லையில் என்னை ஏன் ... என்று முதலில் ...னர் தான் நாங்கள் ... தொடர்ச்சியாக ...க்கு நெருக்கடியை ...நால் பொலிஸார் ...க அனுப்பிவிடும்படி ...தரிவித்திருப்பது ...விர எமக்கு நட்டஈடு ...என்பதால் எமக்கு ...ஆகவில்லை என ...தேவை தோட்ட ...ந்தது. தோட்ட ...ாருக்கு இதுபற்றி ...கொள்கிறார்கள். ...எங்களை அவசர ...டிக்கு அனுப்பி ...கு வந்ததன்பின் ...ம் மீண்டும் வலி, ...தியெடுப்பு என ...தம் எடுத்ததனால் ...வர்கள் எங்களை ...திரியில் கொண்டு ...ர். அதன் பின்பு ...த்தம் 9 நாட்களின் ...பட்டு வீடு வந்து ... ஆஸ்பத்திரியில் ...நாளும் ஏனைய ...கொடுக்கப்பட்ட ...க்கு வழங்கப்பட ...கிடைத்தால், இரு ...எங்களை மிகவும் ...ஸ்பத்திரியிலும் ...னக்கு வலது கண் ...நெஞ்சரிப்பு

ஆஸ்பத்திரியில் 9 நாள் இருந்தேன். இன்னும் நடக்க கஷ்ரமாக இருக்கிறது. கண்கள் கலங்கிய வண்ணமே உள்ளது. ஆனாலும் என்ன செய்ய வேலைக்கு போகாவிட்டால் வயித்துப் பாட்டுக்கு என்ன தம்பி செய்ய" என்றார்.

திருமதி.செல்வம் என்பவர் இப்படி சொன்னார்.

"இங்கே பாருங்கள் அன்றைய குண்டுவீச்சால் வாயெல்லாம் வெந்து போய் உள்ளது. சாப்பிடக் கூட க்ஷ்டம். இடுப்பு வலி இன்னும் இருக்கிறது. இங்கே பாருங்கள் கால் கூட வீக்கம்-

அவர் இது பற்றி கருத்து தெரிவிக்கையில் "தோட்டத் தொழிலாளர்கள் மீது தொடர்ச்சியாக இத்தகைய தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. எமது மக்களுக்காகக் குரல் கொடுக்க எந்த தலைமையும் இல்லை. அதிகார வர்க்கமும் தோட்ட முதலாளிகளும் கூட்டுச் சேர்ந்து தொழிலாளர்களின் கோரிக்கைகளை மூர்க்கமாக அடக்க முடியும் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம். இத்தொழிலாளர்களுக்காக குரல் கொடுக்க எவரும் முன்வராத பட்சத்தில் காலப்போக்கில்



எஸ். கந்தையா

**தொழிலாளர்களின் கோரிக்கைகள்**

1.தனியார் மயமாக்கல் ஒப்பந்தத்தின்படி லாபத்தில் 10 வீதத்தை சகல தொழிலாளர்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும்.

2. இருபத்தொரு பெண் தொழிலாளர்களுக்கும் முழு பேர் போடப்பட வேண்டும்.

3. நடந்தசம்பவம் குறித்து பூரண விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. எமது பிள்ளைகளை பெயர் பதிய வேண்டும்.

5. சம்பவத்துக்கு காரணமான தோட்ட அதிகாரி நீக்கப்பட வேண்டும்.

முதலாவது கோரிக்கையின் படி 1996ம் ஆண்டில் பெற்ற லாபத்தில் 10 வீதத்தையே தொழிலாளர்கள் கேட்டனர். ஆனால் இது வரை லாபம் ஒன்றுமே இல்லை. நட்டத்திலேயே இயங்குவதாக நிர்வாகம் கணக்கு காட்டி வருகின்றது. இது பற்றி வெங்சர் தோட்ட இ.தொ.கா தொழிற்சங்கத் உப தலைவர் எஸ்.கந்தையா தெரிவிக் கையில்,

"லாபம் இல்லை என்பதை எங்களால் நம்ப முடியவில்லை. இவர்கள் வழமயாகவே "லாபமில்லை" என்பதை கூறியே எங்கள் வயிற்றில் அடித்து வந்துள்ளனர். எங்கள் தோட்டத்தில் ஒருவருக்கு நாள் சம்பளம் 83 ரூபா. எல்லாம் கழிக்கப்பட்டு கைக்கு வந்து சேரும்போது ஒண்ணும் மிச்சமிருக்காது.

**நட்டத்துக்கு காரணம் யார்?**

சரி, லாபம் இல்லையென கூறுவோமே லாபமில்லாததற்கு யார் காரணம் தொழிலாளர்களா? அதிகாரிகளா? ஏற்கெனவே தோட்டத் துறை, அதிகாரிகளின் லஞ்ச ஊழல் என்பவற்றால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் சுரண்டி எடுத்துவிட்டு பழியை எங்கள் மீது போட்டு

நான்காவது கோரிக்கையான பெயர் பதிவது என்பது முக்கியமானது. 1993இல் பிரேமதாச ஆட்சியின் போது தோட்டங்கள் தனியார் மயமாக்க ப்படுவது தொடங்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை காலியிடங்களுக்கு பதிலாக புதியவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இன்னமும் வேலையில்லாமல் தமது பிள்ளைகள் நான்கு வருடங்களாக இருப்பதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் இறப்பு, விலகல், ஓய்வு பெறுதல், வேலை நீக்கம், என்பவற்றினால் இந்த நான்காண்டில் தொழிலாளர்கள் குறைந்துள்ளனர், அவர்களின் இடத்துக்குப் பதிலாக புதியவர்களை அமர்த்துவதற்குப் பதிலாக குறைந்த தொழிலார்களைக் கொண்டு கூடிய உற்பத்தியைப் பெற முயற்சி செய்யப்படுகிறது. அவ்வாறு உற்பத்தி தரப்படாத போது அவர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தோட்டத்துறையைப் பொறுத்த வரை 1992-1995க்குமிடையில் 14 வீதத்தவர் தமது தொழில் வாய்ப்பை இப்படி இழந்துள்ளனர் எனத் தெரிகிறது.

**'மீண்டும் ஏமாற்றப்பட்டோம்!'**

ஜனவரி 6ம் திகதி தொழிலாளர் திணைக்கள-ஹட்டன் பிரதேச பொறுப்பான உதவி ஆணையாளர் வேலை நிறுத்தம் தொடர்பாக சமரசம் செய்ய வந்தார்.

இவர் கூறியது இது தான் "சம்பவம் பற்றிய விசாரணையை மேற் கொள்கிறோம். அதுவரை தோட்ட அதிகாரி இடைநீக்கம் செய்யப்படுவார். 21 பெண் தொழிலாளர்ளுக்கும் முழு பேர் போடப்படும். ஏனைய கோரிக்கைகள் தொடர்பாக ஆராய்கிறோம். எனவே வேலை நிறுத்தத்தை கைவிடுங்கள்."

தொழிலாளர்கள் பெரிய எதிர்ப்பு எதுவுமின்றி மீண்டும் வேலைக்குப் போனார்கள்.

பலமான முதலாளித்துவ சக்திகள். அதனை பாதுகாப்பதற்கான பலமான ஆட்சியதிகார கட்டமைப்பு, பலவீனமான தலைமைகள், பிழியப்பட்டு, பிழியப்பட்டே நலிந்து போன தொழிலாளர் படை. இது தான் மொத்த மலையகத்தினது நிலை.

இலங்கையின் மொத்த பயிர்ச் செய்கை நிலப்பரப்பில் 40 வீதம் பெருந்தோட்டம். இலங்கையின் மொத்த ஊழியர்களில் ஆறில் ஒரு பகுதியினர் தோட்டத்தொழிலாளர்கள். இலங்கைக்கான மொத்த ஏற்றுமதி வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதி பெருந்தோட்டத் துறையிலிருந்தே பெறப்படுகிறது. தேசிய வருமானத்தில் 15 தொடக்கம் 20 வீதம் வரை இவர்களின் உழைப்பிலிருந்தே பெறப்படுகிறது.

**21ம் நூற்றாண்டுக்கும் அடிமைகளே!**

தனியார்மயத்தின்பின் கடுமையான முறையில் மலையகத் தொழிலாளர்களின் உழைப்பு உறிஞ்சப்பட்டு வருகின்ற போதும் அவர்களின் நலனில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாத அதே வேளை இருந்த நலன்களும் பறிபோய்க கொண்டிருக்கும் நிலையே அங்கு உள்ளது.

ஒரு இடது சாரி இயக்க சிங்கள இளைஞர் ஒருவர் அண்மையில் இப்படிக் குறிப்பிட்டார்.

"இங்கு தோட்டங்கள் மாத்திரம் விற்கப்படவில்லை. கூடவே ஒரு சமூகத்தையும் சேர்த்தே ஒரு சில முதலாளிகளுக்கு விற்றுவிட்டுள்ளனர்...."

உண்மையிலும் உண்மை. இவர்கள் மாறி மாறி விற்கப்பட்டுக்கொண்டிருக்கும் நவீன அடிமைகளே தான். 21ம் நூற்றாண்டுக்கும் இழுத்துச் செல்லப்படும் அடிமைகளே தான்.

என்.சரவணன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே... 23

## கேலிச் சொற்கள் கேடு விளைக்கும்!

### ஆடை அணிவது

சில குடும்பங்களில் பெற்றோர் களுக்கும் குழந்தைகட்கும் இடையில் சாப்பாத்து 'லேஸ்' (Shoe String) காரணமாக நாளாந்தம் சண்டை நடப்பதுண்டு.

ஒரு தகப்பனார் சொன்னார்:

''எனது மகனின் சப்பாத்து லேஸ் கழன்றிருப்பதைக் காண்கிறபோது எனக்கு பத்திக்கொண்டு வருகிறது. அவனை சப்பாத்து 'லேஸை' கட்டுவதற்கு வற்புறுத்துவதா அல்லது 'லேஸ்' இல்லாமலே சளக் சளக் என்று நடக்க அனுமதிப்பதா என்பது எனக்கு விளங்கவில்லை. அவன் விரும்புகிறமாதிரியே அவனுக்கு பொறுப்புணர்வை சொல்லித்தராமல் இருக்கவேண்டுமா?''



சப்பாத்து லேஸைக் கட்டுவதோடு பொறுப்புணர்வை போதிப்பதை இணைக்காமல் இருப்பதே நல்லது. வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டுமென்றால், ஒன்றில் 'லேஸ்' கட்டாத சப்பாத்துகளை வாங்கிக் கொடுக்கலாம் அல்லது எந்த விதமான அபிப்பிராயமும் சொல்லாமல் லேஸைப் பிடித்துக்கட்டி விடலாம்.

குழந்தைகள் பாடசாலைக்கு ஒரு குட்டிப் பிரபுவைப்போல் செல்ல வேண்டியதில்லை. அவர்கள் தமது ஆடை சுத்தமாக பேணப்படவேண்டும் என்பதுபற்றி கவலைப்பட வேண்டியதில்லை. குழந்தைகளின் ஓடுதல், குதித்தல் பந்துவிளையாடல் போன்ற சந்தோசங்களிற்கான சுதந்திரம் இந்த சுத்தமாகப் பேணப்படல் குறித்த கட்டுப்பாடுகளால் பாதிக்கப்படுகிறது. குழந்தை அழுக்கான உடையுடன் வீடு திரும்பும் போது தாய் சொல்ல வேண்டியது:

''இன்டைக்கு நல்ல விளையாட்டுப் போலை... உனக்கு மாற்ற வேறு உடுப்பு இருக்கிறது...''

குழந்தை எவ்வளவு ஒழுங்கற்று அழுக்காக இருக்கிறது என்பது பற்றியோ, அவற்றை தோய்ப்பதில் எமக்கு எவ்வளவு கஷ்டம் என்றோ சொல்வது எந்தப் பயனும் அற்றது. ஒரு யதார்த்த பூர்வமான அணுகுமுறை குழந்தைகளின் விளையாட்டுத்தனத்தை விட்டுவிட்டு அதற்கு மேலாக ஆடைகளை சுத்தமாக வைத்திருப்பது பற்றி அக்கறைப் படமாட்டாது. பதிலாக அது குழந்தைகளின் உடை அதிகநேரம் சுத்தமாக இராது என்பதை விளங்கிக்கொள்கிறது. மலிவான தோய்த்துப் பாவிக்கக்கூடிய ஒரு டசின் உடைகள் பெருமளவுக்கு குழந்தைகளின் உள ஆரோக்கியத்திற்கு உதவி செய்யும்..! அழுக்கடையாமல் பாவிப்பதுபற்றி போதிப்பதை விட இது சிறப்பானதாகும்!

### பாடசாலைக்குப் போதல்

பாடசாலைக்குப் புறப்படும் அவசரத்தில் குழந்தைகள் தங்களது புத்தகங்களில் சிலவற்றையோ, சாப்பாட்டுப் பெட்டியையோ, தனது கண்ணாடியையோ மறந்து விட்டுப் புறப்படக்கூடும். இத்தகைய நேரங்களில் அதன் மறதியை விமர்சித்தோ அல்லது அதன் பொறுப்பீனத்தை சாடியோ ஏதாவது சொல்வதை தவிர்த்து அது மறந்துவிட்ட பொருட்களை எடுத்துக் கொடுப்பதே நல்லது.

''இதோ உனது கண்ணாடி'' என்று கண்ணாடியை மறந்து விட்டு செல்லும் பிள்ளையிடம் அதை எடுத்துக் கொடுப்பது, ' நீ எப்ப தான் உன்ரை கண்ணாடியை மறக்காமல் போட்டுக் கொண்டு போகப்போகிறாய் என்று நானும் இருந்து பார்க்கத்தான் ஆசைப் படுகிறேன்' என்று கூறுவதை விட பிள்ளைக்கு மிகவும் உதவியாக இருக்கும். ''இதோ உனது சாப்பாட்டுப் பெட்டி'' என்று சாப்பாட்டுப் பெட்டியை எடுத்துக் கொடுப்பது, 'உனக்கு எப்பவும் ஒரே ஞாபகமறதிதான்.... உன்ரை கழுத்திலை உன்ரை தலையை ஒட்டி வைத்திருக்காவிட்டால் நீ அதையும் மறந்து போய் விடுவாய்'' என்ற 'நக்கலை'' விடவும் மிகவும் உதவியான ஒன்றாகும். சாப்பாட்டுக்கான காசை மறந்துவிட்டு செல்ல எத்தனிக்கும் பிள்ளையிடம், 'இந்தா சாப்பாட்டுக்காசு' என்று கொடுப்பது, ''உன்ரை சாப்பாட்டை என்னத்தைக் குடுத்து வாங்கப்போகிறாய்? என்பது போன்ற கேலிச் சொற்களை விட பிள்ளைகளால் அதிகம் வரவேற்கப்படும்.

பாடசாலைக்கு புறப்படும் முன்பாக குழந்தைக்கு ஆலோசனைகள், எச்சரிக்கைகள் என்று ஒரு பட்டியலைப் போட்டு சொல்லக் கூடாது. பிரிவதற்கு முன்பாக, ''சந்தோசமாக போயிட்டுவா' என்று கூறுவது ''அங்கை போய் குழப்படி செய்யிறதில்லை'' என்று கூறுவதை விடவும் பயனுள்ள ஒரு வசனமாகும். ''சரி, பிற்பகல் இரண்டு மணிக்கு நாம் சந்திப் போம்'' என்று கூறுவது, 'பள்ளிக்கூடம் முடிஞ்சவுடன் அங்கை இங்கை அலையாமல் நேரை வீட்டை வந்திடவேணும்'' என்பதை விட எவ்வளவோ பயனுள்ள ஒரு அறிவுறுத்தலாகும்.

மூலம்: டொக்டர் ஜெயிம் ஜி ஜினோல்ட்
தமிழில்: அருண்

### பாடசாலையிலிருந்து திரும்புதல்

குழந்தை வீட்டுக்கு வரும் போது தாயார் வீட்டில் இருந்தாரானால், அக்குழந்தையை வாழ்த்தி வரவேற்பது நல்லது. ஒற்றைவரியில் எரிச்சலுடன் பதிலளிக்கும் விதத்திலான கேள்விகளை கேட்பதற்குப் பதில் (எப்பிடி இண்டைக்கு ஸ்கூல்? - பரவாயில்லை, என்ன இண்டைக்கு செய்தீர்கள்? - ஒன்றுமில்லை) தாயார் அன்று பாடசாலையில் நடந்திருக்கக் கூடிய விடயங்கள் குறித்த தன் புரிதலை வெளிப்படுத்தும் விதத்தில் பேசுவது நல்லது!

''இண்டைக்கு நாள் சரியான கஸ்டமான நாள் போல இருக்கிறது?''

''பள்ளிக்கூடம் முடியும் மட்டும் உனக்கு பொறுமையாக இருக்கவே முடியவில்லை இண்டைக்கு''

''வீட்டுக்கு வந்தது சந்தோசமாய் இருக்கு என்ன''

குழந்தை வீட்டுக்கு வரும்போது, தாயார் வீட்டில் இல்லை என்றால், தான் எங்கே இருக்கிறேன் என்ற ஒரு செய்தியை அங்கு விட்டுச் சென்றிருப்பது நல்லது. பாடசாலையால் வரும் குழந்தைகட்காக எழுதிய செய்திகளை சில பெற்றோர் வைத்திருப்பார்கள். குழந்தைகட்கு தமது அன்பையும் பாராட்டையும் எழுத்தில் வைப்பது பெற்றோருக்கு மிகவும் சுலபமானதாகும். சில பெற்றோர் சிறிய ஒலிப்பேழையில் தமது செய்தியை விட்டுச் செல்வதுண்டு குழந்தைக்கு தாயின் வார்த்தைகளை திரும்பத்திரும்ப கவனிக்க வாய்ப்பளிக்கிறது. இது பெற்றோருக்கும் பிள்ளைக்கும் இடையில் பயனுள்ள தொடர்பாடல் ஏற்படுவதை ஊக்குவிக்கும்.

வரும்..

# எழுப்பேரு

## ''மல்குடி நாட்கள்'' நாராயணன்



ரூபவாஹினியில் 'மல்குடி நாட்கள்' தொடர் பார்க்கின்ற அனைவருக்கும், 'நல்ல' நூல்கள், சஞ்சிகைகளுடன் தொடர்புடைய அனைவருக்கும் ஆர்.கே.நாராயணனைத் தெரிந்திருக்கும்.

உலகளவில் புகழ்பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த (சென்னை) ஆங்கிலத்தில் எழுதிக் கொண்டிருக்கிற படைப்பாளி. நோபல் பரிசுக்காக இவரின் பெயர் பலமுறை பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது.

நாவல்கள், சிறுகதைகள், சுயசரிதம், பயணக் கட்டுரைகள் என நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களை இவர் எழுதியுள்ளதோடு, இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களை ஆங்கிலத்திலும் தந்துள்ளார்.

1906 ஒக்டோபர் மாதம் பிறந்த ராசிபுரம் கிருஷ்ணசாமி நாராயணஸ்வாமி எனும் இயற்பெயருடைய ஆர்.கே.நாராயணன் கடந்த ஒக்டோபரில் 90 வயதையடைந்தார். அதையொட்டி 'புரண்ட்லைன்' சஞ்சிகை ஆசிரியர் என்.ராமும், அவரது 'வெள்ளைக்கார' மனைவி சூசன் ராமும் இணைந்து இவர் பற்றிய நூலொன்றையும் எழுதியுள்ளனர்.

கிரஹம் கிறீன் (Graham Greene) என்பவரால் ஆங்கில இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இவரின் நூல்கள் உலகின் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இலக்கிய உலகின் முழு நேரப் பணியாளராக இருக்கும் இவர்தான் இந்தியாவின் நவீன எழுத்துலகின் முதல்வர் எனக்கருதப்படுகிறார்.

இவரின் 'மல்குடி நாட்கள்' தமிழ், சிங்கள மொழி மாற்றத்துடன் ரூபவாஹினியில் ஒளிபரப்பாகிறது. சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற 'வழிகாட்டி' நாவலின் தமிழ் மொழி பெயர்ப்பு உள்ளதை அறியமுடிகிறது. இவரின் வேறு என்ன நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன என்பது எமது ''நல்ல நூல்''களின் கிடைப்பற்ற தன்மையால் அறியமுடியாமலுள்ளது. இக்குறையை சவுத் ஏசியன் புத்தக நிலையத்தாரும், பூபாலசிங்கம் புத்தக நிலையமும், இந்து கலாசார திணைக்களமும் ஓரளவு நிவர்த்திக்கின்றன.

நாம் எமது முன் வழிகாட்டிகளை, எழுத்துலகில் ஓயாது இயங்கிக் கொண்டிருப்பவர்களை மறந்து போய்விடுகிறோம். அவர்களில் பலர் மறைந்தும் போய் விடுகின்றனர். அண்மையில் அகஸ்தியர், தர்முசிவராமு போன்ற இறுதிவரை எழுதிக்கொண்டிருந்தவர்கள் இறந்து போய்விட்டார்கள்.

இவர்கள் பற்றியும் , இவர்களது படைப்புக்களை தொகுத்தும் பலர் நூற்களை தமிழகத்திலும், புலம் பெயர் நாடுகளிலும் வெளியிட்டனர், வெளியிடுகின்றனர். இங்கே அந்த நிலை அரிதென்று தான் கூறலாம். நாம், நாராயணன் தொடர்பாகவும், பிற இந்திய எழுத்தாளர்கள் தொடர்பாகவும் வந்தவைகளை முன்னுதாரணமாகக் கொள்ளலாம்.

ஆர்.கே.நாராயணனின் இளைய சகோதரர் இந்தியாவில் மிகவும் பிரபலமான கேலிச்சித்திரக்காரர். தனது அண்ணனின் நூல்கள் பலவற்றிற்கு கோட்டோவியம் வரைந்துள்ளார்.


90 வயதிலும் ஓயாது எழுதிக்கொண்டிருக்கும் அவர் எழுத்தாளர்கள் பற்றி/ எழுத்துலகு பற்றி இவ்வாறு கூறுகிறார்.

**''என்னை அலைக்கழித்துக் கொண்டிருந்த ஒரு விடயத்திற்கு சரியான பதில் கிடைத்தது. நான் எழுத்தாளனாக இருப்பதைத் தேர்ந்தெடுத்துக்கொண்டேன். ஏனெனில் அதுதான் முழுச்சுதந்திரத்தையும் வழங்குகின்ற ஒரு செயல். ஒரு எழுத்தாளனால் தான் திருப்திப்படும் வகையில் வாழ முடிகிறது. ஓரிடத்தில் இருக்க முடிகிறது. எங்காவது செல்ல முடிகிறது.**

**யாருடைய அனுமதிக்கும், அங்கீகாரத்திற்கும் காத்திருக்க வேண்டிய தேவை எழுத்தாளனுக்கு இல்லை.**

**அவன் சுதந்திரமாக உண்ணலாம், உறங்கலாம், படிக்கலாம் இன்னும் நிறையச் செய்யலாம். எழுத்தாளனான ஒருவனுடைய உழைப்பு இன்னொரு மனிதனுக்கு சந்தோஷத்தை அளிக்கிறதே, அது எல்லாவற்றையும் விட மேலானது. இதில் தான் சுதந்திரத்தின் உண்மையான அர்த்தம் இருக்கிறது. என்றாலும் நாம் இதற்கு சில விலை செலுத்தவும் வேண்டியிருக்கிறது.''**

கீழேயுள்ள கார்ட்டூன் தன் அண்ணன் பற்றி 'கார்ட்டூனிஸ்ட்டான' தம்பி ஆர்.கே.லக்ஷ்மணன் வரைந்தது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சென்ற இதழின் தொடர்ச்சி.

3

இனி படிமம் பற்றிய விடயத்துக்கு வருவோம். உவமை, உருவகம், படிமம், குறியீடு எனும் நான்கு படிநிலைகளை 'புதுக்கவிதையில் இலக்கிய இயக்கம்' எனும் புத்தகத்தில் இரா. சம்பத் குறிப்பிடுகின்றார். வேல் போன்ற விழி உவமையாக விழிவேல் உருபு தொக்கு நிற்க உருவகமாகும். இதுவே காட்சித் தன்மையுடன்கூடி அமைக்கப்படும்போது படிமமாகிறது. அதாவது 'விழி பாய்ந்தது' இங்கு விழி வேல் போல் பாய்ந்தது எனும் காட்சி வாசகன் அகக்கண்ணில் விரியும். ஆனால் 'வேல் அழுதது' எனும் போது குறியீடு ஆகிறது.

சி.கே. லூயிஸ் தனது 'The Poetic Image' எனும் நூலில் படிமம் பற்றிக் கூறுவது கவனத்துக்குரியது. 'புலன் உணர்வுடைய வழிக்கிராமம் தொகுதியில் வந்த வேற்றாகி நின்ற வெளி கவிதையில் காணலாம்.

*''முற்றத்து சூரியன்/முற்றத்து நிலவு/ முற்றத்து காற்று என/ வீட்டு முற்றங்களுக்கே உரித்தான வாழ் அனுபவங்கள் /விடை பெற்றுக் கொண்டன.''*

மேலும் 'காலத்துயர்' தொகுதியில் காணப்படும் 'தனித்து விடப்பட்ட தீவின் புதல்வனுக்கு' எனும் கவிதை அதே பாணியில் நகர்கிறது.

*''முன்பெல்லாம்/நிலா மலர்ந்த முற்றத்திலே/ மார்பிலே சார்த்தியுன்/ தலைமுடி கோதிய விரல்கள்/இன்று வெறுமனே நெஞ்சை வருட/ நனைகின்ற விழியோரம் என்/ கிராமத்தின் கனவுகள் தடுமாறும்./''*

இம்மூன்று கவிதைகளும் ஏக்கமும் தவிப்பும் வேதனையுமாக உள்ளன. காலம் மாறியும் பாடுபொருள் மாறா நிலைமை மாற்றத்தை பின்வரும் இரு கவிதைகளிலிருந்து கண்டு கொள்ளலாம். வன்முறையாளர்களினால் இரத்த வெறியாட்டத்திற்கு உள்ளான ஊர் பற்றியும் கவிஞனின் பிரதிபலிப்பு பற்றியும் இறுக்கமான படிமங்களூடாக புதுமையாக காட்சிப்படுத்துகிறார் சோலைக்கிளி.

*''நிலவு, அந்தக் கிராமத்திலிருந்து உயிர்தப்பி என் வானத்தில் நின்றது./ அதனது உதட்டில்/இரத்தம் வழிய/ காற்று ஓடி வந்த ஓட்டத்திலே/ களைத்து தண்ணீர் கேட்டது/அந்தக் கிராமத்தின் குழந்தைகளை/பேய்கள் சப்பியதாக/ நட்சத்திரங்கள் சொல்லிச்சொல்லி விழுந்தன.*

*.................................*

*.................................*

*நான் வானத்தில் ஓங்கி பல முறை குத்தினேன்./சூரியனை காலுக்குள் போட்டு கசக்கினேன்./இந்தத் துயரிலும் உனக்கு மகிழ்ச்சியா*

# ஈழத்துக் கவிதைப் போக்கும் மு.பொ.வின் விமர்சனமும்

## வரலாறு புதுமைகளைப் படைக்கும்!

**தகுந்த உணர்ச்சியை இடத்துகேற்றவாறு படிப்பவனுக்கு ஏற்படுத்தும் சொற் சித்திரம் படிமம் ஆகும். கவிதையின் உயிர் படிமம் உண்மையுலகைக் காட்டுவது. அனுபவத்தாலும் அதன் மூலம் ஏற்படுகின்ற உறவின் மூலமும் படிமம் பொருளை படைக்கின்றது. அப்பொருள் பார்க்கின்ற பொருளாய் இருப்பதில்லை. பார்க்கின்ற பொருளுக்கும் படைக்கின்ற பொருளுக்கும் இடையே ஏற்படும் உறவு உருவகத்தின் மூலம் அமைக்கப்படுகின்றது."**

படிமங்களின் கூறுகளாக தெளிவு, சுருக்கம், புதுமை, அனுபவக் கலப்பு, எளிமை, உணர்வுக் கலப்பு, எண்ணக் கலப்பு என்பன அமையும் என்கிறார் மு. சுதந்திரமுத்து. இப்படிமங்கள் மனப்படிமம், அணிப்படிமம், குறியீட்டுப்படிமம் எனவும் அவை காட்சி, புலனுணர்வு, கருத்து அடிப்படையில் அமைகின்றன என்றும், புலனுணர்வு, படிமங்கள் ஐம்புலன்களூடாக (ஓசை, சுவை, பார்வை, நுகர்வு, தொடுகை) இரசிக்கக்கூடிய தன்மையுள்ளன என்றும் கூறப்படுகின்றது. இயற்கைப் பொருட்களும் நிகழ்வுகளும் படிமப் படுத்தப்படும் வானம், நிலா, சூரியன், விண்மீன், மேகம் முதலியன பெரும்பான்மையாக காட்சிப்படிமங்களாகின்றன. இறுதியாக 'Image' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு படிமம் என்ற சொல்லே பொருத்தமுடையது. காட்சிப்பொருள், கருத்துப்பொருள் ஆகியவற்றை மனதில் காட்சிகளாக்கி அக்காட்சியுணர்வை தொட்டு உணர்ச்சியை எழுப்பி பல எண்ணங்களை தூண்டக் கூடியனவாக அமைவதே படிமமாகும். உவமை உருவகங்களின் படிநிலை வளர்ச்சியே படிமமாகும்.

4

இப்போது சு.வியின் கவிதைப் போக்கில் ஏன் மாற்றமில்லையெனப் பார்ப்போம். 1985ல் வெளியான 'அகங்களும் முகங்களும்' தொகுதியிலுள்ள 'நிலவும் நெகிழ்வும்' என்ற கவிதை பின்வருமாறு செல்கிறது.

*''நிலாச்சோறு உண்ணல்/நிலா ஊஞ்சல் ஆடல்/பாய் இழைத்தல்/ கிடுகு பின்னல்/தோட்டத்து கிணற்றில் துலாமிதித்து/நிலா இறைப்பு எல்லாமே/ நிலவின் குடை விரிப்பில் கீழ் நிகழ்ந்தவை./ உழைப்பிலும் என்னவோர் உல்லாசம் இருந்தது/''*

மேற்சொன்ன கவிதையில் காட்டப்பட்ட மாதிரியான காட்சிகளையும் கவிதை கூறும் பாணியையும் 1995ல் வெளியான காற்று உள்ளது உண்மை தான். ஆனால் பாடும் முறையில் மாற்றம் கோரி நிற்கும் காலத்தின் துயரை யார் போக்குவார்? ஏனெனில் கவிதையின் வடிவம் எம் வாழ்வின் கதியையும் கூற வேண்டிய கட்டாயத்திலுள்ளது. வெண்பா விருத்தப்பாவில் இன்று கவிதை புனைவது எப்படிப் பொருத்தமில்லையோ அது போலவே இதுவும்.

காலத்துயர் தொகுப்பிலிருந்து இரு கவிதைளைப் பார்ப்போம். *''அது ஒரு காலம்/எங்கள் மண்ணில் நாங்கள் இராசாக்கள்''* என பழைய காலப்பெருமையைப் பாடிவிட்டு இன்றைய அடிமை நிலையை *''இன்றோ எங்கள் மண் கைமை பூண்ட பெண்ணாக பட்ட காயங்கள எழுப்பும் ஓலங்களோடு...''* என சித்திரிக்கிறார் சு.வி. இதேபோல் 'தனித்து விடப்பட்ட தீவின் புதல்வனுக்கு' எனும் கவிதையில்

*''உனக்கென்றோர் காற்றுவெளி/ உனக்கெனவும் சிறகுகள்/ உனக்குள்ளும் வானெட்டும் உந்தல்/ சூடிக்கொள்ள ஒரு சூரியன்''*

எனகற்பனையில் ஒரு காட்சியை காண்கிறார். மேலும் 'காலத்துயர் கவிதையில்,

*''காலம் இவரை எக்கரையில் சேர்க்குமோ/ யாருக்கு யாரை உறவாக மீதம் விடுமோ/ பாரெல்லாம் இந்தப்படரும் துயர் தானோ?''*

என ஓலமிடுகிறார். இப்படி ஓலமிடுகின்ற ஏக்கமிக்க வரிகளை மு.பொ. கூறுவது போல 'நீங்கள் - நாங்கள்' பாணி போன்ற இன்னொரு பாணியிலான வானம்பாடி கவிதைகள் போன்ற வெற்றுவரிகள் என்றால் ஏற்பாரோ? ஆனாலும் சு.வியின் இக்கவிதை கவித்துவத்துடனேயே நிறைவுறுகிறது.

*''தூரத்தே தொடுவானை/நீலக்கடல் நனைக்கும் /ஈரவளைவில் விழி தோய்வாய் /பாரடீ உன் காலடிக் கீழ்/ பூமிப்பரப்பெங்கும் புல் இதழ் நுனியெல்லாம்/ ஆவியுயிர்க்கிறது என் இதயம்.''*

இங்கு மு.பொ. போல நாம் விதண்டாவாதம் செய்யவில்லை. இருப்பினும் சு.வியின் பாடும் முறைமையில் உள்ள தேக்கத்தை சோலைக்கிளியின கவிதையொன்றுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியமாகிறது. ஒரே பாடு பொருளாக இருக்கும் நிலைமைகளில் பாடும் முறைமை கால மாற்றத்துடன் இசைந்து கொள்ளாத போது 'கவிதா வீச்சில் காணக்கூடிய என்று/இரைந்த கடலை எரித்தேன்''

அதே பாடு பொருளில் சு.வி. எழுதுகின்ற கவிதை, வார்த்தைகளின் ஆரவாரங்களாக தொடருவதை பின்வரும் கவிதையில் காணலாம்.

*''ஒரு மொழி பேசும் இனங்களே/*
*இணைவின்றி எதிர் எதிராய்/*
*கிராமத்தின் மேல் கிராமங்கள்/*
*பட்டணங்களின் மேல்*
*பட்டணங்கள்/*
*வெகுண்டெழுந்து/*
*பட்டயங்களை உருவியாயிற்று''*

எனினும் இறுதி இரு வரிகள் சு.வி.யை கவிஞராக நிமிர வைக்கின்றன.

*''இரவுக் கன்னியின்/*
*இரத்தப் பெருக்குள் துவண்டன./*
*துண்டாடப்பட்ட உயிர்மத்*
*துடிப்புக்கள்''*

இப்படியான இறுக்கமான செட்டு மிக்க மறைமுக வெளிப்பாடு கொண்ட கவிதைத் தன்மைகள் குறைவுபட்டு வெறுமனே ஓலமிக்க வார்த்தைகளை அள்ளியிறைக்கும் பாணியே எண்பதுகளில் தொடங்கி இன்றுவரையும் சு.வி. கையாளும் கவிதா உத்திகளாகும். உண்மையில் சு.வியின் பலமான அம்சங்களான மரபுகளில் எழும் படிமங்கள் மரபு இலக்கிய தொடர்கள் ஆவேச மனம் கவித்துவமான இரசனை உணர்வு என்பன புடம் போடப்படாமல் நேரடி ஓலங்களாக வெளியாகின்றன. கவிஞனின் ஆழ்மனதில் உறைந்து உறை போடப்பட்டு வெளிப்பட வேண்டிய வரிகள் ஒப்பாரியாக படைக்கப்படுகின்றன. ஒருவகையில் கவிஞனின் மனநிலைக்கு இப்பதிவுகள் ஆறுதலைத் தந்தாலும் கவிதையுலகிற்கு புதுமையைத்தரவில்லை.

கவிதைக்கும் புதுமைக்கும் எதுவித சம்பந்தமுமில்லை என்று மு.பொ கூறுவாரானால் அது எமது கவிதாயுலகின் 'சூம்பிப் போன நிலைமையைத்தான் கோடிகாட்டி நிற்கின்றது. ஆனால் வரலாறு புதுமைகளைப்படைத்துக்கொண்டிருக்கும் என்பது தான் யதார்த்தமாகும்.

*- கந்தையா ஸ்ரீகணேசன்*

# இலக்கம்'


பொன்னெழில் பொலியும் புது விடிகாலைப்
புலர்வில்
கண்ணயர்ந்த நானோ துயில் நீத்தேன்.
சொல்நயம் தோய்ந்து சுகித்திசை பாடி
கவிஞரெலாம்
வந்தனம் கூறி வாழ்த்திசைப்ப
புன்னகை பூத்துப் பொலிந்தது காண் புது விடிகாலை.
காலைப்போதின் மோகனம் கண்டு
பாலைத் தரிசின் வெறுமை பாழ்பட
சோலைக்குயில்களெலாம் சுதந்திரத் தொனியில்
கோல இசை பரப்ப
நாவைத் திறந்து நாயனம் மிழற்றியது காண்
காலைக் கிறுக்கத்தில்
கண் சொருகி விழ கனவுள் வீழ்ந்து
மோன வெளியெல்லாம் பரந்து சிந்தை விரிந்ததுவே.
எட்டா வானம் என் வசமென்றே
கொட்டாவி விட்டு நிமிர்ந்தால்
இன்னும் இன்னும் விரிகிறதே!
என்ன அதிசயம்
இந்நாள் வரையும் சின்னதாய் வானம் என்று
என்னுள்ளே சிரித்துகட கொண்டேன்
மின்னல் வெட்டில்
கன்னம் அறைந்து காற்று நழுவிற்று
சின்னதே வானம் என்று
சிரித்துக் கொள்ளாதே!
மின்னல் வார்த்தைகளில் பிதற்றித் திரியாதே
என்னதே ஏகமும் என்றெண்ணுவார் மடிவர்
சின்னதோ வையம்!
என்றிரைந்தே
சன்னதம் கொண்டு அப்பால் நகர்ந்ததுவே
தின்னும் இளமைக் கனவின் தினவில்
ஏகமும் தன்னதே என்றெண்ணி
தலை நிமிர்ந்தால்
இன்னும் இன்னும் விரிகிறதே!
என்ன அதிசயம்!
முன்னம் நினைந்தேன்
முழு இரவு தேய வான் மிசையே
தொங்கல் முகில் கிழித்து மல்லாடி
பஞ்சு மேகம் பதற வரும் பால் நிலவும்
கண் சிமிட்டிச் சிரிக்கும்
வெள்ளித் தாரகைகளும் என்னதே என்றெண்ணி
இறுமாந்தேன்
பூமிப் பந்தும், புனலும்
பூத்துச் சொரியும் மலரும்
காலைச்சூரியனும், ககனமும்
எனதே என்றே
யாவும் எனதே யாவும் எனதே
என்றதோர் ஓலம் எழுந்து வர
செத்து மடிந்தார் மாந்தர்.
ஆதலினாலே
கூவித் திரிதல் விடுத்து பிறர்க்காய்
ஆவி துறத்தல் நலம்
சின்னக் கனவுகள் மின்னி வரச் சிரிக்கையிலே
மின்னல் வெட்டாய்
கன்னத்தறைந்து கூவ
கனவகன்று ஏக பிற சோலிக்காய் எழுந்தேன் நான்

பவித்திரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






அவளை மட்டுமே ஏற்றிக் கூட்டிப் போக வந்த வானூர்தி போல் நின்று கொண்டிருந்தது அந்தப் பேருந்து. புதிது. ஓட்டுனர் அருகில் ஒற்றை இருக்கை போடப்பட்டது. மற்றப் பேருந்துகளிலிருந்து சற்றுத்தள்ளி நிறுத்தப் பட்டிருந்தது. பதினைந்து நிமிடங்களில் புறப்படும் என்றார்கள். இன்னும் யாரும் ஏறியிருக்கவில்லை. பயணச் சீட்டு இருக்கிறதா என்று உறுதி செய்து கொண்டு ஏறினாள். அந்த ஒற்றை இருக்கையில் அமர்ந்தாள். அந்த ஒற்றை இருக்கைக்காக அவள் வேறு பல பேருந்துகளைத் தவற விட்டிருந்தாள். திரும்பும் வழியிலாவது அவள் எந்தத் தொந்தரவும் இல்லாமல் போக வேண்டும். மற்றப் பயணிகளிடமிருந்து விலகியிருக்க வேண்டும். அவள் வாயைத் திறந்து எதுவும் சொன்னால், அவள் வாழ்க்கையையே பிட்டு அவர்கள் முன் வைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள் அவர்கள். இந்த ஒற்றை இருக்கை அவள் அமைக்கும் வியூகம். இதற்குள் யாரும் நுழைய முடியாது. நுழையும் எந்த அபிமான்யுப் பயலும் வீழ்த்தப்படுவான். ஏதோ போருக்குச் செய்யும் முஸ்தீபுகள் போல் இருக்கையில் அமர்ந்து கொண்டு திட்டம் தீட்டினாள். வரும் வழியில் இத்தகைய நடவடிக்கைகள் எடுக்காததால் அவள் நிரம்பச் சிரமப்பட்டிருந்தாள். அதன் விளைவாக அவள் புடவையில் ஒரு குழந்தையின் மூத்திர ஈரமும், ரவிக்கையின் தோள் பட்டையில் ஒரு களைத்துப்போன மனைவியின் உறக்கவேளை வாய் எச்சிலும், இடது புறத் தலைப்பில், முன்னால் இருந்த இருக்கையினின்றும் காற்றில் வந்த புகையிலைச் சாற்றுத் துப்பலின் கறைகளும் இருந்தன. இதற்கெல்லாம் தயாராக அவள் கிளம்பியிருக்கவில்லை. எந்தவிதக் கேடயமும் இல்லாமல் நிராயுதபாணியாகக் கிளம்பியதால் அலைக்கழிக்கப்பட்டிருந்தாள்.

அன்றைய பொழுது நன்றாகத்தான் விடிந்திருந்தது. கிழக்குப்புற சன்னலருகே அவள் படுத்துத் தூங்கியதால், கதிரவனின் முதல் கிரணத்தின் ஒளி ஊசி இவள் முகத்தைத் தொட்டிருந்தது. மெல்லக் கண்விழித்த போது எட்ட இருந்த வேப்ப மரத்தின் பின்னாலிருந்து சிவப்பு நூல்ப் பந்திலிருந்து விடுபடுவது போல் நீள்ச்சரமாய் ஒளிக் கீற்றுக்கள். கண்களை மூடிக்கொண்டு ஒளியை எதிர்கொண்டபோது கண்ணுக்குள் சிவப்பு வெள்ளம் ஓடியது. அதன் பிறகு ஒளியை எதிர்த்துத் திரும்பிக் கண்களைக் கையால் மூடிக் கொண்டதும், மயில் கழுத்துப் பச்சை, கண்களை நிரப்பியது. நான்கைந்து முறைகள் செய்தபின் உடம்பு உலகை ஏற்றுக்கொண்டது. அதில் நடமாடத் தயாரானது.

கீழே தண்ணியடிக்கும் சத்தம் கேட்டது. வள்ளியாக இருக்கும். காலையிலேயே வந்து தண்ணியடித்துத் தரும்படி அவளைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அன்று திருச்சி போக வேண்டிய நாள். அங்கு சந்திக்கப் போகும் நபருக்குத் தகவல் அனுப்பியாகி விட்டது. தண்ணியடித்துத் தந்துவிட்டு, வீட்டைச் சுத்தம் செய்து, மூலையில் உள்ள ஆப்பக் கடைக்காரப் பெண்மணியிடமிருந்து இட்லியும் தோசையும் வாங்கி வந்து அவள் பங்கைச் சாப்பிட்டுவிட்டு வள்ளி கிளம்பி விட்டாள் காலையில்.

''திருச்சிலேந்து வரப்ப என்ன வேணும் வள்ளி?'' என்று கேட்டபோது, ''மலைக்கோட்டப் புள்ளையார் பிரசாதமா வாங்கிட்டு வரப்போறீங்க?'' என்று வள்ளி பதில் கேள்வி கேட்டிருந்தாள். இவள் கோவில் போக மாட்டாள் என்று தெரியும். இவள் அதற்கு ஏதும் கூறாமல் புன்னகைத்திருந்தாள்.

குளித்து முடித்தபின், மாம்பழ வண்ணத்தில் கறுப்புக் கரையிட்ட சுங்கடிச் சேலையும், கறுப்பில் மஞ்சள் கட்டமிட்ட கைத்தறித்துணி ரவிக்கையும் அணிந்து கொண்டாள்.

கஞ்சியில் மொடமொடக்கும் சேலை. இவளுக்குக் கஞ்சி போட்டால் பிடிக்காது. ஆனால் வள்ளிக்குப் பிடிக்கும். ''அதுதான் நல்லாயிருக்குது'' என்று தீர்மானமாய்க் கூறிவிடுவாள். இந்த மாதிரி விஷயங்களில் வள்ளிதான் அவள் வாழ்க்கையை நடத்திக் கொண்டு போனாள். இந்த அன்றாடத் தீர்மானங்களின் சுமையை ஏற்றுக் கொண்டு, வேப்பமரம், அதிலுள்ள குயில், வீதி, வானம் இவற்றை இவளுக்குத் தந்திருந்தாள். வள்ளி தந்த சீர்வகை.

திருச்சியை நேரத்தில் சென்றடைய வேண்டுமென்பது காலையில் இலக்காக இருந்ததால், முதலில் கண்ணில் பட்டு, கிளம்பத் தயாராயிருந்த பேருந்தில் ஏறி, இருவர் அமரும் இருக்கையில் சன்னல் புறத்தில் அமர்ந்தாள். பேருந்து கிளம்பும் சமயம் ஒரு கணவனும் மனைவியும் கைக்குழந்தையுடன் ஏறினர். கணவன் கஞ்சியில் விறைத்து நின்ற சட்டை அணிந்திருந்தான். மொறமொறப்பான புது பட்டு வேட்டி. மனைவி அந்தக் காலை வேளையில் அடிக்க வரும் நீலத்தில் சிவப்புக் கரையிட்ட பட்டுச் சேலை அணிந்திருந்தாள். சேலையில் உடலெல்லாம் சரிகைப் புட்டாக் கள். ஈரக்கூந்தலில் நிறையப்பூ. கழுத்து கொள்ளா நகை. அவள் உடலைப் பிடித்த சரிகை ரவிக்கையின் அக்குள் பகுதி முழுவதும் வியர்வையின் ஈரம். குழந்தை அவள் கையில்தான் இருந்தது. ஏறிய உடனே சேர்ந்து அமர வழியில்லை என்று தெரிந்ததும் குழந்தையுடன் இவள் பக்கம் வந்தமர்ந்தாள். குழந்தையை இவள பக்கமாக உள்ள தொடை மேல், இவளைப் பார்த்தபடி இருத்திக் கொண்டாள். ஆண் குழந்தை என்று பிரகடனம் செய்யும் ஆவலாலோ என்னவோ குழந்தைக்குச் சாக்லேட்டு நிறத்தில் மேல் சட்டை மட்டுமே அணிவிக்கப்பட்டிருந்தது. பேருந்தின் ஓட்டத்திற்கேற்ப, கொலுசு அணிந்த கால்களால், இவளை இடுப்பிலும், தொடையிலும் எற்றியபடி இருந்தது குழந்தை.

''சேட்டை பண்ணாதே கண்ணா'' என்று அவள் கொஞ்சினாள்.

கண்ணன் என்று அழைக்கப்பட்ட அன்பில் உருகியோ என்னவோ அந்தக் கண்ணன் கால்களை இவள் இடுப்பில்வாகாக வைத்துக் கொண்டு மூத்திரம் விடத் தொடங்கினான்.

இடுப்பிலும், கையிலும், புடவையிலும் ஈரம்பட்டதும் திடுக்கிட்ட இவள், ''புள்ளயக் கவனியுங்க'' என்று பதறினாள். அவன் நிதானமாகக் கண்ணனிடம்,

''சேலையை நனைச்சுட்டியே சுட்டிப் பயலே என்றாள்.

''என்னங்க இது? குழந்தையை உங்க மடில ஒழுங்கா வைச்சுக்கிடக் கூடாதா? நான் திருச்சிக்கு ஒரு வேலயா போறேன். இப்பிடி ஈரச்சேலையோட போக முடியுமா?'' என்று சிடுசிடுத்தவள் இவள்.

''என்னம்மா ஆச்சு?'' என்று கேட்டாள் பின்னாலிருந்த கிழவி.

''புள்ள சேலையை நனைச்சதுக்குக் கூவுறாங்க'' என்றாள் தாய்.

''என்னது? என்று வியப்படைந்தாள் கிழவி. ''அப்பிடி நாசூக்குப் பாக்கறவங்க ப்ளெஷர் கார்ல போவுணும். பஸ்ஸுல ஏன் வராங்களாம்?''

''ஏம்மா, பஸ்ஸுல வந்தா வர குழந்தை மூத்திரம் எல்லாம் சேலையில வாங்கிக் கிடணும்னு ஏதாவது சட்டமா?'' என்று கேட்டாள் கிழவியிடம்.

''ஏன் தாயி, ஒனக்கு புள்ளகுட்டி கிடையாதா? பீ போகாத புள்ளயத்தான் பெத்திருக்கிறாயா?''

''அவுங்க கல்யாணமே கட்டல போலத்தெரியுதே'' என்றார் ஒருவர் இவள் கழுத்தைப் பார்த்து.

''ஏன் சார், நான் கல்யாணம் கட்டாததுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்? புள்ளய ஒரு துணில சுத்திட்டு வரக்கூடாதா? இப்பிடி மத்தவங்க சேலைய ஈரமாக்கினா எப்படி! குழந்தையொட அப்பா வேட்டி சட்டை கசங்காம பேறாரு. நான் கெடந்து அவதிப்படுகிறேன்'' என்று இவள் வாதிட்டாள்.

அரைத் தூக்கத்தில் ஆடிக் கொண்டிருந்த குழந்தையின் தந்தை திடுக்கிட்டு விழித்தார். ''என்ன சமாசாரம்?''

''ஒன்னுமில்ல. நீங்க ஒறங்குங்க. கல்யாணம் கட்டாத பொண்ணு ஒண்ணு கோவப்படுது. அதுக்கு என்ன தெரியும் புள்ள சுகம்?'' என்றார் ஒரு முதியவர்.

''யம்மா'' என்று இவள் தோளை ஆதுரத்துடன் தொட்டாள் கிழவி. ''நான் சொல்லுறேன். புள்ள மூத்திரம் பட்ட வேள ஒனக்கு விடியட்டும். அடுத்த வருஷமே உன் கையில புள்ள வரும் பாரு.''

''உன் வாயால சொல்லு பாட்டி. அதுக்கு நல்ல காலம் பொறக்கட்டும்.''

இன்னும் பேசினால் மாப்பிள்ளையே பார்த்து முடித்து விடுவார்களோ என்று பயந்து இவள் சன்னல் வெளியே பார்க்கலானாள். இவளுக்குத் திருமணமாகி விட்டது என்பதையும், கணவன் இன்னொரு ஊரில் வேலை பார்க்கிறான் என்பதையும் தாலி போன்ற சின்னங்களில் நம்பிக்கை இல்லை என்பதையும் இவள் விளக்கிக் கொண்டிருக்க முடியாது.அப்புறம், ''குழந்தைகள் ஏன் இல்லை?'' போன்ற தொடர்கேள்விகள் எழும். இப்படி யோசனையில் இருந்த போதுதான் ரவிக்கையில் தோள் பட்டையில் ஈரமும் கனமும் இருப்பதுபோல் பட்டது. கண்ணனைத் தன் மடியில் நேர் வாட்டில் இருத்திப் பிடித்துக் கொண்டு, இவள் தோளில் தலையைச் சாய்த்திருந்தாள் அந்தப் பெண். கண்ணனும் தலை தொங்கத் தூங்கிக்கொண்டிருந்தது. இரவில் கண்ணன் அவளைத் தூங்கவிடாமல் படுத்தியிருக்கலாம். காலையில் தலைகுளிக்கச் சீக்கிரமே எழுந்திருக்கலாம் அவள் இடுப்பு வரை நீள விழுது போல் கனத்துத் தொங்கியது கூந்தல். எண்ணை, சீயக்காய் தேய்ப்பதற்குள் கை ஒடிந்திருக்கும் தான் குளித்து, குழந்தையைக் குளிப்பாட்டிச் சிங்காரித்து, சரிகை ரவிக்கை அணியுமுன்ன பாலூட்டி என்று காலை நேரம் ஓடியிருக்கும். கல்யாணமோ, கோவிலோ போகத் திட்டமிட்டிருந்ததால் வெறும் காப்பியைக் குடித்து விட்டு அவள் கிளம்பியிருக்கலாம். வாகான தோள் - தலை வழுக்கி விழாத, கைத்தறித்துணி ரவிக்கைத் தோள் - கிடைத்ததும் கண் அயர்ந்து விட்டாளாக இருக்கும். தோளைச் சற்று அசைத்ததும் அந்தப் பெண் எழுந்து கடைவாய் எச்சிலைத் துடைத்துக் கொண்டாள். இவள் தோள் பட்டையைப் பார்த்துவிட்டு, ரவிக்கைக்குள்ளிருந்து ஒரு கைக்குட்டையை எடுத்துத் துடைத்துவிட முற்பட்டாள்.

''மன்னிச்சிக்கிடுங்கக்கா....'' என்றாள்.

இதற்குள் கண்ணன் கண் விழித்து, தன் அடுத்த கடமை என்ன என்பதைத் தெரிந்து வைத்தவன் போல், இவள் கைப்பையின் தோல் வாரைத் தன் வாயில் போட்டுக் கொண்டு அவனுக்கிருந்த நான்கு பற்களால் முனைப்புடன் கடிக்கலுற்றான். இவள் தன் கைப்பையை அவனிடமிருந்து விடுவித்துக் கொண்டாள். உடனே குனிந்து கைக்கடிகாரத்தில் வாயை வைத்தான். இன்னும் சற்றுப்போனால் இவள் ''தாயே யசோதா'' பாடி விடுவாள் என்று தோன்றியது. கண்ணனின் தாக்குதல்களை இவள் தடுத்துக் கொண்டிருந்த போதுதான் புகையிலைச் சாற்றுத்,துளிகளின் அபிஷேகம் நடந்தது. பின்னாலிருந்த கிழவியும் இதைப் பார்த்துவிட்டு, ''யாரது துப்புறது?'' ஒன்று அரட்டல் போட்டு இவளைத் தட்டிக் கொடுத்தாள் - நீ மட்டும் கல்யாணம் செய்து கொண்டு விடு, இந்தத் தொல்லையேதும் உனக்கு இராது என்று சொல்பவளைப் போல.

திருச்சி நிறுத்தத்தை எட்டியதும் இவள் கட்டணக் கழிப்பிடம் போய் உள் தலைப்பை வெளியில் வைத்துப் புடவையை மாற்றிக் கட்டிக் கொண்டாள் பயணத்தின் சின்னங்களை மறைக்க. தற்போதைய ஒற்றை இருக்கை அமர்வு சாலைப் பயணத்தின் துயர் நீக்கும் முயற்சிதான்.

பயணிகள் ஏறத் துவங்கியிருந்தனர். ஒட்டுனா வந்து அமர்ந்தார். வண்டி நிரம்பிவிட்டது. கிளம்பச் சில வினாடிகள் இருந்த போது ஒருவர் அவள் பக்கத்தில்

→

நன்றி நிகழ்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வந்து ''அம்மா'' என்றழைத்தார் கனிவாக. ''என்ன மகனே?'' என்று கேட்பது போல் திரும்பினாள்.

''நீங்க இப்பிடி லேடீஸ் பக்கம் வந்திடறீங்களா?'' என்று மூன்று பேர்கள் அமரும் இருக்கையின் முனையைக் காட்டினார். அவர் ஒரு பெரிய தவறைச் செய்து கொண்டிருந்தார். இவள் வியூகத்தினுள் நுழைய முயற்சி செய்து கொண்டிருந்தார். இவள் தயாராக இருந்தாள்.

''முடியாதுங்க'' என்றாள் தீர்மானமாக. அவர் சற்று திகைத்து, ''லேடீஸ் இதுல உட்காரக் கூடாதும்மா'' என்றார்.

''ஏன் அப்பிடி ஏதாவது ரூல் இருக்குதா?'' என்று கேட்டாள் இவள்.

''ரூலு எல்லாம் இல்ல. நான் இப்பிடி உட்காந்திட்டு டிரைவர் அண்ணாச்சிகிட்டப் பேசிட்டே போவேன்.''

''நான் கூட டிரைவர் அண்ணாச்சிக்கிட்டப் பேசிட்டேதான் போகப் போறேன்'' என்றாள் இவள்.

ஓட்டுனர் சற்று திடுக்கிட்டு இவளைப் பார்த்தார்.

''ஒத்தையில போறீங்களா?'' என்று கேட்டார் முதலில் கூப்பிட்டவர்.

அவள் தலையசைத்துவிட்டுத் தலையைத் திருப்பிக் கொண்டாள். ''விடுய்யா'' என்று விட்டு ஓட்டுனர் வண்டியைக் கிளப்பினார். அவ் நண்பர் பேருந்து முழுவதும் இந்த 'அக்கிரமத்தை'ச் சொல்பவர் போல் பார்த்தார்.

இரண்டு நிறுத்தங்களுக்குப்பின் ஒரு வயதான பெண்மணியும், ஒரு பத்து வயதுச் சிறுவனும் ஏறிக்கொண்டனர். மூவர் இருக்கையின் முனையில் அந்தப் பெண்மணி உட்கார்ந்து கொண்டாள். பையன் இவள் இருக்கையின் முதுகைப் பிடித்தபடி நின்றான். சற்றுத் திரும்பிப் பார்த்தாள். காக்கி அரை நிஜார் போட்டிருந்தான். பலமுறை தோய்க்கப்பட்ட, இஸ்திரி இல்லாத பழுப்பு நிற டிஷர்ட்டின் முன்பக்கம் ஒரு அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் பெயர் இருந்தது. அதற்காகவே அவன் அதை ஆசையாக வாங்கியிருக்கலாம். எதிரே இருந்த கண்ணாடி வழியே வண்டி போகும் வீதியைப் பார்த்தபடி நின்றான். தலையைப்படிய வாரியிருந்தான். நீள இமைகளோடு கூடிய கரிய, துளைக்கும் கண்கள். தன் இருக்கையில் சற்று நகர்ந்து, பின்பு அவனைப் பார்த்தபடி ''தம்பி, உட்கார்றியா?'' என்று கேட்டாள்.

ஒரு வினாடி தயங்கிவிட்டு வந்து உட்கார்ந்தான். வண்டி ஓடிக்கொண்டிருந்தது. தந்திக் கம்பியில் கறுப்பு வாலும், மஞ்சள் மார்பும், கூர் அலகுமாய் ஒரு பொடிப்பறவை கண்ணைத் தொட்டுப் போயிற்று. அவளும் பையனும் சேர்ந்து அதைப் பார்த்தனர். பார்த்துவிட்டு அவன் இவளைப் பார்த்து முறுவலித்தான். இவளும் புன்னகைத்தாள்.

''அது பேரு என்ன?'' என்று கேட்டான்.

அதன் பெயர் தெரியவில்லை என்று எல்லா இந்தியப் பறவைகளைப் பற்றியும் கூறும் புத்தகம் ஒன்று உண்டென்றும் அவள் அவனிடம் சொன்னாள். அதில் ஒவ்வொரு இடத்தைச் சேர்ந்த பறவைகளைப் பற்றி விளக்கங்கள் உண்டு என்று கூறினாள். ஸலீம் அலி பற்றிக் கூறினாள். தொலை நோக்குக் கண்ணாடி மூலம் பலமணி நேரங்கள் பறவைகளைப் பார்ப்பது அவ்ருக்கு பிடித்த வேலை என்று விளக்கினாள்.

''அந்தப் பொஸ்தகம் கிடைக்குமா?''

''உம். உன் ஸ்கூல் லைப்ரரில இருக்கும் பாரு.''

''எங்க ஸ்கூல்ல வேடந்தாங்கல் கூட்டிப் போனாங்க. அங்க ரஷ்யாவிலேந்து கூடப் பறவைக வந்திச்சு. அவ்வளவு தூரம் எப்பிடி வருதுன்னு ஆச்சரியமா இருந்திச்சு.''

'அப்பிடியா?''

''நான் எங்க அப்பாவோட, வயல்ல காவலுக்குப் படுப்பேன் செல சமயம். அப்ப ராத்திரி ரெண்டு ரெண்டரை மணிக்குக் கண்முழிப்பு வந்திச்சின்னு வெச்சுக்குங்க, மேல பாத்தா, வெள்ளை வேளோ்னுட்டு ஏழெட்டுப் பறவைக கூட்டமா, மொள்ளப் பறந்து போறதைப் பார்க்கலாம். செலசமயம் கனால பாத்தேன்னு நெனச்சுக்குவேன்.''

''அப்பிடியா?''

சிறிது மௌனத்திற்குப் பின், ''நான் ஒரு அணிலு வளத்தேன்'' என்றான், அவனுடைய ரகசியம் ஒன்றை அவளிட்ம் பகிர்ந்து கொள்பவன் போல்.

''எப்ப?''

''நான் நாலாவது படிக்கச் சொல்ல, அது பப்பாளி மரத்துக் கீள விழுந்து கெடந்துச்சு. நான் எடுத்து, அப்பா கடிகாரம் வாங்கிட்டு வந்த அட்டைப் பெட்டில சின்னத்துணி போட்டு அதை வைச்சேன். பஞ்ச பால்ல முக்கி அதுக்குப் பால் குடுத்தாங்க அம்மா. அப்புறமா இங்கி ஊத்தற பில்டரு இல்ல, அதால பாலு குடுத்தேன். நாலு குடிச்சிட்டு என் கை மேலெல்லாம் ஓடிச்சு.''

''ம்,''

''அது செத்துடிச்சு'' என்றான் குரலடைக்க.

''எப்பிடி?''

''தெரியல''

''நீ அந்தப் பெட்டில தொளை போட்டியா?''

''போடாம? இல்லாட்டி அது எப்பிடி மூச்சு விடும்?''

''பின்ன எப்பிடிச் செத்துப் போச்சு?''

'தெரியல''

பேசிக்கொண்டிருந்தபோதே, 'நிறுத்து வண்டியை, நிறுத்துங்க வண்டியை'' என்ற கூக்குரல் வெளியே இருந்து கேட்டது. ஒரு கிராமத்தினர் கூட்டமாக நின்றனர். சிலர் கையில் கற்கள். ''எறிடா கல்லை'' என்ற கத்தல் எழுந்தது. கற்களைப் பிடித்த கைகள் ஓங்கின.

இவள் சட்டென்று பையனை அணைத்துக் கொண்டு குனிந்து கொண்டாள்.

ஓட்டுனர் பதட்டத்துடன் வண்டியை நிறுத்தினார், இறங்கினார்.

''என்னய்யா பஸ்ஸ ஓட்டறீங்க? போறவளில எங்க ஊர்க்காரரை பஸ்ஸால அடிச்சு போட்டுட்டு ஓடிட்டுத் தப்பிச்சுக்கலாம்னுட்டு பாக்கறியா? விட்டுடுவமா நாங்க?''

''கொளுத்துடா பஸ்ஸை.''

கூக்குரலும், கூப்பாடும் சற்று மட்டுப்பட்டதும், ஓட்டுனர் அவர்கள் குறிப்பிடும் வண்டி இதுவல்ல என்று விளக்கி பிறகு இன்னும் சிலர் வந்து சமாதானம் செய்து வைத்த பின்னர், வண்டி கிளம்பியது.

பையனின் உடம்பு லேசாக நடுங்கியபடி இருந்தது. அவன் தோள்மேல் இவள் போட்டிருந்த கையின் மேல் கழுத்தைச் சற்றுச் சாய்த்துக் கொண்டான். சிறிது நேரம் பொறுத்துத் தலையைப் பின்னால் சாய்த்த படி உறங்கிப் போனான். முகத்தில் பய ரேகைகள் இருந்தன.

அவன் மேல் பார்வையை ஓட்டிவிட்டு வலது புறம் திரும்பியதும், ஆறஞ்சு வண்ணத்தில் மிதந்தபடி சூரியன் மறைந்து கொண்டிருந்தது. தண்ணென்ற நெருப்பு வட்டம்.

''தம்பி'' என்று அவனை எழுப்பினாள்.

அவன் திடுக்கிட்டு விழித்ததும், ''அங்கபாரு'' என்று சூரியஸ்தமனத்தைக் காட்டினாள்.

அவன் கண்களை விரித்தபடி பார்த்தான். கர்நாடகத்தில் ஆகும்பே என்னும் இடத்தில் அவள் சிறுவயதில் பார்த்திருந்த ஒரு விசேஷ சூரிய அஸ்தமனம் பற்றிச் சொன்னாள். மறையும் போது, சூரியன் அங்கு சதுரமாகவும், நீள்சதுரமாகவும், மதுக்கிண்ணம் போல் பல வடிவங்கள் தோன்றுவதை சொன்னாள்.

''நிசமாவா?''

என்று வியந்தான் பையன்.

வண்டி நிலையத்திற்குள் நுழைந்து நின்றது. பையனுடன் வந்த முதியவள் அவன் கையைப் பற்றிக்கொண்டு இறங்கினாள்.

○

# அந்த அக்டோபர் நாட்கள்




***1988இல் வெளியான The Broken Palmyra என்ற நூலின் தமிழ்ப் பதிப்பு வெளியாகியிருக்கிறது. சிங்களப் பதிப்பு ஏற்கெனவே 1990 மார்ச்சில் வெளியாகி யிருந்தது. கலாநிதி ராஜினி திரணகம, கலாநிதி சிறீதரன், கலாநிதி ராஜன்கூல், கலாநிதி தயா சோமசுந்தரம் ஆகியோரால் எழுதப்பட்ட இந்நூல் வெளிவந்த ஓராண்டுக்குள் இதன் ஆசிரியர்களுள் ஒருவரான கலாநிதி ராஜினி திரணகம புலிகளால் படுகொலை செய்யப்பட்டார். மற்றைய இரு நூலாசிரியர்களான கலாநிதி சிறீதரன், கலாநிதி ராஜன்கூல் ஆகியோர் யாழ்.பல்கலைக் கழகத்திலிருந்து அச்சம் காரண மாக வெளியேற வேண்டியிருந் தது. இப்போது தமிழில் வெளிவந்தி ருக்கும் இந்நூல் அதன் ஆசிரியர்களே கூறுவது போல 'மிகவும் நெருக்குதலான ஒரு கால கட்டத்தில் நிலவிய அபத்தமான போக்குகளை கேள்விக்குட்படுத்தும் ஒரு நடவடிக்கை யின் வெளிப்பாடாக வந்துள்ளது.***

***576 பக்கங்களைக் கொண்டுள்ள இந்நூல் அதன் ஆசிரியர்களே கூறுவது போல 'அதில் கூறப்படுபவை விவாதத்திற்குரியவையாக இருக்கலாம்' என்ற போதும் அவசியம் படிக்கப்பட வேண்டிய ஒரு நூலாகும்.***

***அந்நூலிலிருந்து சில பகுதிகளை இங்கு தருகிறோம்.***

***1.1 ஒப்பந்தம் முறிவடைந்ததன் பின்னணி:***

அது 1987 அக்டோபர் மாதத்தின் பத்தாவது நாள். ஊரடங்குச் சட்டம் இன்னும் அமுலில் இருந்தது. மரங்களுக்கு மேலே தோன்றியிருந்த இருண்ட மேகக் கூட்டங்களும் சலனமற்ற மூடுபனியும் வரவிருக்கும் மழையை முன்னறிவித்தன. மறையும் சூரியனின் கடைசி ஒளிக்கதிர்கள் மேற்கு ஆகாயத்தினுள் மந்தமாக ஊடுருவிக்கொண்டிருந்தன. எங்களின் பனிக்கால ரஷ்ய விருந்தாளிகளான காட்டு வாத்துக்கள் தென் திசையிலிருந்து V வடிவில் பனிக்காலத்தை நாடி யாழ்ப்பாண தீபகற்பத்தின் சதுப்பு நிலங்களை நோக்கிப் பறந்து செல்லும் அழகான காட்சி இப்பொழுது உயரே தெரிந்தது. இருட்டத் தொடங்கியதன் அழகு ஏதாவது கெடுதல் நிகழவிருக்கிறது என்ற எச்சரிக்கையுணர்வையும் தராமல் இல்லை. சமீப காலங்களில் எங்கள் தேசம் எவ்வளவோ துயரங்களைச் சந்தித்திருக்கிறது. ஜூலை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும் அமைதி நிலவ ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் என்று பலர் நம்பிக்கையோடு இருந்தனர். அப்பாவி மக்களை அழித்துக் கொண்டிருந்த 'ஷெல்' ஓசைகளும் குண்டு பொழியும் இரைச்சலும் கடந்த காலத்துடன் முடிந்து போய்விட்டது என்று தான் நம்பப்பட்டது. ஆனால் இன்று யாழ்நகர் மீண்டும் ஷெல் தாக்குதலின் இரைச்சலினால் அதிர்ந்தது. மக்கள் மீண்டும் பீதியடைந்தனர். என்ன நடக்குமோ என்ற அச்சமும் அவர்களைக் கௌவிக் கொண்டது.


இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இரண்டு மாத காலமாக நடைபெற்றுக்கொண்டிருந்த அமளிதுமளியான நிகழ்ச்சித் தொடர்களை பலர் திகிலோடு கவனித்து வந்திருந்தனர். ஒப்பந்த ஏற்பாடுகளில் உட்பொதிந்திருந்த நிச்சயமின்மை பிரச்சினை எப்படியோ வெடித்தே தீரும் என்பதனைத் தவிர்க்க முடியாததாக்கியிருந்தது. இதன் காரணமாக மோதல்களில் யார் முதலில் சுட்டது என்பது முக்கியமே இல்லாத ஒரு விஷயமாகப் போய்விட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நெருக்கமானதாகக் கருதப்பட்ட ஈழமுரசு, முரசொலி ஆகிய பத்திரிகைக் காரியாலயங்களுக்குள் இந்திய சமாதானப் படை அதிகாலையில் நுழைந்திருந்தது. காரியாலயத்தை உடைத்து நொறுக்கிய பிறகு அங்கிருந்த ஆசிரியர் குழுவைச் சேர்ந்த பல செய்தியாளர்களையும் அச்சுக்கூட ஊழியர்களையும் கைது செய்து தம்முடன் இந்திய சமாதானப்படை கொண்டு சென்று விட்டது. இந்த இரண்டு பத்திரிகை நிறுவனங்களும் மூடப்பட்டு விட்டதாகப் பின்னர் அறிவிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் அணிதிரள ஆரம்பித்தனர். அதன் ஆயுதந்தாங்கிய உறுப்பினர்கள் இந்திய சமாதானப்படை முகாம்களின் முன்திரண்டனர். அன்று பிற்பகல் யாழ்ப்பாணக் கோட்டையின் பக்கத்திலிருந்து சூட்டுச்சத்தம் கேட்க ஆரம்பித்தது. இதைத்தொடர்ந்து ஷெல் வெடித்துச் சிதறும் இரைச்சல் கேட்டது. ''எங்களைச் சுடுவது இந்திய இராணுவமாக இருக்க முடியாது. இது இலங்கை இராணுவமாகத் தான் இருக்க வேண்டும்'' என்று பலர் நடந்துகொண்டிருப்பதை நம்ப முடியாதவர்களாய் சொல்லிக் கொண்டனர். யாழ் கோட்டையிலும் தெல்லிப்பளையிலும் இந்தியப்படையினர் மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்த்தியதாக அன்று மாலை வானொலியில் அறிவிக்கப் பட்டது. மேலும் தெல்லிப்பளையில் துப்பாக்கித் தாக்குதலுக்கு இலக்கானது இந்திய சமாதானப்படையின் சென்னை ரெஜிமண்ட் பிரிவுதான் என்றும் அத்தாக்குதலில் ஐந்து பேர் கொல்லப்பட்டதாகவும் சென்னை அகில இந்திய வானொலி ஊர்ஜிதப்படுத்தி செய்தி அறிவித்தது. அதுகாலவரை யாழ் குடாநாட்டிற்குள் சுதந்திரமாக நடமாடிக்கொண்டிருந்த இந்திய சமாதானப் படையினர் விடுதலைப் புலிகளின் பல முக்கிய முகாம்களை ஏற்கெனவே பார்வையிட்டிருந்தனர். ஒப்பந்தம் நடந்து முடிந்த இரண்டு மாதங்களுக்குள் எதிர்பார்த்திருக்காத வேளையில் விடுதலைப் புலிகளை தாக்குதவதற்கான உள்நோக்கம் இருந்திருக்குமெனில் தமக்குத் தேவையான சகல தகவல்களையும் திரட்டிக்கொள்வதில் இந்தியப் படையினருக்கு எந்தச் சிரமும் இருந்திருக்காது.

உண்மையில் யாழ் பல்கலைக்கழகத்திற்கு எதிரில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் பிரதான முகாமில் இந்தியப் படையுமே நிலைகொண்டிருந்தது. மிகவும் அற்ப விஷயங்களில் இரு பத்திரிகை நிறுவனங்களை மூடி - சில தொலைக்காட்சி ஒளிபரப்புச் சாதனங்களைக் கைப்பற்றிய நிகழ்ச்சிகளுக்கூடாக தனது ஆச்சரியகரமான தாக்குதலை இந்தியப்படை ஏன் நிகழ்த்தியது என்பது இன்னும் பலருக்கு புதிராகவே இருக்கிறது. தம்மிடமிருந்த ஆட்பலம், தொழில் நுட்பங்கள் மற்றும் உளவுப்பிரிவின் பலம் ஆகியவற்றுடன் தமக்கு மிகவும் அனுகூலமான முறையில் இந்திய சமாதானப்படை எத்தனையே வழிகளில் பயன்படுத்திய இத்திடீர் தாக்குதலை நடத்தி இருக்க முடியும். விடுதலைப் புலிகளுக்கு எச்சரிக்கை விடுத்துவிட்டு, அவர்களின் பதில் தாக்குதலுக்காக இந்தியப்படை இப்போது காத்திருக்கிறது. விஷயங்கள் மிகவும் பயங்கரமாகத் தடம் புரண்டு கொண்டிருப்பதற்கான முதல் சமிக்ஞை இது. இன்னும் அதிமோசமானவை நடக்கப்போகின்றன. ஒப்பந்தம் தவிடு பொடியாவதற்கான சூழல் எவ்வாறு உருபெற்றது என்பது ஏற்கெனவே விபரிக்கப்பட்டிருக்கிறது.

www.tamilarangam.net





வை. ஜெயமுருகன்

ஒரு சோகச்செய்தி: ஒரு எழ்ழுத்தாளன் மறைந்துவிட்டான். பிரபல கவிஞரும் எழுத்தாளரும், விமர்சகருமான பிரேமிள் என அழைக்கப்படும் தருமு.சிவராம லிங்கம் அவர்கள் மறைந்து விட்டார்.

திருக்கோணமலையைச் சேர்ந்த வர் என பலரால் அறியப்படாத போதிலும் தமிழ் நாட்டின் கலை, இலக்கிய வட்டத்தில் பரவலான அறிமுகத்திற்கு உட்பட்ட பிரே மிள் அவர்களுக்கு இறக்கும் போது வய்து 57 வருடங்கள்.

20-4-1939 ஆண்டு பிறந்த இவர், திருக்கோணமலை வித்தியாலயம் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டு தி/ஸ்ரீ இராமகிருஷ்ண மிசன் இந்துக்கல்லூரியில் கல்வி பயின்ற காலத்தில் இருந்தே எழுத்தை நேசித்தவர்.

எழுத்தை உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்து, 1972 இல் இந்தியா சென்று; அதையே இலட்சியமாகக் கொண்டு இலக்கி யங்கள் படைத்தவர்.

தமிழ் நாட்டில் பல்வேறு விவாதங் களுக்கும் சர்ச்சைகளுக்கும் எதிர் நீச்சல் போட்ட இவர்; கலை, இலக் கிய முயற்சிகளை சளைக்காமல், இறக்கும் வரை முன்னெடுத்தவர்.

அஜீத்ராம், பிரேமிள், தருமு அரூப் சிவராம், பிருமிள் போன்ற பெயர்களால் அழைக்கப்படும் இவர் சிறந்த ஓவியரும் கூட.

1950 ஆம் ஆண்டின் இறுதிப்ப குதியிலிருந்தே எழுதி வந்த பிரேமிள் முதன்மையான கவிஞர். வல்லமை வாய்ந்த - சிறந்த விமர்சகர். சிற்பியும் ஆவார்.

இக்காலப்பகுதியில், இல:09, வீச்சுக்காரத்தெரு, திருக்கோண மலையிலிருந்து 'வீணை வேந்தன்' என்ற புனை பெயரில் 'யாழ்' என்னும் சிற்றிதழ் நடாத்தப் பட்டது. இவ்விதழில் கவிதை, விமர்சனம் என பல ஆக்கங்களை எழுதியவர் பிரேமிள். இன்றும் கூட இவரின் கையெழுத்துப் பிரதிகள், வெளிவராத ஆக்கங்கள் பல, திரு.த.அமரசிங்கம் (திருக் கோணமலையில் வசிப்பவர், வெளியீட்டாளர்) அவர்களால் பேணப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது.

''பிரேமிளின் படிமவியல் இரண்டாயிரம் வருடத்தமிழ் கவிதைச் சரித்திரத்தில் புதுமை யானது'' என்று 'எழுத்து' சி.சு.செல்லப்பாவினாலும், ''இவன் தமிழிலக்கியத்தில் ஒரு மாமேதையாகக் கனிந்தி ருக்கிறான்'' என்று ஜானகி ராமனாலும் பாராட்டப் பட்டவர்.

(ஆதாரம்: கலை, இலக்கிய ஆய்வு '93)

உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தல் சுதந்திரம். உணர்ச்சியின் வசப்ப டுகிறாய் என்றால் நீ சுதந்திரத்தை இழக்கிறாய்'' என்ற வசனம் 1957ல் யாழ் சிற்றிதழில் வெளிவந்த இவரின் கட்டுரையில் காணப்படுகிறது.

சிறுகதைகளிலிருந்து அரசியல், சமூகவியல், நாடகம், விஞ்ஞானக் கட்டுரைகள் என பன்முகத்தள ங்களில் அயராது இயங்கியவர். இவரின் அறுவடையாக.

1. 'கைப்பிடியளவு கடல்' (கவிதைகள்)
2. 'விமர்சன ஊழல்கள்' (விமர்சனம்)
3. 'மேல் நோக்கிய பயணம்' (கவிதைகள்)
4. 'தமிழின் நவீனத்துவம்' (விமர்சனம்)
5. 'லங்காபுரி ராஜா' (கவிதைகள்)
6. ஆயி' (குறுநாவல்)
7. 'ஸ்ரீலங்காவின் தேசியத் தற்கொலை' (அரசியல்)
8. 'அப்பா துரையின் தியான தாரா' (ஆன்மீகம்)
9. 'நக்ஷத்தரவாஸி' (நாடகம்)

மற்றும் படிமம் தயாரிப்பு வேலை கள் என இவரின் படைப்புலகம் விரியும்.

நாடகத்துறையில் குறிப்பாக நாடக பிரதி ஆக்கத்துறையில் ஈடுபட்ட பிரேமிள் அவர்கள், 'நக்ஷத்திர வாஸி' என்ற நாடகத்தை பேராதெனிய பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் மேடை யேற்றியதும், பாலேந்திரா நாடகக் குழுவினர் வெவ்வேறு இடங்களில் காட்சிக்குக் கொண்டு வந்ததும் இப்போது இவர்களால் இலண் டனில் இந்நாடகத்தை அரங்கேற்றி யுள்ளமையும் நாம் அறிந்ததே.

வாழ்வையும் எழுத்தையும் நாணய த்தின் பக்கங்கள் எனக்கருதியவர். வாழ்வின் வறுமை இவரை அண்டிய போதும் தன் படைப் புலகத்தை படரவிட்டவர். குறிப் பாக, திருக்கோணமலையைச் சேர்ந்த படைப்பாளிகள் இலக்கிய ஆர்வலர்கள், நண்பர்கள் ஆகி யோருடன் மறையும் வரை தன் தொடர்பை பேணி வளந்தவர்.

மனிதர்களை நேசித்த பிரேமிளின் மறைவு சமூக இழப்பே. பிரேமிள் மறைந்துவிட்டாலும் அவரின் ஆக்கங்கள், எம்முடன் இருக்கும். அதுதான், சிறந்த படைப்பாளி; அவனது படைப்புக்கள் காலத்தால் மறையாதவை போலும்.

○

# தருமு எனும் கலைஞன்

மு. பொ



தருமு சிவராமு எனும் கலைஞன் மறைந்து விட்டான். வயது ஐம்பத் தேழு. பிறந்த திகதி 22.04.1939. இயற்பெயர் டி. சிவராமலிங்கம். தரித்த புனைப்பெயர்கள் அனேகம்: தருமு சிவராம், அரூப், அரூப் சிவராம், பிறேமில், பிறேம், பிறேமில் பானுசந்திரன், பிரமிஸ்... அவ்வாறே கைவந்த கலைகளும் அனேகம். சிற்பம், சித்திரம், கவிதை, கதை, கட்டுரை, ஆய்வு, சாத்திரம்....

தானே ஒரு தனிக்கூட்டம்; தனி இயக்கம்.

தன்னைச் சூழ ஆயிரம் வக்கிரங்கள், ஆயிரம் மேதமைக்கீற்றுக்கள் மிதந்து திரிய, தனக்கே உரிய கவிதா ஆசனத்தில் அமர்வு.

தான் அமர்ந்திருக்கும் கவிதா ஆசனத்தில் ஓட்டை விழுந்திருக் கிறது என்று சொல்லக்கூடாது. தையல் போடப்பட்டிருக்கிறது என்று பேசக்கூடாது.

அப்படியாராவது தைரியமாகச் சொல்லிவிட்டால் சொன்னவன் தொலைந்தான். நக்கீரன் மாதிரி சொன்னவன் பொற்றாமரைக் குளத்தில் பாயவேண்டியதுதான். அப்பொழுதும் தர்முவின் 'நெற்றிக் கண்' சூடு அவனைத் தொடர்ந்து தாக்கிக்கொண்டுதான் இருக்கும்! மேலும் பலகாலந் தொடர்ந்து பல நாமங்களில் தீப்பிளம்பைக் கக்கும்! ஒரு பக்கம் மேதமையின் உச்ச வெளிப்பாடு. மறுபக்கம் ஒருவித மனோவியாதிக்கிறுக்கின் கட்டற்ற ஓட்டம். இவ்விரு பிளவுபட்ட ஆளுமையின் ஆப்புக்கிடையே டி.சிவராமலிங்கன் என்னும் மனி தன் 'நன்னப்'பட்டுத் தூக்கியெறியப் படுகிறான்.

மேதைத்தனத்துக்கும் 'கிறுக்கு'ப் போக்குக்குமிடையே அப்படி என்ன ஒட்டுறவு?

மேதமையின் உச்ச வெளிப்பாடாய் **கவிதைப் பொழிவு.**

*'கடலில் பொழியும் அமிர்த்தாரை*
*கடவுள் ஊன்றும் செங்கோல்?'*

அதேவேளை கிறுக்கிப் போக்கின் உச்சவெளிப் பாட்டில் தன் மேதமையைப் பேண கையெறியும் அரவணைப்பை வெட்டித்தறித்தல். தர்மு மேலெழுந்து செல்லும் ஓர் சிறகு பற்றி எழுதிய கவிதையில் 'அதுதன் விதியை எழுதி எழுதி மேற்செல்லும்' என்னும் வரிகளில் தன்னையே ஒப்புவிக்கும் அனா தைத்தனம்.

ஆதரித்து கைகொடுத்தவனுக்கு எதிராக எந்த நேரம் வரிந்து கட்டிக் கொண்டு வெளிக்கிடுவார் என்று சொல்ல முடியாது.

'அவரை ஆதரித்த சுந்தர ரமசாமிக்கு அது நேர்த்திருக்கிறது'. இலங்கை எழுத்தாளர் ஒருவருக்கும் இது நிகழ்ந்திருக்கிறது. இலங்கையில் தர்முவுக்கு பலவிதத்தில் உதவி உபகாரம் செய்த அந்த எழுத்தாளர் தமிழ் நாட்டில் தர்முவை சந்திக்கப் போன போது தர்மு அவர்மேல் கொடுக்குக் கட்டிக்கொண்டு பாய் வார் என்று அவர் எதிர்பார்க்க வில்லை.

''நான் இங்கே என்ன செய்கிறேன் என்று உளவு பார்க்க வந்தாயா?'' என்ற தொனிப்பட தூஷண வார்த் தைகளில் தாறுமாறாகப் பேசுகிறார். போனவர் வெலவெலத்துப்போகி றார். பிறகு சிறிது நேரத்திற்குப் பின்னர் ''வா, டீ குடிக்கலாம்'' என்று தர்மு அழைக்கிறார்! பாவம் பிளவுபட்ட மனநிலையால் பந்தாடப்பட்ட தர்மு!

ஒரு முறை மு.த.வுக்கு ''மு.த. என்றுஎழுதாதே. அது ஒரு Fatal 8 எண் கொண்டது'' என்று புத்திமதி புகட்டி கடிதம் எழுதுகிறார். அதற்கு மு.த. ''எண்சாத்திரம் என் விதியைத் தீர்மானிக்கிறதென்றால் தீர்மானிக் கட்டும். ஆனால் அதற்காக நான் என் பெயரை மாற்றிக்கொள்ளப் போவதில்லை. நான் 'மு.த.' தான்'' என்று பதில் அளிக்கிறார். உடனே தர்முவுக்கு கோபம் வந்து விடுகி றது. ''எனக்கு புத்தி சொல்ல வராதே' என்ற பாணியில் எழுதி போஸ்ட்கார்ட் ஒன்றை விட்டெறி கிறார்!

மு.த. தனது ஏழாண்டு இலக்கிய வளர்ச்சியில் தர்மு பற்றிக் குறிப் பிடுகையில், ''...தருமு சிவராமிடம் ஓர் ஆழ்ந்த கலையுள்ளம் இருக் கவே செய்கிறது என்பதை மறுக்க முடியாது. எப்படி ஒரு Schizophre-nia கீற்றுக்குள் அவரது எழுத்துக் களில் (கிஸோஃஃறேனியா ஒருவித மனோவியாதி. மு.பொ) இருக்கின் றனவோ அப்படியே Mysticismற் குரிய முத்திரைகளும் இல்லாமல் இல்லை. அதனால்தான் தர்மு சிவராமுவை எனக்கு அப்படிப் டிக்கிறது'' என்கிறார்.

ஆனால் தருமு சிவராமுவோ, ''மு.த- ஒரு மனோவியாதி மண்ட லம்'' என்றோரு சிறுநூல் எழுதி, மு.த. வின்பேர் அதிகமாக தமிழ் நாட்டில் பேசப்பட்ட எண்பதுகளில் வெளியிடுகிறார்!

தர்முவோடு யாரும் நட்புறவை அதிகமாகப் பேண முடியாது. கராணம் அவர் அதிகமாகத் தன்னை வழிபடும் (Narcissistic) போக்குக் குரியவர். பிறரை அவர் விமர்சிக்கும் போது அது அவருக்கொரு இன்ப உலா வரும் குதிரைச்சவாரி. ஆனால் யாரும் தன்னை விமர்சிக் கும் வாடை பட்டுவிட்டால் அது போர்ப்பறையாகவே அவர் செவிகளில் விழும்!

2

தர்முவின் மேதமை எத்தகையது?

தர்முவின் கவிதைபற்றிக் குறிப்பிடு கையில் சி.சு. செல்லப்பா, ''பிறேமி லின் படிமவியல் இரண்டாயிரம் வருடத்தமிழ்க் கவிதைச் சரித்திரத் தில் புதுமையானது'' என்று போற்று கிறார்.

இது உண்மை. தமிழ் புதுக்கவிதை மரபை படிமம் என்னும் புதுத்தளத் திற்கு உயர்த்தி புதுநடை பயில விட்டதில் தர்முவுக்கு முதலிடம் உண்டு. கவிதா ஆற்றல் என்று வரும்போது எதிரிகள் கூட இவரிடத்தில் இந்த விஷயத்தில் வெறுப்போடு விருப்புடையோராக (Grudging affection) இருப்பது கண்கூடு. அதனால்தான் $E = MC^2$ என்ற இவரது கவிதை 'சிற்பி' என்ற தமிழ் நாட்டுக் கவிஞரால் அப்படிப் பாராட்டப் பெற்றது!

தமிழ் நாடு எப்பொழுதுமே ஈழத்த வர் படைப்புக்களை சீரியஸ்ஸாக எடுப்பதில்லை. 1956களில் பகீரதன் இலங்கை வந்தபோது 'நாங்கள் 20 வருடம் தமிழ் நாட்டை விட ஆக்க இலக்கியத்தில் பிந்திக்கிடக்கிறோம்' என்ற கூறியபோக்கு இப்பவும் தமிழ் நாட்டில் பலரிடம் உண்டு.

அத்தகைய சூழலின் மத்தியில் தர்மு தனியனாக நின்று தன் விமர்சனம் கவிதை ஆற்றல்கள் மூலம் ''சிலோ ன்காறன் நல்லாத்தான் எழுதுகி றான்'' என்று தமிழ் நாட்டவர் சொல்லவைத்தவர்.

தமிழ் நாட்டில் குழுவாதங்கள், கொள்கை வாதங்கள் என்பவற்றின் காரணமாக ஒதுக்கப்பட்ட, கைவி டப்பட்ட பல ஆற்றல்மிக்க இளங் கவிஞர்கள், கலைஞர்கள் போன்ற வர்களை கைதூக்கி விட்டு அவர்கள் இவரைச் சுற்றி செய்மதிகளாய் வலம்வர ராஜ நடை போட்டவர் தர்மு. தமிழ் நாட்டில் இலக்கியச் சர்வாதிகாரம் செய்ய முயன்றவர் களுக்கு தர்மு ஒரு தலையிடி. ஒரு வித பயம் தரு பிரகிருதி.

இத்தனையும் அவர் மேதமையின் சாதனைதானே?

புவியின் ஈர்ப்புள் சிக்கி பெருஞ் சுடரோடு வந்து வீழ்ந்து கருகிப் போன எரிநட்சத்திரமாகவே அவர் என் முன் தோன்றுகிறார்.

○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கடந்த ஆண்டு ஜனவரி மாதம் புதுதில்லியில் இந்தியாவின் அனைத்துலகத் திரைப்படவிழா இடம்பெற்றது. அங்கு சில படங்களைப் பார்த்தேன். அங்கு ஆசியாவின் பெண் நெறியாளர்கள் நெறிப்படுத்திய படங்களுக்காக ஒரு போட்டியையே நடத்தினார்கள். உலகிலே பெண் திரைப்பட நெறியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதும், அவர்களில் பெரும்பாலானவர்கள் ஆசியாக் கண்டத்திலே காணப்படுவதும் முக்கியமான ஒரு விடயம். திரைப்படம் என்ற வெகுஜன ஊடகம் மகளிர் மீதும், பார்க்கும் ஆண்கள் மீதும் பாரிய செல்வாக்கைச் செலுத்தி வருகிறது.

எனவே, செல்வாக்கை ஏற்படுத்தும் இந்தப்படங்கள் பற்றியும், இவற்றினை நெறிப்படுத்தும் பெண்கள் பற்றியும் நாம் சிறிது அறிந்து வைத்திருத்தல் எம்து எதிர்கால ஆய்வுக்கும், செயற்பாட்டுக்கும் உதவும்.

நமது நாட்டைச் சேர்ந்த யாழ்ப்பாணத்துத் தவமணிதேவி ''வன மோஹினி'' என்ற படத்தில் அக்காலத்தில் அரைகுறை ஆடை என்று கருதப்பட்ட ஆடையில் நடித்திருந்தார் என்பதையும் இங்கு நாம் நினைவுகூறலாம்.

இந்தியாவை நாம் எடுத்துக் கொண்டால், முழுநீளக்கதைப் படங்களையும் ஆவணரீதியான கோவைப்படங்களையும் பெண்கள் நெறிப்படுத்தியிருக்கிறார்கள்.

Documentary Film எனப்படுபவற்றை இந்தியப் பெண் நெறியாளர்கள் பலர் நெறிப்படுத்தியுள்ளனர். இவற்றிலே பலவற்றில் சமூகப்பிரச்சினைகள் பெண்களின் கண்களூடாகச்சித்தரிக்கப்படுகின்றன. Documentary Films ஐத் தமிழில் நாம் இப்படி அழைக்கலாம்.

''புனையா மெய் விளக்கத் திரைப் படம்'' இடையில் விளக்கவுரைகளுடன் இயல் நூலையோ, பழமை ஆய்வையோ, தொழில் துறையையோ, பயணத்தையோ பற்றிய மெய்நிகழ்ச்சிகளை மட்டும் கலப்பின்றிக் காட்டும் இயக்கப்படம்.

பழைய ஹிந்தித் திரைப்படங்களைப் பார்த்த உங்களிற் சிலருக்கு துர்கா ஹோத் (Durga Khote) என்ற நடிகையை ஞாபகமிருக்கலாம். இவர் பின்னர் மராத்தி மொழியில் Documentary படங்களை நெறிப்படுத்தத் தொடங்கினார். இவருடைய மகளான விஜயா மேத்தாவும் (Vijaya Metha) பிரபல பெண் நெறியாளர்.

1952 முதல் வெளியாகியுள்ள பெண் நெறியாளர்களின் படைப்புகள் பற்றிய ஆய்வு இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை. ஆயினும் சில பொது அம்சங்களை நாம் இனங்காண முடியும்.

உலகப்பெண் நெறியாளர்கள் அனைவரிடத்தும் காணப்படக் கூடிய பொதுவான சிறப்பம்சங்கள் என இவற்றைக் குறிப்பிட முடியும்.

ளங்கள் பதிவு செய்யப்பட்டு, பின்னர் விரிந்த ஒரு படுதாவுக்குள் தமது சித்தரிப்பை உள்ளடக்குகின்றனர்.

இந்தப் பெண் நெறியாளர்கள்

எனலாம்.

உதாரணமாக, இந்தியாவின் முதலாவது திரைப்பட நடிகையான கமலாபாய் பற்றிய சரிதைப் படம் ஒன்றை ரீனா மோகன் (Reena Mohan) தந்திருக்கிறார். பெண்கள் இடம் வீடுதான். பகிரங்கத்தில் அவர்கள் நடமாடவே முடியாது என்றிருந்த காலகட்டத்தில், திரையில் நடிக்க வந்த ஒரு பெண்மணியின் புரட்சிப் போக்கைச் சித்தரிப்ப



சுஹாசினி.

கே.எஸ். சிவகுமாரன்

# இந்திரா

சுஹாசினி

## திரைப்படத்தின் தாக்கமும் பெண்ணின்வாழ்நிலையும் — 2

### பெண் நெறியாளர்கள் செலுத்தும் கவனம்

பெண் நெறியாளர்கள் பெரும்பாலும் பெண்கள் சம்பந்தப்பட்ட பொருள்களையே தமது படங்களின் கதைப்பொருள்களாக அல்லது விவரணப் பொருள்களாக எடுத்துக் கொள்கின்றனர். பெண்கள் சம்பந்தப்படாத பொருள்களை எடுத்துக் கொள்ளும் வேளையிலும், அவை பெண்களின் கண்ணோட்டத்திலேயே அணுகப்படுகின்றன. தவிரவும் அவர்கள் தமது சொந்த, தனி ஆளுமைக்குரிய படங்களாக எடுக்கின்றனர். சிறுசிறு அவதா

பெரும்பாலும் தலைசிறந்த மரியாதைக்குரிய பெண்மணிகளின் சரிதைகளை திரைப்படம் மூலம் ஆவணப்படுத்துவதில் அக்கறை காட்டுகின்றனர். இளைஞர்களாகத் தம்மை இனங்காட்டுவதுடன் அல்லாமல், சமூகப் பிரக்ஞை கொண்டவர்களாகவும் இந்த நெறியாளர்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர். சமூக மற்றும் தடைகளை நீக்கி சமத்துவமாக மகளிர் மதிக்கப்படும் பொருட்டு திரைப்படம் மூலம் இந்த நெறியாளர்கள் பணி செய்கின்றனர்

தன் மூலம் நெறியாளர், பார்வையாளரிடையே ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி, அவர்களைத் தூண்டவும் செய்கிறார் எனலாம். இதே போன்று கங்காபாய் ஹன்கல் (Gangabai Hangal) என்ற இசைஞானியின் சாதனைகளையும் அந்தப் பாடகியும் அவர்தாய் 'அம்பா பாய்'யும் (Ambabai) எதிர் நோக்கிய போராட்டங்களையும் உள்ளடக்கும் படம் ஒன்றை விஜயா முல்லாய் (Vijaya Mulay) நெறிப்படுத்தியிருக்கிறார் இதே போல்

மற்றொரு வட இந்திய சமூக சேவகியான சங்கபாய் (Sangabai) பற்றி ஹரிமன்ரி பானர்ஜி (Harimanti Bannerjee) ஒரு படத்தைத் தந்துள்ளார். இவர்களை விட Deepa Dhanaraj, Suhasini Muly, Manjra Dutt போன்றவர்களும் சில Documentary படங்களைத் தந்துள்ளனர்.

'Something Like A War' ''யுத்தம் போல ஒன்று'' என்பது Deepa Dhanaraj நெறிப்படுத்திய படம். உடலுறவு சம்பந்தப்பட்ட பெண்களின் பார்வை, குடும்ப நலத்திட்டம் போன்ற விஷயங்கள் பற்றிய பார்வையைப் பெண்களே தமது கண்ணோட்டத்தில் தெரிவிப்பதை உள்ளடக்கி, இந்தப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பெண்களிடையே எழுதப்படிக்கத் தெரியாத நிலை, தாழ்ந்த குலப் பெண்கள் படும் அவஸ்தைகள், சீதனப்பிரச்சினைகளால் பெண்கள் பல கொடுமைகளுக்கு உட்படுதல், ஆண்களின் குடிபோதையினால் பெண்கள் படும் துன்பங்கள், மத்திய கிழக்கு வேலை வாய்ப்புக் காரணமாகப் பெண்கள் எதிர் நோக்கும் பால் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், குடும்ப உறவுகளின் சீரழிவு, குடும்பத் தகராறுகள் காரணமாக இடம் பெறும் வன் செயல்கள், தேவதாசிகள் எனப் படுபவர்களின் வாழ்க்கைப் போக்குகள், மற்றும் பல விஷயங்கள் தொடர்பாகப் பெண் நெறியாளர்கள் தமது சித்தரிப்புகளின் மூலம் தமது தனிப்பட்ட பார்வைகளைத் தந்துள்ளனர். Meera Dewan, Sai Paranjpaye, Gopi Desai, Aruna Raja, Rinki Bhattacharya, Shiva Dhasani போன்ற பல இந்திய பெண் நெறியாளர்களின் சித்தரிப்புகள் மூலம் பார்வையாளர்கள் தாக்கம் பெற்றுத் தமது அந்தஸ்தையும், வாழ்நிலையையும் உயர்த்த ஆதர்சம் பெற்றுள்ளனர் எனச் சில விமர்சகர்கள் கூறுகிறார்கள். வட இந்தியாவிலும், தென்னகத்திலும், இலங்கையிலும் இவ்வகையான முயற்சிகள் அரிது. சுஹாசினி மணிரத்தினம், தமது ''பெண்'' என்ற பொதுத்தலைப்பில் அளித்த பிரபல தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைகளை மையமாகக் கொண்டு சின்னத்திரைக்குத் தந்த குறும்படங்களும், அவருடைய ''இந்திரா''வும் கலைத் திரைப்பட விமர்சனத்துக்கு உட்பட்டாலும், குறிப்பிடத்தக்க முயற்சிகள் எனலாம்.

*மிகுதி அடுத்த வாரம்*

## எனக்குமோர் பெண் பாருங்கள்

பெரிதாக ஒன்றும் தேவையில்லை!
இருக்க ஒரு கல்வீடும்,
கார், நிறுத்தப்போட்டிக்கோவும்,
கழுத்துக்குரிய நகையும்,
காதணியும், மற்றளவும்!
பெண்ணுக்குரியவைதானே; அத்தோடு
கைரொக்கம் கொஞ்சமிருப்பின்,
கல்யாணச்சடங்கிற்குத் தேவையன்றோ,
இவையாவும் உள்ளவளாய்
எனக்குமோர் பெண்பாருங்கள்
தாம்பத்யத்தகுதி அனைத்துமெனக்குண்டு.
எனது நட்சத்திரம் - கார்த்திகை
இராசி - கன்னி
எனக்குச் செவ்வாய் தோசமில்லை.

— இலக்கியா

## மௌனமாகி நின்றாய் நீ வாழி!

உயிரோடிருத்தல்
குற்றமாகவும்
துரோகமாகவும்
அதிசயமாகவும்
இறுதியாக ஆக்கப்பட்ட சிறு தீவில்
சிறுவர்களின் கண்காணிப்பில்
பெரியோர் இருக்கின்றனர்.

ஒரு நாள்,
ஒரு சிறுவன் தன் தலைவனை வழிகாட்டி யென்கிறான்.
கல்வி கேள்விகளில் வல்லோரும் ஆமென்கிறார்.
கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்களால்
தன் இறுதிக் கடிதத்தை எழுதுமாறான சூழலிற்குள்
அவன் விடப்படுகிறான்.

கற்றோரும் மற்றோரும் வேகமாக
அவன் சொற் பதங்களைக் கற்கின்றனர்.

உயிரோடிருக்க
குற்றமற்று
துரோகமற்று
அதிசயிக்க
மறுநாளும் இருக்க.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மு.பொ.வின் அடையாளம் எது? கவியுவனின் இருப்பு எது?

'இன்று தமிழில் நம்பிக்கை தரக்கூடிய படைப்பாளிகள் பரவலாகக் காணப்படுகின்றார்கள். வெற்றியின் எல்லைக் கோட்டை அடைய, முகத்தை முன்னீட்டும் குதிரைகள் மாதிரி அசுரவேகத்தில் தம் சிறந்த ஆக்கங்களை முன்வைப்பதில் இவர்கள் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றார்கள்' என 'கடலோடு கலத்தல்' என்னும் தலைப்பில் தமது 'கடலும் கரையும்' என்னும் சிறுகதைத் தொகுப்புக்கு எழுதிய முன்னுரையில் மு.பொ. அவர்கள் கூறிச் செல்கின்றார்.

'உலக இலக்கியத்தினுள் பிரவேசிப்பதற்கு தயாராக எம்மிடம் சிறுகதைகள் நிச்சயமாக உண்டு' என பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் 'மூன்றாவது மனிதன்' சிறுசஞ்சிகைக்கு அளித்த நேர்காணலில் கூறியுள்ளார்.

'கதைத் தொழில்நுட்பம் நன்கு கைவரப்பெற்ற பின்னரே இக்கதைகளை நான் எழுதினேன்' என ஜெயமோகன் அவர்கள் தமது 'மண்' சிறுகதைத் தொகுப்பின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

''தமிழ்ச் சிறுகதைகள் பிரக்ஞை பூர்வமாகக் கையாளப்படுகின்ற வளர்ச்சி பெற்ற ஒரு புனைகதை வடிவம்'' என்னும் எடுகோளை தயக்கமின்றி நாம் எடுத்துக் கையாள்வதற்கு மேற்கூறிய கூற்றுக்கள் போதிய துணிவை வழங்குகின்றன.

மு.பொ. அவர்களது 'கடலும் கரையும்', திருக்கோவில் கவியுவன் அவர்களது 'வாழ்தல் என்பது' ஆகிய சிறுகதைத் தொகுப்புகள் இந்த எடுகோளின் அடிப்படையில் ஆய்வு செய்யப்படும் தகுதிகளைக் கொண்டிருக்கின்றன என்பது எனது கருத்தாகும்.

அறுபதுகளின் ஆரம்பத்திலிருந்து தொண்ணூறுகளின் மத்திவரை மு.பொ. அவர்கள் எழுதிய பதினொரு கதைகள் 'கடலும் கரையும்' ஆகத் தொகுக்கப்பட்டுள்ளன. கதை சொல்லும் கலையில் அவர் கைதேர்ந்தவர் என்பதை இத்தொகுப்பில் உள்ள பல கதைகள் நிரூபணம் செய்கின்றன.

60களிலிருந்து 90கள் வரை ஈழத்தமிழ் படைப்பிலக்கியத் துறையில் ''எடுத்துக் கையாளப்படும் பொருள்'' பரிணாமமடைந்து செல்வதை இத்தொகுப்பின் மூலம் நாம் வெளிப்படையாகக் காணலாம். அத்துடன், இந்த பரிணாம மாற்றங்களுக்கூடாகவே ''ஏதோ ஒன்று' இடையூறின்றி தொடர்ந்து இழைவதையும் நாம் அவதானிக்கலாம். இந்த 'ஏதோ ஒன்று' என்பது என்ன?

மு.பொ. அவர்களுக்கு ஒரு பாரம்பரியம் உண்டு. அவர் மு.த. அவர்களுக்கு சீடர். அவரது தொடர்ச்சி. தமது கருத்தியலை அவர் ஆன்மீக ஆத்மார்த்தம் என அழைக்கின்றார்.

ஆன்மீக ஆத்மார்த்தம் என்பது கீழைத்தேயங்களில் கீழைத்தேயங்களுக்கேயுரிய சிறப்பியல்புகளோடு பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து வாழ்ந்து கொண்டேயிருக்கின்றது. இன்னும் வாழும்! நமது (இந்திய உபகண்ட) கலை, இலக்கியத் துறைக்கு ஏறத்தாழ ஐம்பதுகளில் மார்க்சியம் பக்கெட்டுகளில் அடைக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டது. இதன் காரணமாக ஆன்மீக ஆத்மார்த்தம் புறந்தள்ளப்படும் போக்கு தோன்றுகின்றது. அது மார்க்சீயத்தின் கோளாறு அல்ல. உண்மையில் மார்க்சீயம் எதையும் விஞ்ஞான பூர்வமாக அணுகி உள்வாங்கவே முயலும், அது மார்க்சீயர்கள்'என தம்மை அழைத்துக்கொண்டவர்களது கட்டுப்பெட்டித்தனங்களினால் தோன்றிய ஒரு தற்காலிகமான பின்னடைவாகும். அதன் பயனாக நாம் சமன்பாடுகளினுள்ளும், சூத்திரங்களினுள்ளும், கோஷங்களினுள்ளும் அகப்பட்டுக் கொண்டோம். மார்க்சியத்துக்கு கீழைத்தேயத்தின் பங்களிப்பாக ஆன்மீக ஆத்மார்த்தத்தை வழங்குவதற்கான ஒரு முனைப்பு பிறகு தோன்றியது. பழமைவாதிகளான மரபுசார்ந்த (வசதியான உதாரணமாக நாவலரைக் கொள்வோமாயின்) இலக்கியவாதிகளிடமிருந்து, நவீன இலக்கியவாதிகளுக்கு ஆன்மீக ஆத்மார்த்தத்தை கைமாற்றுவதற்கான செயற்பாடுகள் தோன்றின. அழகியல் அம்சங்களை வளர்த்தல் என இச்செயற்பாடுகள் பொதுவாக அடையாளப்படுத்தப்பட்டன. ஈழத்தில் இச்செயற்பாடுகளை வளர்த்தெடுத்த, முக்கியமானவர்களில் ஒருவரான மு.தளையசிங்கம் அவர்களை நாம் கருதலாம். அவர் உருவாக்கிய பாரம்பரியம் மு.பொ. வினால் தொடரப்படுகின்றது. இத்தொடர்ச்சி சு.வி. போன்றோரினூடாக நீண்டு செல்கின்றது. குறுகிய வட்டங்களை ஏற்படுத்தி நம்மை பாகுபடுத்துவதையும், குறுங்குழு மனோபாவத்தையும் எம்மால் தவிர்த்துக் கொள்ள இயலுமாயின், இன்று படைப்பிலக்கியத்தில் ஈடுபட்டுள்ள பலரிடம் இந்த பாரம்பரியம் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை உணரலாம். ஆனால் ஒட்டுமொத்தமாக மு.பொ., மு.த. ஆகியோரை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்பது இதன் பொருளல்ல. உதாரணமாக, தனிமனித விடுதலையை உறுதி செய்வதன் மூலம் மக்கள் குழுவொன்றின் விடுதலையை எய்தமுடியும் என்ற கருத்துடன் பலர் முரண்படவே செய்வர். ஆனால் தனிமனித விடுதலையை அவாவுதல் என்பது மக்கள் குழுவொன்றிலுள்ள மிகச் சிலருக்கு அவசியமானதொரு பயிற்சியாகும் என்பதுடன் பலர் உடன்பாடு கொள்ளக்கூடும்.

பக்கெட்டுக்களில் அடைக்கப்பட்ட மார்க்சியம் இறக்குமதி செய்யப்படுவதற்கு முன்னரே 'அமரத்துவம்' எய்திய புதுமைப்பித்தன் அதற்கு பின்னர் வருகின்ற சுந்தர ராமசாமி அவர் மேற்கொண்ட நீண்ட மௌனம் மௌனத்தின் பிற்பாடு அவரது எழுத்துக்களில் காணக்கிடைக்கின்ற முதிர்ச்சி, மேற்படி மார்க்சியம் பாவனைக்கு உதவாதது என்கின்ற உண்மை கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் எழுத ஆரம்பித்த ஜெயமோகன், உமா வரதராஜன் ஆகியோர், மேற்கூறிய பரிணாமங்களுக்கு தகுந்த இலக்கிய சாட்சியங்களாவர். இவர்கள் வசதியான உதாரணங்களாக சுட்டப்படுகின்றார்களேயொழிய, வரலாற்றின் தொடர்ச்சியை கண்டு கொள்ளாத அஞ்ஞானத்துடன் இங்கு குறிப்பிடப்படவில்லை.

மு.பொ.வின் அடையாளம் இவ்விடத்திலேயே தெளிவாகின்றது என நான் நம்புகின்றேன். 60 களிலிருந்து 90கள் வரை நீண்டுள்ள இக்காலப்பரப்பினுள் நம்பிக்கையுடன் உழைத்து வந்தது, அவரது அடையாளங்களில் முக்கியமானதொன்றாகும்.

'கடலும் கரையும்' வெளியீட்டு விழாவில் தலைமை தாங்கிய பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் 'மு.தளையசிங்கம் அவர்களுடன் எனக்கு கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும் தனது நம்பிக்கைகளுக்காக அவர் தன்னையே ஈந்தவர் என்பதில் எனக்கு இரண்டாவது கருத்து இல்லை' என நேர்மையுடன் கூறியதை இங்கு குறிப்பிட வேண்டும்.

'இவங்கள் வெறும் தேவார பாராயணக்காரங்கள்' என எள்ளி நிராகரிப்பதோ, 'மனுக்குலத்தை மீட்க வந்த மீட்பர்கள் என புகழ்ச்சிலுவையில் அறைந்து விடுவதோ எமக்கு பயன்தரப் போவதில்லை. உண்மையில் எமக்கு அவசியமானது யாதெனில், மு.த. பாரம்பரியம் பரிசீலிக்கப்பட வேண்டும், விஞ்ஞான பூர்வமாக ஆராயப்பட வேண்டும் என்பதுவே!


'கடலும் கரையும்' தொகுதியிலுள்ள கதைகளை ஒவ்வொன்றாக எடுத்து, இந்த வரி நன்று, அந்த முற்றுப்புள்ளி அபாரம், அந்த காற்புள்ளி தேவையில்லை' என நயத்தலுடன் எனக்கு உடன்பாடு இல்லை. சீரிய வாசகர்கள் ஒவ்வொருவரும் வாசிக்க விரும்பும் பல கதைகள் இதிலுள்ளன. யுகங்களை விழுங்கிய கணங்கள், வேட்டை, பயமக்கும் விஷம், அடையாளத்தின் இருப்பு எது? இருப்பின் அடையாளம் எது? என்பன என்னை மிகவும் கவர்ந்த கதைகள் என்று கூறுதல் மட்டும் இங்கு போதுமானது.

ஈழத்தில் உள்ள சிறுகதை எழுத்தாளர்களில், ஆத்மார்த்தத் தன்மை மேலோங்கி நிற்கும் சிறுகதை எழுத்தாளர்களாக மு.பொ. அவர்கள் குறிப்பிடுபவர்களுள் வயதில் இளைய-வராகவும், தொண்ணூறுகளில் எழுத ஆரம்பித்தவருமான திருக்கோவில் கவியுவனும் ஒருவர்.

கவியுவன் அவர்களது 'வாழ்தல் என்பது' என்னும் தொகுதியிலுள்ள கதைகள் யாவும் குறுகிய கால இடைவெளியில் எழுதப்பட்டவையாகும். இரண்டு ஆண்டுகளுக்குள் எழுதப்பட்ட பத்து கதைகள் இத்தொகுதியிலுள்ளன. இரண்டு ஆண்டுகளுக்குள் 10 கதைகளை (சராசரிக்கும் மேற்பட்ட கதைகள்) எழுதுவது என்பது உண்மையிலேயே வியப்பூட்டக் கூடிய ஒரு விடயமாகும்.

இந்தத் தொகுதியிலுள்ள முதலாவது கதையை சுதந்திர இலக்கிய விழாவின் சிறுகதைப் போட்டியில் நடுவராக பணியாற்றிய போது நான் வாசித்தேன். கவியுவனது எழுத்துக்களை தொடர்ந்து வாசிக்க வேண்டும் என்ற அவாவை அந்தக் கதை ஏற்படுத்தியது. 90களில் கிடைத்த முக்கியமான புதிய படைப்பாளியாக அவரை அது இனங்காட்டியது. அந்த நம்பிக்கையை இந்தத் தொகுதி மூலமாக கவியுவன் தக்க வைத்துக் கொண்டுள்ளார்.



கவியுவன் நிறைய எழுதுபவர், நிறைய எழுதுதலில் சாதகங்களும் உண்டு, பாதகங்களும் உண்டு. எழுதுவதற்கான வினைத்திறனும், தொழில் நுட்பமும் அதிகரிக்கும் அதேவேளையில் உள்மன யாத்திரை புரிவதற்கான கால அவகாசம் தரப்படாத காரணத்தினால் கதைகளில் வீரியம் குன்றிப்போவதற்கும் சாத்தியங்கள் உள்ளன. தொகுப்பிலுள்ள கடைசிக் கதையான காற்று கனக்கும் தீவு இந்தக் கூற்றை மெய்ப்பிக்கின்றது. தகுந்த கால அவகாசத்தை எடுத்து அந்தக் கதையை அவர் எழுதியிருப்பாரானால், உமா வரதராஜன் அவர்களது 'அரசனின் வருகை' யைப் போன்றதொரு வீரியமிக்க கதையாக அது வளர்ந்திருக்கக் கூடும்.

கவியுவனின் இருப்பு, அவரது உணர்திறனால் தீர்மானிக்கப்படுகிறது. தேர்ந்த கலைஞர்களிடம் காணப்படும் நுட்பமானதும், விபரிக்க கடினமானதுமான உணர்திறன், அவரிடமும் உள்ளது. செல்வந்தி, வாழ்தல் என்பது திரைகளுக்கு அப்பால் ஆகிய கதைகளில் அவரது உணர்திறனும், சித்திரிப்புத் திறனும் பளிச்சிடுவதைக் காணலாம். இந்தத் தொகுதியிலுள்ள முக்கியமான கதைகளும் அவைதாம். செவ்வந்தி கதை மூலம் குப்பிழான், ஐ.சண்முகன் என்கின்ற நாம் எல்லோரும் அனேகமாக மறந்து போய்விட்ட படைப்பாளியை அவர் எனக்கு ஞாபகமூட்டினார். 'திரைகளுக்கு அப்பால்' கதை மூலம் தி.ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்' நாவலை ஞாபகமூட்டினார். இவ்வாறு கூறுவதன் பொருள் குப்பிழான் ஐ.சண்முகனையும், தி.ஜானகிராமனையும் கவியுவன் பிரதி செய்கிறார் என்பதல்ல. குப்பிழான் ஐ.சண்முகனை அவர் அறிந்திருக்கவேயில்லை. திரு.ஜானகிராமனை அவர் அறிந்திருக்கவில்லை. ஆயின் இப்பண்புகள் அவரது கதைகளில் எவ்வாறு குடி புகுந்தன என்னும் கேள்வி எம்முன் எழுகின்றது.

ஆன்மீக, ஆத்மார்த்தமானது நமது கீழைத்தேய சமூகங்களில் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருவது, அது சாஸ்வதமானது. உணர்திறனுடைய கலைஞன் அதையே விரைவில் சென்றடைகிறான். கு.ஐ.ச., தி.ஜா. ஆகியோர் 'பக்கெட் மார்க்சியத்தை' பருகி அஜீரணத்தினால் வாந்தி எடுத்தவர்களல்ல. அவர்கள் எமது சமூகத்தின் மிக இயல்பான வெளிப்பாடுகள். அவர்களது எழுத்துக்களில் காணப்படும் பண்புகள் உண்மையானவை. மொழி ஆளுமையை பெற்றுக் கொண்டுள்ள எவருக்கும் தமது சொற்களின் மூலம் எமது சமூகத்தின் பண்புகளை வெளிக்கொணர முடியும். தன்னளவில் முயன்று கவியுவனும் அதையே செய்திருக்கின்றார்.

ஆவணப்படுத்தல் என்பது படைப்பிலக்கியங்களில் காணக்கிடக்கின்ற முக்கியமான ஒரு பண்பு. அவ்வகையில் இத்தொகுதியிலுள்ள மரணத்தின் தூது, உடைத்துப்போட்ட தெருவிளக்கு, வாழ்தல் என்பது ஆகிய கதைகள் தற்கால ஈழத்தமிழர்களின் அவல வாழ்வின் பல்வேறு முகங்களை ஆவணப்படுத்துவதை நாம் காணலாம். முக்கியமாக உடைத்துப் போட்ட தெருவிளக்கு என்னும் கதை தமிழ்த் தேசிய வாதம், மிதவாதிகளிடமிருந்து தீவிரவாதிகளிடம் கைமாற்றப்படுவதை நுட்பமாக பதிவு செய்கின்றது.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் தமது முன்னுரையில் ''கலைப்படைப்புகளின் முக்கியத்துவம் அவை தரும் மனித / சமூக தரிசனத்திலேயே தங்கியுள்ளது. வாழ்க்கையை தெரிந்து கொள்வதற்கு மாத்திரமல்லாது அதை விளங்கிக் கொள்வதற்கும் இலக்கியம்/ கலைப்படைப்பு உதவ வேண்டும்.


இந்த நிலை வரும் போது தான் 'கருத்துநிலை' (Idealogy) முக்கியமாகின்றது. கருத்துநிலை என்பது வாழ்க்கையை முழுமையாக பார்க்க உதவும் கருத்துக்கோல நிலைப்பாடு ஆகும். ஏற்பட்டுள்ள சிதறல்களுக்கு அப்பாலேயுள்ள, இந்தச் சிதறல்களின் இணைவுகள்/ பிணைவுகளினால் ஏற்படப் போகும் ஒரு புதிய முழுமை பற்றிய ஒரு தெளிவும் அவசியம். கவியுவனிடம் எதிர்ப்பார்ப்பது அந்தக் கருத்து நிலையின் தெளிவையேயாகும்.'' எனக் குறிப்பிடுகின்றார்.

எனது கருத்தின்படி கருத்து நிலையை எய்துவது என்பது சமூகத்தின் கூட்டுப் பொறுப்பாகும். அந்தக் கூட்டுப் பொறுப்பில் கவியுவன் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன், தனது வாசிப்புப் பரப்பளவின் எல்லைகளை விசாலித்துக் கொள்ள வேண்டும். படைப்பிலக்கியத்தை ஆக்குவதற்கு அது கோரும் கால அவகாசத்தை வழங்க வேண்டும் எனவும் விரும்புகின்றேன். அவ்வாறு அவர் செய்யத் தவறும் பட்சத்தில் ஒரு நல்ல படைப்பாளியை நாம் இழந்து விடுவோம். செ.யோகநாதன் போன்ற தகுந்த முன்னுதாரணங்கள் நமக்கு உண்டு!

**எஸ்.ரஞ்சகுமார்**

www.tamilarangam.net






# சத்தியமாக நம்புங்கள்!

கல்முனைக் கல்வி மாவட்டத்தில் சுமார் 10 வருடங்களாகக் கடமையாற்றிவரும் தொண்டர் ஆசிரியர்கள் இதுகாலவரை நிரந்தர சேவையில் சேர்த்துக் கொள்ளப்படாமல் இருப்பது மனிதாபிமானமற்ற விடயமாகும்.

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க 90-02-22ந்திகதி அரசாங்க வர்த்தமானி மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு 92ம் ஆண்டு வரை 12 தடவைகள் நேர்முகப்பரீட்சை நடாத்தி 92-06-01ல் குறிப்பிட்ட தொகையினருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. ஏனையோர் கல்வி அதிகாரிகளினதும் அரசியல்வாதிகளினதும் நடவடிக்கைகளினால் புறக்கணிக்கப்பட்டனர்.

இதனையிட்டு புறக்கணிக்கப்பட்ட ஒவ்வொரு தொண்டர் ஆசிரியர்களாலும் கல்விச் சேவை ஆணைக் குழுவுக்கு சத்தியக்கடதாசி மூலம் மேன்முறையீடு செய்யப்பட்டது. இதன் காரணமாக வடகிழக்கு மாகாணக் கல்வியமைச்சினால் மீண்டும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு நிரந்தர நியமனம் வழங்க 318 தொண்டர் ஆசிரியர்களின் பெயர்களை வடகிழக்கு மாகாணக் கல்வியமைச்சு கல்விச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு சிபாரிசு செய்துள்ளதாக மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் வகிமா/கஅ/.செய/79ம் இலக்க 93-02-23ந் திகதிய கடிதமூலம் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு தொண்டர் ஆசிரியருக்கும் அறிவித்துள்ளார். ஆனால் இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை.

இதனையிட்டு பல சந்தர்ப்பங்களில் அமைச்சர் அஷ்ரஃப் அவர்களைச் சந்தித்து நியமனம் பெற்றுத்தர ஆவனை செய்யுமாறு கோரினோம். நாங்கள் அமைச்சரைச் சந்தித்த போதெல்லாம் பல்வேறு வாக்குறுதிகளை அளித்துள்ளார்.

1. அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ் வித்தியாலயத்தில் வைத்து அமைச்சர் அஷ்ரஃப் பா.உவாக மாத்திரம் இருக்கும் போது சொன்னார். நிரந்தர நியமனம் பெறாத இறுதித் தொண்டர் ஆசிரியர் இருக்கும் வரை போராடுவேன் என்றார்.

2. அமைச்சராகிய பின் சம்மாந்துறை அல்மாஜான் மகளிர் கல்லூரியில் வைத்துச் சொன்னார். ''இந்த சந்திரிகா அம்மையாரின் அரசாங்கத்தில் உங்களுக்கு நியமனம் பெற்றுத் தராவிட்டால் எனது பதவியை ராஜினாமாச் செய்வேன்'' என்றார்.

3. அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய மகாவித்தியாலயத்தில் வைத்துச் சொன்னார் இறைவன் மீது சத்தியமாக என்னை நம்புங்கோ நிச்சயமாக நியமனம் பெற்றுத் தருவேன் என்றார்.

இவ்வாறு பல்வேறு கோணங்களில் எங்களுக்கு வாக்குறுதிகளை அளித்திருந்தும் அமைச்சர் அஷ்ரஃப் சாதாரண பா.உவாக இருக்கும் போது எடுத்த நடவடிக்கைகள் கூட தான் அமைச்சரான பின் எடுத்தாகத் தெரியவில்லை. ஆனால் அவருடைய உதவியாளர்கள் பத்திரிகைகளுக்கு மாத்திரம் அறிக்கைகளை விட்டு விட்டு இருக்கிறார்கள்.

எனவே சம்மந்தப்பட்டவர்கள் இனியாவது அவசரமாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க ஆவன செய்யுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

**எம்.ஏ. முகம்மது சனூன்**
*அக்கரைப்பற்று*

# பண்படுத்தாது!

நான் எண்பதாவது இதழிலிருந்து சரிநிகரைத் தொடராக வாசித்து வரும் வாசகன். இதழ் 113 வரவு பகுதியில் ''ஏறுவெயில்'' கவிதைகள் பற்றி எழுதப்பட்ட விடயமே என்னை இக்கடிதம் எழுதத் தூண்டியது. அது மிகக் கடுமையான விமர்சனம். கவிஞரை மழுங்கடிக்கும் நோக்கில் எழுதப்பட்டது போலுள்ளது. விமர்சனம் படைப்பாளிக்கு தூண்டுகோலாகும் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால்...?

சோலைக்கிளி அவர்களின் பாதிப்பு உள்ளதாகச் சொல்லப்படுகிறது. அப்படியே பார்த்து எழுதிவிட்டார் என்பது போன்றது எந்த வகையில் உண்மை?

தவறு மட்டும் காணும் விமர்சனம் படைப்பாளிகளை பாலைவனமாக்குமே தவிர பண்படுத்தாது. விமர்சிப்பவர் யார் என்பதிலும், விடயம் முக்கியமானதாக இருக்க வேண்டும் என சரிநிகரிடம் வேண்டுகின்றேன்.

'சரிநிகர் சமானமாக வாழ்மிந்த நாட்டிலே' -பாரதியின் நல்ல நோக்குடன் வெளிவருகிறது சரிநிகர். முதன் முதலில் எண்பதாவது பத்திரிகையை கையில் எடுக்கும் போது கோரமான படத்தைப் பார்த்தே எடுத்தேன். அது பார்வைக்கு கோரம். ஆனால் பத்திரிகை அது வேண்டாம் என வலியுறுத்தியது. அதனால் தொடர்ந்து வாசிக்கின்றேன்.

குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே தொடர் மிகவும் நல்ல எதிர்கால சந்ததியை உருவாக்க வழிவகுப்பது. எனது மகளை வளர்க்கவும் நிறைய கற்றுக் கொண்டேன். 21வது தொடரில் பெற்றோர்களை அடிக்கலாமா? இதை வாசித்தவுடன் இது விடயமாகவும் என்னில் திருத்தம் கண்டேன். இன்னும் எல்லா மனிதரும் திருந்த நல்ல விடயங்களுடன் தொடரவென வாழ்த்துகிறேன்.

**க. ரவீந்திரன்**
*பூந்தோட்டம்*

# வாபஸ்

பொதுஜன ஐக்கிய முன்னணி மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு தொகுதிகளின் மூன்று அமைப்பாளர்களை வாபஸ் பெற்றுள்ளதாக தெரியவருகின்றது. அதாவது குறிப்பிட்ட அமைப்பாளர்களுக்கு இனிமேல் அமைப்பாளர் அந்தஸ்து வழங்கப்பட மாட்டாது எனத் தெரியவருகின்றது. இந்த வாபஸ் பெறப்பட்டுள்ள அமைப்பாளர்களுள் கற்குடாத் தொகுதியின் இரண்டு அமைப்பாளர்களும், ஏறாவூர் பகுதியின் ஒரு அமைப்பாளரும் உள்ளடங்குவர். பொ.ஐ.முன்னணியின் கற்குடா அமைப்பாளர்கள் சம்பந்தமாக ஏற்கனவே கட்சியின் தலைமைப்பீடத்திற்கு பலத்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பல நியமனங்களுக்கு பெருமளவு நிதியினையும் பெற்றுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

5→

# இனப்பிரச்சினை...

**முஸ்லிம்களுக்கான அம்பாறை மாவட்டத்தை மையப்படுத்திய தனிமாகாணக் கோரிக்கையால் அம்பாறை மாவட்டத்திற்கு வெளியில் வாழும் தமிழ் மக்களை விட அம்பாறை மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்கள் அதிக அச்சம் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. இவர்களுக்கு நீங்கள் வழங்கும் உத்தரவாதம் என்ன?**

இக்கேள்விக்கு நான் இப்படித்தான் பதிலளிக்க முடியும். அம்பாறை மாவட்டத்திற்கு வெளியில் வாழும் லட்சக்கணக்கான முஸ்லிம்களுக்குத்தான் இவர்களை விட அதிக அச்சம் இருக்கும். லட்சக்கணக்கான முஸ்லிம்கள் அம்பாறைக்கு வெளியே இணைந்த வடகிழக்கு மாகாணத்தினுள் வாழப்போகிறார்கள். இதுவரை புலிகளும் ஏனைய தமிழ் அமைப்புகளும் முஸ்லிம்களைக் கொன்றிருக்கிறார்கள். ஆகவே இதில் தமிழ் மக்களுக்கு மட்டும்தான் அச்சமுள்ளது எனச் சொல்ல முடியாது! எனவே அம்பாறைக்கு வெளியே வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு என்ன உத்தரவாதம், பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்கப்படுகிறதோ அதே அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கும் வழங்கப்படும்.

**வடக்கு கிழக்கில் முஸ்லிம்கள் மீது புலிகளின் பல கசப்பான சம்பவங்கள் நடந்த பின்னும் கூட, நீங்கள் பாராளுமன்றத்திலும், பாராளுமன்றத்திற்கு வெளியேயும் புலிகளுடன் பேசவேண்டும் என்பதில் உறுதியான கருத்தை வெளிப்படுத்துகிறீர்கள். இதற்கான காரணம் என்ன?**

நான் புலிகளின் ஆதரவாளன் அல்ல. ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்தி - சமூக உறவுகளை மேற்கொள்ள வேண்டுமெனில் புலிகளின் ஆதரவுடன் தான் மேற்கொள்ள வேண்டும். அரசியல் தீர்வொன்று காணப்படல் வேண்டுமென்றால் விடுதலைப் புலிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். இந்த யுத்தத்தில் ஒரு நாளும் அரசாங்கமும் வெற்றி பெற முடியாது. விடுதலைப் புலிகளும் வெற்றி பெற முடியாது. இன்னும் பத்து வருடங்கள் போனாலும் இந்த அரசாங்கத்தால் விடுதலைப் புலிகளை வெற்றி கொள்ளவே முடியாது! அவர்கள் மக்களுடன் வியாபித்து நிற்கிறார்கள்.



> ‘இந்த யுத்தத்தில் ஒரு நாளும் அரசு வெற்றி பெற முடியாது. விடுதலைப் புலிகளும் வெற்றி பெற முடியாது. இன்னும் பத்து வருடங்கள் போனாலும் இந்த அரசாங்கத்தால் விடுதலைப் புலிகளை வெற்றி கொள்ளவே முடியாது.’

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே பிரச்சினை என்றால் அது அவர்களின் தன்மானப் பிரச்சினை. ஆனால் இந்த விடயத்தில் தன்மானப் பிரச்சினைக்கே இடமில்லை, நான் ஜனாதிபதியிடமும், பாராளுமன்றத்திலும் அல்லது எங்கேயும் சொல்வது இதுதான். விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டும். பிரச்சினையை நீடிக்க முடியாது! முதலில் ஜே.ஆர்., பின்னர் பிரேமதாச, விஜயதுங்க, சந்திரிகா, சந்திரிகாவுக்குப் பின் இன்னொரு சந்திரிகாவா? அயர்லாந்தில் 80 வருடகாலமாக உள்நாட்டு யுத்தம் நடக்கிறது. ஆனால் அங்கு மக்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பலமாக இருக்கிறார்கள். இங்கு அப்படி இல்லையே.

***தமிழ் முஸ்லிம் ஐக்கியத்தை முஸ்லிம்கள் தரப்பில் வலியுறுத்தும் நீங்கள் தமிழ் கட்சிகள், விடுதலைப் புலிகளிடமிருந்து ஏதாவது சமிக்ஞைகளைக் காண்கிறீர்களா?***

நான் தமிழ் கட்சிகளுடன் பேசியுமிருக்கிறேன். அவர்களின் முழு ஆதரவும் உண்டு. அதே மாதிரித்தான் புலிகளும். நான் அண்மையில் ஒரு பொதுக்கூட்டத்தில் பகிரங்க வேண்டுகோள் விடுத்தேன். நீங்கள் மின்மாற்றிகளைத் தகர்த்து வருகிறீர்கள். நோன்பு காலம் வருகிறது. முஸ்லிம்கள் மின்சாரம் இல்லாமல் நோன்பு காலத்தில் மிகவும் கஷ்டமுறுகின்றனர். ஏன் நீங்கள் முஸ்லிம்களுக்கு நம்பிக்கைத் தரக்கூடிய வகையில் நடக்கக் கூடாது எனப் பகிரங்கமாகக் கோரினேன். அடுத்த நாள் காலையிலேயே செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக எனக்கு விடுதலைப் புலிகளிடமிருந்து தகவல் வந்தது. நாங்கள் முழு ஆதரவு தருகிறோம். உடனடியாக மின்சார சபையை அனுப்பி திருத்தி விடுங்கள் என்று. இப்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் மின்சாரம் இருக்கிறது. விடுதலைப் புலிகள் இப்படி மனம் மாறி செயற்படுவதினால் முஸ்லிம்களுக்கு தமிழ் மக்களின் பால் அன்பு ஏற்படுகிறது. இதன் ஊடாகத்தான் ஐக்கியத்தை வளர்க்க முடியும். முதலில் நாங்கள் நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும்.

***தீகவாபி விவகாரம் தொடர்பாக கூற முடியுமா?***

உண்மையில் இப்பிரச்சினை அரசியல் ரீதியாக பிரச்சாரப்படுத்தப்பட்டது துரதிருஷ்டவசமானது. அன்று ஆட்சியில் இருந்தவர்கள் முஸ்லிம்களுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை சுவீகரித்தார்கள். அவர்களுக்கு மாற்றுக்காணிகள் ஒரு ஏக்கர் கூட வழங்கப்படவில்லை. தீகவாபிக்கு அப்பால் உள்ள காணிகளை நாம் வழங்குவதற்கு எடுத்த நடவடிக்கைகள் அரசியல் ரீதியாக பார்க்கப்பட்டதினால் அதனை நாங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளோம்.

**இந் நேர்காணலில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் ஹிஸ்புல்லா அவர்களின் தனிப்பட்ட கருத்துக்களே யன்றி முஸ்லிம் காங்கிரஸினது அல்ல.**

**சந்திப்பு: எம்.பௌஸர்**

# தேவை...

காங்கிரஸை அங்கீகரித்துக் கொள்வதுடன், எதிர்காலத்தில் ஏற்படுத்த வேண்டியதென்று கருதும் விடயம் பற்றியும் கலந்தாலோசிப்பது கட்டாயமானதென்ற முடிவையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஓரம் கட்டிவிட்டு ஏற்படுத்தும் எதுவும் நிரந்தரம் அற்றதாகவே அமையும் என்னும் உண்மைகளையுமே.

உண்மையில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் ஐக்கியம் நிலவ வேண்டும் என்பது பற்றி மனத்தூய்மையுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இருக்கின்றனர்களா? என்பது ஒரு விஷயம். குறைந்த பட்சம் ஐக்கியத்தை அடித்தளமாக இட்டு துரை அவர்களால் அனுப்பிய மடல் கூட மன விரோத வெளிப்பாட்டையே கொண்டிருக்கின்றன என்பது இன்னொரு விஷயமாகும்.

எது எப்படி இருப்பினும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் நல்லிணக்கம் பேணப்பட அறிவுபூர்வமான நடவடிக்கைகளில் தமிழீழ விடுதலைப் புலிகளும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஈடுபடல் வேண்டும் என்பதே இன்றைய அவாவாகும்.

எனவே, தோல்வி கண்ட சித்தாந்த முறைகளை கைவிட்டு விட்டு, வெற்றிகளைப் பெறக்கூடிய கூர்மையான புத்திகளின் வழியில் தமிழ், முஸ்லிம் மக்களின் ஐக்கியத்தை வளர்ப்போம்! வளமான வாழ்விற்கு வழி சமைப்போம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA.

## இரு வாரங்களில்

**ஜன.18**

23 தமிழர்கள் படகொன்றின் மூலம் அகதிகளாக தமிழ்நாடு-தனுஷ்கோடியை அடைந்தனர்.

**ஜன.20**

-வாழைச்சேனை-கல்குடா வீதியில் ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் தாக்கியதில் 8 படையினர் பலி. ஒரு படையினன் காயம்.

-மட்டு-கிரான் வீதியில் ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் தாக்கியதில் ஒரு படையினன் பலி. ஒரு படையினன் காயம்.

-தொழிலாளர்களின் நியாயம் கேட்கச் சென்ற தோட்டக் கமிட்டித் தலைவர்களை நிர்வாகம் துர்வார்த்தைகளால் அவமதித்ததைத் தொடர்ந்து கந்தப்பளை டிவிஷனைச் சேர்ந்த 800 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்.

-கச்சத்தீவை அண்டிய கடற் பகுதியில் சென்ற இந்திய மீனவர்களின் ரோலர் படகு சுடப்பட்டதில் ஒரு இந்தியர் கடும் காயங்களுக்குள்ளானார்.

-வவுனியா-கொக்குவில் சந்தியில் மோட்டார் சைக்கிளில் வந்த படையினர் மீது புலிகள் தாக்கியதில் இரு படையினர் பலி.

-வரணியில் பாதுகாப்பு முன்னரங்கம் மீதான புலிகளின் தாக்குதலில் ஒரு படையினன் பலி.

**ஜன.21**

-விமானப் படைக்குச் சொந்தமான "கபீர்" குண்டு வீச்சு விமானம் நீர்கொழும்பு வாவியில் விழுந்து நொருங்கியது. விமான ஓட்டி பரசூட் மூலம் தப்பினார்.

-பன்வில தோட்டங்களில் தொடர்ந்த வேலை நிறுத்தம் முடிவுற்றது. எனினும் ஹாலகல தோட்டத்தைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்தும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அதிகாரிகள்-தொழிலாளர்களுக்கிடையில் நடந்த பிரச்சினையின் போது 22 தொழிலாளர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இவ் வேலை நிறுத்தம் செய்யப்பட்டது.

-மட்டு ஓட்டமாவடியில் இரவு கிரனைட் வீசப்பட்டதில் வீடொன்றின் மீது விழுந்து திரேசா (வயது-8) எனும் சிறுமியும், கே.ரபீகா (வயது-28) எனும் ஒரு யுவதியும் படுகாயம்.

-வாழைச்சேனையில்-பொலிஸ் காவலரணிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதில் மேனகா (வயது31) எனும் தாயும் ஏ.துர்ஜானி (வயது-9) எனும் மகளும் படுகாயம்.

**ஜன.22**

கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மூன்று அரசியற் கைதிகள் விசாரணை அல்லது விடுதலை கோரி சாகும் வரை உண்ணாவிரதத்தை தொடக்கினர்.

**ஜன.23**

-கம்யூனிஸ்ட் கட்சியின் தவிசாளர் பீட்டர் கெனமன் தனது 79ஆவது வயதில் காலமானார்.

-யாழ்ப்பாணத்தில் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இரு பொதுமக்கள் பலி.

**ஜன.24**

-மட்டக்களப்பு வெலிகந்தையருகில் விமானப் படையின் போர் விமானமொன்று புலிகளால் சேதப்படுத்தப்பட்டது.

-திருமலை-சிறிமங்களபுரவில் புலி-படையினர் மோதலில் 5 படையினர் பலி.

-தமிழ் சேவை வர்த்தக ஒலிபரப்பு பதினாறரை மணித்தியாலத்திலிருந்து பன்னிரெண்டு மணித்தியாலங்களாகக் குறைப்பு.

-மட்டு-கல்லாறில் இராணுவம்-புலிகள் மோதலில் 5 படையினர் பலி.

**ஜன.26**

சாவகச்சேரி மீசாலையில் ரோந்து சென்ற படையினர் கண்ணி வெடியில் சிக்கி 2 படையினர் பலி. ஒரு படையினன் காயம்.

-அம்பாறை-சலம்பைகுளத்தில் படையினர்-புலி மோதலில் ஒரு படையினன் பலி.

-பொலன்னறுவை தன்னிச்சையில் உழவு இயந்திரமொன்று கண்ணி வெடியில் சிக்கியதில் இரு படையினர் பலி. ஒரு பொதுமகனும் பலி.

-சிங்கள ஆணைக்குழு விசாரணை கண்டியில் ஆரம்பம். முதலாவது சாட்சியத்தை தலதா மாளிகையின் தியவடன நிலமே நெரஞ்சன் விஜயரத்ன அளித்தார்.

**ஜன.27**

-நீர்கொழும்பில் சிங்கள-முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் 31 வீடுகள் சேதம் 8 பேர் படுகாயம்.

-வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளிலுள்ள 234 உள்ளூராட்சி சபைகள் தேர்தலுக்காக கலைக்கப்பட்டன.

-மாதுறு ஓயாவில் இராணுவ வாகனம் கண்ணி வெடியில் சிக்கி ஒரு படையினன் பலி. மூவர் காயம்.

**ஜன.28**

-மட்டு-மாவடிவேம்வில் புலிகளின் தாக்குதலால் இரு படையினர் பலி. இர படையினர் காயம்.

**ஜன.29**

-களுத்துறை சிறைச்சாலையில் விடுதலை கோரி 150 தமிழ் அரசியல் கைதிகள் சுழற்சி முறையில் உண்ணாவிரதத்தை அரம்பித்தனர்.

**ஜன.30**

-காரைநகர் இறங்குதுறையில் புலி-படையினர் மோதலில் 3 படையினர் பலி.

-83 தமிழ் அகதிகள் (30 குடும்பங்கள்) தனுஷ்டிகோயை அடைந்தனர்.

**ஜன.31**

வவுனியாவிலிருந்து மன்னாருக்கு படையினரை ஏற்றிச் சென்ற எம்.ஐ-17 ரக உலங்கு வானூர்தி புலிகளின் தாக்குதலால் சேதம்.

-கொழும்பு-கங்காராம, வீதிச் சோதனையின் போது பெண் புலியொருவர் சயனைட் அருந்தி தற்கொலை.

-யாழ்-பொன்னாலையில் கிரனைட் வெடிச்சத்தமொன்றைத் தொடர்ந்து பீதியடைந்த படையினர் பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 9 பொதுமக்கள் பலி.

**பெப்.1**

கிளிநொச்சியில் புலி-படையினர் மோதலில் 3 படையினர் பலி.

**பெப்.2**

-மாவடிவேம்பு இராணுவ முகாம் மீதான தாக்குதலில் 13 இராணுவத்தினர், 3 பொது மக்கள் பலி. 12 படையினர் 11 பொது மக்கள் படுகாயம்.

-வடக்கில்-வெற்றிலைக்கேணி காவலரண் மீதான புலிகளின் தாக்குதலில் 10 படையினர் பலி. 4 படையினர் காயம்.

-செங்கலடியில் இராணுவ ஷெல் வீச்சுக்கு இரு பொது மக்கள் பலி. 9 பொது மக்கள் காயம்.

-வெற்றிலைக்கேணி இராணுவ முகாம் மீதான புலிகளின் தாக்குதலில் 25 படையினர் பலி. 4 படையினர் காயம். புலிகள் தரப்பிலும் சேதம்.

# பொன்னாலைக் கொலை!

கடந்த மாதம் 31ம் திகதி சந்திரிகாவின் சமாதான இராணுவம் பொன்னாலையில் வைத்து ஒன்பது அப்பாவிப் பொதுமக்களை சுட்டுக் கொன்று சமாதானத்திற்கான யுத்தத்தை வெளிப்படுத்தி இருக்கின்றது. இவ் ஒன்பது பொதுமக்களையும் சுட்டுக்கொன்ற செய்தியை உலகுக்கு மறைக்க முடியாத காரணத்தினால் அரசும், அதன் வெகுசன தொடர்பு சாதனங்களும் புலிகள் வைத்த கண்ணி வெடியால் அம் மக்கள் கொல்லப்பட்டதாக பொய்ப் பிரச்சாரம் செய்து வருகிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிடைக்கும் ஊர்ஜிதமான செய்தியின் அடிப்படையில் இவ் ஒன்பது அப்பாவி மக்களையும் இராணுவத்தினர் கண்மூடித்தனமாக சுட்டுக் கொன்றுள்ளதாக தெரிகிறது. மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுவரும் இவர்களை - இராணுவம் தொழிலுக்கு செல்லாது தடுத்து திரும்பிச் செல்லுமாறு கூறி திருப்பி அனுப்பிய போது கிரனைட் வெடிச்சத்தம் ஒன்று கேட்டதாகவும் அதன் பின் இராணுவத்தினர் சரமாரியாக துப்பாக்கி பிரயோகம் செய்ததன் மூலம் இம் மக்கள் பலியாகியுள்ளதாகவும் தெரியவருகிறது. அருகில் வசித்து வந்த மக்களும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் படுகொலையில் கொல்லப்பட்டவர்கள் விபரம் வருமாறு:-

01. சின்னப் பொடியன் செல்வன் -60
02. நாகமுத்து நகுலேஸ்வரன் -15
03. இரத்தினம் சரஸ்வதி - 45
04. சற்குணராசா புவனேஸ்வரி - 20
05. வைரவன் ஆனந்த மூர்த்தி - 30
06. வைரவன் சாந்தி -28
07. சின்னவன் சண்முகம் -65
08. சின்னவன் லக்ஷ்மி - 60
09. ராகவன் புவனேந்திரன் - 20

ஆனந்தி வசந்தா, பெருமாள் மலர், பாலையா ஆகியோர் இச்சம்பவத்தின் போது காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் அனைத்தையும் இழந்து அச்சத்துடன் வாழும் மக்கள் மீது அரசின் இராணுவம் இது போன்ற கொடூரப்படுகொலைகளை கட்டவிழ்த்து விடுவது ஒன்றும் ஆச்சரியமல்ல, ஆனால் இராணுவக் கட்டுப்பாடு பிரதேசத்தினுள் தமிழ் மக்களுக்கு உரிமைகள் பெற்றுத் தருவதாக, தரப்போவதாக வடக்குக்கு தங்களது பரிவாரங்களுடன் கூடாரமடிக்கும் தமிழ்க் கட்சிகள் இப்படுகொலைகளுக்கு சொல்லப்போகும் பதில்தான் என்ன?

*- அம்ரிதா*

# நீர்கொழும்பு: மோதலும், முடிவும்!

நீர்கொழும்பு 'போரதொட்டப்' பகுதியில் இருசாராரிடையே ஏற்பட்ட சிறுசண்டை ஒரு சிறு கலவரத்தையே நடத்தி முடித்திருக்கிறது. மீனவக் (தமிழ் பேசினாலும் தங்களை சிங்களவர்கள் என்று அடையாளப்படுத்துகின்ற) கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லிம்கள் சிலருக்கும் இடையே இடம்பெற்ற இம்மோதல் சிங்கள - முஸ்லிம் இனமோதலாக வெடித்துவிடும் அபாய நிலைக்கும் உட்பட்டிருந்தது. எனினும் அரசு மேற்கொண்ட பலத்த பாதுகாப்பின் காரணமாக இது தணிக்கப்பட்டிருக்கிறது.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு 'சரிநிகர்' சென்றிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக அப்பிரதேசவாசகளுடன் உரையாடியதில் இருந்து அறியமுடிவதாவது.

ஓட்டோவில் வந்த இரு முஸ்லிம்களை குடிபோதையில் வந்த இருவர் தங்களை மோதப்பார்த்தார்கள் என்று தாக்கியுள்ளனர். ஓட்டோ சாரதி அருகிருந்த பள்ளிவாசலுக்குச் சென்று அங்கிருந்த முஸ்லிம்களிடம் இச்சம்பவத்தைக் கூற அவர்கள் உடனே புறப்பட்டு வந்து மோதலில் ஈடுபட்டுள்ளனர். இரு கோஷ்டியாக மோதி பிரிந்து சென்ற பின்னர் அதிகாலை வேளையில் வீடுகள் எரிக்கப்பட்டு நாசமாக்கப்பட்டுள்ளன.

இந்த வீடுகள் எரிப்பில் யார் முதலில் ஈடுபட்டார்கள் என்பதில் ஒவ்வொருவரும் மற்றவர்களைக் குற்றம் சுமத்துகின்றனர். போத்தலில் பெற்றோல் நிரப்பி எறிந்து முஸ்லிம்கள்தான் வீடுகளைப் பற்ற வைத்தார்கள் என அவர்களும், அவர்கள் தான் கடலுக்குப் போகிறவர்கள் அவர்களிடம் தான் பெற்றோல் நிறைய உண்டு அவர்கள்தான் எறிந்தார்கள் என இவர்களும் மாறிமாறிச் சொல்கின்றனர்.

மீனவர்களது குடிசைகள் நாற்பதளவிலும் முஸ்லிம்களின் வீடுகள் பத்து அளவிலும் முற்றாக எறிந்து நாசமாகியுள்ளன.

இருதரப்பிலும் பாதிக்கப்பட்டவர்கள் கிறிஸ்தவ ஆலயத்திலும், பள்ளிவாசலுக்கு முன்னாலுள்ள வீடொன்றிலும் தஞ்சமாகியுள்ளனர்.

முதல்நாள் ஏற்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இரு குழுவினரையும் சமாதானப் படுத்திவிட்டு பொலிஸார் சென்றதும் மீண்டும் வீடுகளை எரித்து கலவரத்தைத் தூண்டியுள்ளனர் இரு தரப்பினரும்.

இதற்கிடையில் இச்சம்பவச்செய்தி நாடெங்கும் சிங்கள - முஸ்லிம் மோதலாகப்பரவி பதற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. அத்துடன் இதற்கு பொலிஸாரின் கவனயீனமே காரணம் எனவும் சொல்லப்பட்டதால் மேலதிக அவசர நடவடிக்கைகளை அரசு எடுத்தது. இதன்படி கணிசமான எண்ணிக்கையிலான படையினர் (தீயணைப்பு பிரிவும்) நீர்கொழும்பெங்கும் கடமையிலீடுபடுத்தப்பட்டனர். அமைச்சர்கள், எம்பிக்கள் ஆகியோரும் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு இரு தரப்பிலும் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சி மேற்கொண்டனர்.

பிரதியமைச்சர்கள் மஹிந்த விஜேசேகர, ஹிஸ்புல்லாஹ் ஆகியோரும், நஜீப் அப்துல் மஜீத், அசித பெரேரா போன்ற எம். பிக்களும் அரச பிரதிநிதிகளும் அங்கு சமூகமளித்து நிலைமைகளைக் கண்டறிந்து சமாதான முயற்சிகளில் ஈடுபட்டனர்.

இந்தக் கலவரங்களுக்கிடையே மீனவக் குடும்பங்கள் வசிக்கிற காணி பற்றிய பழைய பிரச்சினையும் கிளப்பப்படுகிறது. ''இக்காணி முன்னர் முஸ்லிம்களுக்குச் சொந்தமானதாகத்தான் இருந்தது. நாங்கள் ஆயிரம், ஐநூறு கொடுத்து இதில் குடியமர்ந்தோம். இப்ப காணிக்காரரின் மகன் இங்கால உள்ள சிங்களவர்களையெல்லாம் எழுப்புறதுக்குத்தான் இப்படிப் பிரச்சினை எடுக்கிறார்.'' என ஒருவர் கூறினார். ஆனால் முஸ்லிம் தரப்பு இதற்கு மறுப்புக் கூறுகிறது. 'நோன்பு காலத்தில் இதெல்லாம் எங்களுக்குத் தேவையா... பெருநாள் வருது. வீடெல்லாம் நாசமாயிட்டுது. இவங்க அப்படி சொல்லி எங்கள மாட்டுறாங்க. அவங்க வீட்டுல ஒன்னுமேயில்ல. எங்களுக்குத்தான் நஷ்டம்.'' என்று பெறுமதியான கல்வீட்டை இழந்த ஒரு பெண்மணி கூறினார்.

இக்கலவரத்தை சில தீய சக்திகள் பெரும் கலவரமாக்க முயற்சிகள் எடுத்துள்ளன. கொழும்பிலிருந்தும், மற்றும் பல இடங்கலிருந்தும் 1500 பேர்வரையான முஸ்லிம்கள் வருகிறார்களாம் என பொய்யான வதந்தி பரப்பப்பட்டுள்ளது. இதனால் அச்சமடைந்து அங்குமிங்கும் ஓடியதாக மீனவக் குடும்பத்தவர்கள் குறிப்பிட்டார்கள். இது போன்றே ஏனைய பிரதேச மீனவர்கள் படகில் வந்து முஸ்லிம்களின் வீடுகளைப் பற்ற வைத்து விட்டுச் சென்றதாக முஸ்லிம்கள் கூறுகின்றனர். இதை இப்பிரதேசவாசிகள் மறுக்கின்றனர். மொத்தத்தில் இக்கலவரம் தொடர்பாக ஒருவரையொருவர் குற்றம்சாட்டுகிறதும் தங்களை மூடிமறைக்கிறதுமான போக்கே நிலவுகிறது.

எப்பக்க நியாய அநியாயங்களுக்கப்பாலும் இக்கலவரம் பரவவிடாமல் தடுக்கப்பட்டது பெரிய விடயம் என்றே கூறலாம். எனினும் ஆரம்பத்திலேயே பொலிஸார் உஷார் நிலையில் இருந்திருந்தால் இந்தளவு சேதம் ஏற்பட்டிருக்காது என பலர் அபிப்பிராயப்படுகின்றனர். பொலிஸார் இருக்கும் போதே தங்கள் வீடுகள் தீவைக்கப்பட்டதாக முஸ்லிம் பெண்கள் கூறினார்கள். இதுபற்றி அமைச்சர்களிடமும் முறையிடப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் ஏற்பாடுகளை அமைச்சு எடுத்திருப்பதாக புனர்வாழ்வு, புனர்நிர்மாண பிரதியமைச்சர் மஹிந்த விஜேசேகர கூறினார். முஸ்லிம்களை இந்நோன்பு மாதத்தில் அமைதி பேணும்படியும் வீணாண கலவரங்களுக்குள் தங்களை ஈடுபடுத்தாதிருக்கும்படியும் மீண்டும் ஒற்றுமையாக வாழும்படியும் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் முஸ்லிம்களைக் கேட்டுக் கொண்டார்.

அமைச்சர்கள் முன்னிலையில் இருதரப்பிலும் சமாதானத்துக்கான முஸ்தீபுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து தற்போது அப்பிரதேசத்தில் அமைதி நிலவுவதாக அறிய முடிகிறது. எனினும் பாதுகாப்புப் படையினர் தொடர்ந்தும் சேவையீலிடுபடுத்தப்பட்டுள்ளனர்.

புத்தக வெளியீடு

**முஸ்லிம் தேசமும் எதிர்காலமும்**

நூல் அறிமுகமும் கலந்துரையாடலும்

பெப்.12.1997

மாலை 4.30க்கு

இடம்

அக்கரைப்பற்று ஆண்கள் வித்தியாலய மண்டபம்

மூன்றாவது மனிதன் வெளியீடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்